உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 3 வியாழக்கிழமை (17.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 111



02 ஆஸியின் வெற்றி தொடர்கிறது



03 விளையாடுகிறார் அசோக டி சில்வா



24 விஜய் தீவிரவாதி அல்ல



31 தமிழீழத்தின் முதல் தூதரகம் தென் சூடானில்

# போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய நவிப்பிள்ளை விரைவில் வருகிறார்

## நெருக்கடிகளைச் சமாளிக்க இலங்கை அரசு நடவடிக்கை

ஜெனிவா, மார்ச் 17

**இலங்கையில் நடந்த போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கைக்கு வந்து நேரில் ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தலைவர் நவிப் பிள்ளையை அனுமதிப்பது என்று இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. விரைவில் அவர் கொழும்பு வரவுள்ளார்.**

இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் அனைத்துலக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து வலுத்து வரும் நிலையில் இலங்கை அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது. நெருக்கடிகளைச் சமாளிக்கும் நோக்குடன் அது இந்த நகர்வை மேற்கொண்டுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

போர்க் குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணையை வலியுறுத்துவதற்குப் பதிலாக உள்நாட்டில் இடம்பெற்று வரும் விசாரணைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபை அக்கறை செலுத்த வேண்டும் என்றும் இலங்கை கேட்டுள்ளது.

(29 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தரப் பெறுபேறுகளில் வேம்படி, யாழ்.இந்து முன்னிலை

யாழ்ப்பாணம், மார்ச்.17

ஜீ.சி.ஈ சாதாரணப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. நேற்றைய தினமே பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைத்தளத்திலும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் பரீட்சைப் பெறுபேறுகளில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்னிலையில் உள்ளது. இரண்டாவது இடத்தில் யாழ்.இந்துக் கல்லூரி உள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 11 மாணவிகள் 9 ஏ சித்தியும், 40 மாணவிகள் 8 ஏ சித்தியும், 26 மாணவிகள் 7 ஏ சித்தியும், 30 மாணவிகள் 6 ஏ சித்தியும் பெற்றுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார். (29 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் அத்துமீறலால் கடலில் மோதல் ஏற்படும் அபாயம்

### வடக்கு மீனவர் இந்தியத் தூதரிடம் மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் அத்துமீறி மீன்பிடிப்பதனால் இரு நாட்டு மீனவர்களிடையே தவிர்க்க முடியாதவாறு மோதல் ஏற்படுகிறது. இதனால் இரு நாட்டு மீனவர்களிடையே கசப்புணர்வு அதிகரித்து வேண்டத்தகாத சம்பவங்கள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன.

(32 ஆம் பக்கம் பார்க்க)

## அலிசாஹிர் மௌலானா நேற்றுத் தாக்கப்பட்டார்

மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பு ஏறாவூர் நகரசபைக்கு ஐ.ம.சு. முன்னணி சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார் என ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயகுமார புத்தல நேற்றுத் தெரிவித்தார். (29ஆம் பக்கம் பார்க்க)

## 234 சபைகளுக்கான தேர்தல் இன்று 94 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

### முடிவுகள் நாளை அதிகாலை முதல் வெளியாகும்

கொழும்பு, மார்ச் 17

234 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இன்று நடைபெறுகின்றன. மொத்தமாக உள்ள 335 உள்ளூராட்சிச் சபைகளில் உலகக் கிண்ணப் போட்டிகள் காரணமாக 34 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. சில கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்களை நிராகரிக்கக்கோரி மனுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதனால் 67 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் தேர்தல் ஆணையாளரால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்தல்களுக்கான வாக்களிப்பு 7 ஆயிரத்து 602 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7மணிக்கு

(29ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் மாநகர சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் வெற்றி

கொழும்பு, மார்ச் 17

சுவிஸ் நாட்டின் முக்கியமான நகரமான லவுசான் மாநகரசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஒருவர் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்றுள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நமசிவாயம் என்பவரே வெற்றி பெற்றவராவார்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இத் தேர்தலில் சுவிஸ் சோஷலிஸக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 5ஆயிரத்து 813 வாக்குகளை இவர் பெற்றுள்ளார்.

சுவிஸில் உள்ள தமிழர்களின் வாக்குகளுக்கு மேலதிகமாக சுவிஸ் நாட்டவர்களும்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் மோசடிக்கு அரசு திட்டமிடுகிறது

### ஐ.தே.க. எச்சரிக்கிறது

கொழும்பு, மார்ச் 17

இன்று இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல இடங்களில் வாக்கு மோசடிகளில் ஈடுபடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின்

(29 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன் அலுவலகத்தையே எரிப்பேன்; மிரட்டிய பொலிஸ் கொன்ஸ்டபிள் கைது



### பின்னணியில் தமிழ் அரசியல் கட்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 17

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேற்று வந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கட்டடத்தைக் கொளுத்தப் போவதாக ஊழியர்களை மிரட்டினார். உடனடியாகக் கைது செய்யப்பட்ட அவர், பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார். பணியில் இருந்தும் உடனடியாக இடைநிறுத்தப்பட்டார்.

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைச் சேர்ந்த செட்டி என்று அழைக்கப்படும் இரத்தினதாஸ் பிரதீபன் என்கிற பொலிஸ் கொன்ஸ்டபிளே கைது

(32 ஆம் பக்கம் பார்க்க)

## அந்தத் தங்கச் சங்கிலி திரும்பக் கிடைத்தது!

கடந்த 5ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 'பார்த்தீர்களா? கேட்டீர்களா?' என்ற பத்தியில் ''மாணவன் முன்மாதிரி

(29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



லீயின் வேகத்தில் சரியும் வஹாதத்தின் விக்கெட்



ஆட்ட நாயகன் வொட்சன்



விடைபெறும் டேவிஸ்ஸன்

# தொடர்கிறது ஆஸியின் வெற்றி

- டிலீப் -

கனடாவின் ஆதிக்கம் தொடக்கத்தில். எதிர்பார்ப்பு பலருக்கு ஆஸியின் வெற்றிக்கு முடிவு நேற்றுடன் வருமென்று. வேகப் பந்தில் சரித்தது கனேடிய விக்கெட்டுக்களை, அதிரடியில் வெளுத்து வாங்கியது ஆஸி. தொடர்ந்தது அதன் வெற்றிப் பயணம்.

நாணய சுழற்சி முடிவு கனடாவுக்கு சாதகம். துடுப்பெடுத்தாட முடிவு. பட்டேல்-டேவிஸ்ஸன் ஆரம்பித்தனர் கனடாவின் கணக்கினை. சர்வேதச கிரிக்கெட் டில் இறுதி ஆட்டத்தில் ஆடினார் டேவிஸ்ஸன். ஆஸி யின் பந்து வீச்சில் கனடா செத்து மடிந்துவிடும். பலரது நினைப்பு. மாற்றியமைத்தது கனடாவின் ஆரம்பம்.

ஆஸியின் பந்து வீச்சை நொருக்கித் தள்ளினர் ஆரம்ப ஜோடிகள். பட்டேல் கிளப்பினார் பட்டையை. மறுமுனையில் டேவிஸ்ஸன் முடிந்தவரை அதிரடி. லீ வீசிய பந்துகள் பறந்தன எல்லைக் கோட்டின் மேலால். ரைட் வீசிய பந்துகளும் கடந்தன எல்லையை. ஆடினர் பேயாட்டம். 41 ஓட்டங்களில் ஆரம்ப விக்கெட்டை பிரித்தது லீயின் பந்து. சளைக்கவில்லை, தொடர்ந்தது கனடாவின் அதிரடி. 29 பந்துகளில் எட்டியது கனடா அரைச்சதம்.

பட்டேல் அதிரடி காட்டினார். மறு முனையில் சுர்காரி கை கொடுத்தார். 37 பந்துகளில் பட்டேல் எட்டினார் அரைச்சதம். கனடாவின் அதிரடியில் மாறியது ஆஸியின் பந்து வீச்சு. அழைக்கப்பட்டார் வொட்ஸன். பவிலியனுக்கு திருப்பினார் பட்டேலை. 45 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்துக் கொடுத்தார் அணிக்கு. 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அவரது வாணவேடிக்கை.

சுர்காரி-பகாஜி இணைந்தனர். வழி நடத்தினர் அணியை. நிதானமாய் ஆட்டம். தேவைக்கு ஏற்ப பவுண்டரிகளுக்கு பந்தை விரட்டினர். மெதுவான ஆட்டம். 98 பந்துகளில் அணியின் சதம் பூர்த்தி. வில்லங்கமான இணைப்பை பிரிப்பதற்கு ஆஸி முயற்சி. மூன்றாவது விக்கெட்டுக்காய் பகிரப்பட்டது 68 ஓட்டங்கள். ரைட் பந்தில் அதிரடிக்கு முயன்றதால் பகாஜி வெளியேற்றம். 39 ஓட்டங்கள் அணிக்கு அவரது பங்களிப்பு.

கலக்கியது ஆஸியின் வேகம். லீ, ரைட் அதிவேகத் தாக்குதல் நடத்தி முடித்தனர் கனேடியர்கள் மீது. பந்துகள் சீறிப்பாய்ந்தன. தாக்கின கனேடிய வீரர்களின் உடம்பை. சுருண்டு படுத்தனர் ஆஸியின் தாக்குதலால். ஏறியது ஆஸியின் வேகம். சரியத் தொடங்கியது கனேடிய விக்கெட்டுக்கள். தாக்குப் பிடிக்கவில்லை ஆஸியின் வேகத்தை. லீயின் வேகத்தில் விக்கெட்டுக்கள் பிடுங்கப்பட்டன.

சாதிக்கவில்லை பின்வரிசை வீரர்கள். முன்வரிசையின் அதிரடி ஆட்டம் பின்வரிசையால் வீணாகியது. 26 பந்துகள் மீதமிருக்கையில் முடிந்தது கனடாவின் ஆட்டம். 211 ஓட்டங்கள் ஆஸியை சமாளித்துப் பெறப்பட்டது. ஆரம்ப ஓவர்களில் அள்ளிக் கொடுத்தார் லீ. இறுதியில் பிடுங்கி எடுத்தார் 4 விக்கெட்டுக்களை.

ஆஸி விரட்டியது இலகுவான இலக்கை. ஆரம்பத்தில் அடக்கி வாசித்தனர் வொட்ஸன்-ஹடின். நிலைத்து நின்றனர் ஆரம்பத்தில். தொடங்கினர் அதிரடியை பின்னால். மெதுவாய் ஆடி அரைச் சதம் பூர்த்தி செய்தனர் இருவரும். கனடாவின் பந்து வீச்சு சாதிக்கவில்லை. மறுமுனையில் களத்தடுப்பில் கோட்டையும் விட்டனர். வாய்ப்பாகியது ஆஸிக்கு.

எடுத்தது ஆஸி 'பட்டிங் பவர்பிளேயை'. ஈவு இரக்கமின்றி நொருக்கித் தள்ளியது கனடாவின் பந்து வீச்சை. வேகம் கொண்டு எழுந்தார் வொட்ஸன். அடுத்தடுத்து அனுப்பினார் சிக்ஸருக்கு பந்துகளை. திகைத்தனர் கனேடிய பந்து வீச்சாளர்கள். வேகத்தால் விவேகம் இழந்தனர் ஆஸியின் ஆரம்ப வீரர்கள். சதத்தை முத்தமிடாமலே பிரிந்து சென்றனர் ஹடின்-வொட்ஸன் ஜோடி. 183 ஓட்டங்களில் முதலாவது சரிவு. டேவிஸ்ஸன் இறுதி ஆட்டத்தில் இணைப்பை பிரித்தார். ஹடின் 88 ஓட்டங்களுடன் வெளியேற்றம். வொட்ஸன் 94 ஓட்டங்களுடன் வெளியேற்றம். அதில் 9 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள். புதிதாய் களம் புகுந்த பொன்டிங் 7 ஓட்டங்களுடன் வெளியேற்றம்.

இறுதியில் 16 ஓவர்கள் மீதமிருக்கையில் எட்டிப் பிடித்தது ஏழு விக்கெட்டுக்களால் வெற்றியை. அதிரடியாய் ஆடி கனேடிய பந்து வீச்சை சிதறடித்த வொட்ஸனுக்கு கிடைத்தது ஆட்டநாயகன் விருது.

*

## ஐ.சி.சி.யின் ஒரு நாள் போட்டிகளுக்கான தர வரிசை
(வெளியீடு 15.03.2011)

| அணிகள் | | துடுப்பாட்டம் | | பந்துவீச்சு | |
|---|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | - 131 | அம்லா (தெ.ஆ.) | - 886 | வெற்றோரி(நியூஸி.) | - 712 |
| இந்தியா | - 118 | ஏ.பி.டி.வில்லியர்ஸ்(தெ.ஆ.) | - 812 | மோர்க்கல்(தெ.ஆ.) | - 679 |
| தென்னாபிரிக்கா | - 118 | மைக்கல் ஹசி (ஆஸி) | - 755 | ஸ்ரெய்ன்(தெ.ஆ.) | - 668 |
| இலங்கை | - 117 | விராட் ஹோக்லி (இந்தியா) | - 752 | சுவான் (இங்கிலாந்து) | - 665 |
| இங்கிலாந்து | - 106 | டில்ஷான் (இலங்கை) | - 740 | பிறிஸ் (சிம்பாப்வே) | - 660 |
| பாகிஸ்தான் | - 101 | டோனி (இந்தியா) | - 725 | அப்துர் ரஷாக்(பங்களாதேஷ்) | - 656 |
| நியூஸிலாந்து | - 93 | சங்கக்கார (இலங்கை) | - 722 | ஜோன்சன்(ஆஸி) | - 650 |
| மே.இந்தியத் தீவுகள் | - 69 | ஷேவாக் (இந்தியா) | - 718 | குலசேகரா (இலங்கை) | - 650 |
| பங்களாதேஷ் | - 68 | டெண்டுல்கார் (இந்தியா) | - [illegible] | [illegible] (பங்களாதேஷ்) | - 642 |
| அயர்லாந்து | - 41 | ரொரட் (இங்கிலாந்து) | - [illegible] | [illegible] (இங்கிலாந்து) | - [illegible] |

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.957 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| ஆஸ்திரேலியா | 5 | 4 | 0 | 0 | 1 | 9 | +1.693 |
| சிம்பாப்வே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

| பிரிவு B | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.606 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மே.தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| அயர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.881 |
| நெதர்லாந்து | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -2.386 |

M போட்டி L தோல்வி Net/R சராசரி T சமனிலை
W வெற்றி Pt புள்ளிகள் N/R முடிவுறா ஆட்டம்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண முப்பத்தி ஐந்தாவது ஆட்டம்

ஆட்டம்: ஆஸ்திரேலியா Vs கனடா — நாணயச் சுழற்சி: கனடா
முடிவு: 7 விக்கெட்டுக்களால் ஆஸி. வெற்றி — ஆட்டநாயகன்: வொட்ஸன்

கனடா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பட்டேல் | c ஜோன்ஸன் b வொட்ஸன் | 54 | 45 | 5 | 3 |
| டேவிஸ்ஸன் | c ஹடின் b லீ | 14 | 12 | 3 | 0 |
| சுர்காரி | b ரைட் | 34 | 69 | 2 | 0 |
| பகாஜி | c ஹடின் b ரைட் | 39 | 55 | 6 | 0 |
| ஹன்சரா | c லீ b கிரேஜா | 03 | 04 | 0 | 0 |
| ஷீமா | b லீ | 02 | 02 | 0 | 0 |
| குமார் | c ரைட் b ஜோன்ஸன் | 07 | 18 | 0 | 0 |
| வஹாதம் | b லீ | 18 | 41 | 2 | 0 |
| பெயிட்வன் | c பொன்டிங் b கிரேஜா | 17 | 14 | 3 | 0 |
| பாலாஜி | b லீ | 05 | 12 | 0 | 0 |
| ஓஸன்டீ | ஆட்டமிழப்பில்லை | 02 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 4,w 11, nb 1) | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரைட் | 8 | 34 | 2 | 1 |
| லீ | 8.4 | 46 | 4 | 0 |
| ஜோன்ஸன் | 10 | 43 | 1 | 0 |
| வொட்ஸன் | 06 | 22 | 1 | 0 |
| கிரேஜா | 10 | 44 | 2 | 0 |
| ஸ்மித் | 03 | 18 | 0 | 0 |

TOTAL - 211/10 (45.4)
1-41 (டேவிஸ்ஸன்), 2-82 (பட்டேல்), 3-150 (பகாஜி), 4-157 (ஹன்சரா), 5-157 (சுர்காரி), 6-161 (ஷீமா), 7-169 (குமார்), 8-195 (பெயிட்வன்), 9-204 (பாலாஜி), 10-211 (வகாதம்)

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | c ஓஸன்டீ b பெயிட்வன் | 94 | 90 | 9 | 4 |
| ஹடின் | c பகாஜி b டேவிஸ்ஸன் | 88 | 84 | 11 | 2 |
| பொன்டிங் | c டேவிஸ்ஸன் b ஓஸன்டீ | 07 | 15 | 0 | 0 |
| கிளார்க் | ஆட்டமிழப்பில்லை | 16 | 17 | 3 | 0 |
| வைட் | ஆட்டமிழப்பில்லை | 04 | 03 | 1 | 0 |
| மைக்கல் ஹஸி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்மித் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஜோன்ஸன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| லீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| கிரேஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரைட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 2, lb 1) | 03 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஓஸன்டீ | 9.5 | 53 | 1 | 0 |
| பெயிட்வன் | 10 | 41 | 1 | 1 |
| பாலாஜி | 07 | 46 | 0 | 0 |
| ஷீமா | 03 | 23 | 0 | 0 |
| டேவிஸ்ஸன் | 04 | 29 | 1 | 0 |
| பட்டேல் | 01 | 19 | 0 | 0 |

TOTAL - 212/3(34.5)
1-183 (ஹடின்), 2-185 (வொட்ஸன்), 3-207 (பொன்டிங்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை ஆட்டத்தில் ரெய்னா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சென்னையில் நடக்கும் உலகக் கிண்ண ஆட்டத்தில் யூசுப் பதானுக்குப் பதிலாக சுரேஷ் ரெய்னா களமிறங்குவார் என்று தெரிகிறது.

உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் பல்வேறு ஆட்டங்களுக்கு இடையில் இடம் பெற்றவர் இளம் வீரர் ரெய்னா (24). இதுவரை 111 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று, 3 சதம், 16 அரைசதம் பெற்றுள்ளார். ஆனால் கடைசியாக பங்கேற்ற 10 போட்டிகளில் ஒரு அரைசதம் உட்பட, 233 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

தவிர ''ஷார்ட் பிட்ச்' பந்துகளில் தொடர்ந்து திணறி வருகிறார். இந்த நேரத்தில் விராத் கோஹ்லி, யூசுப் பதானின் வளர்ச்சி அணியில் இவரது இடத்தை கேள்விக் குறியாக்கியது. இருப்பினும் சென்னையில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் நியூஸிலாந்துக்கு எதிராக 26 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இருப்பினும் யூசுப் பதானுக்கு வாய்ப்பு சென்றது. இவரிடம் இருந்து அதிகமாக எதிர்பார்த்த நிலையில் இதுவரை பங்கேற்ற 5 போட்டிகளில் 63 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இதனால் சென்னையில் வரும் 20 ஆம் திகதி நடக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் யூசுப் பதானுக்குப் பதில் ரெய்னா இடம் பெற வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அதேபோல தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் கடைசி ஓவரில் சொதப்பிய ஆஷிஸ் நெஹ்ராவின் இடமும் பறிபோகிறது. இவருக்குப் பதில் அஷ்வின் இடம் பெற வாய்ப்பு இருக்கிறது.

சென்னைதான் அஷ்வினின் சொந்த ஊர் என்பதால் இவரது உலகக் கிண்ண அறிமுகம் அங்குதான் அரங்கேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (15)

# நடுவரிடம் வாக்குவாதம் வீரருக்கு அபராதம்



பங்களாதேஷ் அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் சுவானுக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

பங்களாதேஷில் உள்ள சிட்டகாங் நகரில் பங்களாதேஷ் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண லீக் ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 26 ஆவது ஓவரை இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் சுவான் வீசினார்.

அப்போது பந்தில் குறைபாடு உள்ளதாகக் கருதிய சுவான் பந்தை மாற்றும்படி நடுவராகவிருந்த ஜெப் குரோவிடம் கூறினார். இதற்கு குரோவ் மறுப்பு தெரிவித்ததால் நடுவரை நோக்கி ஏதோ கூறியபடி அந்த ஓவரை வீசினார் சுவான். பின் சிறிது நேரம் கழித்து நடுவர் குரோவிடம் நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது.

ஐ.சி.சி 2.1.4 விதிமுறையின் படி ஆட்டத்தின்போது தகாத, அருவருப்பான வார்த்தைகளை பயன்படுத்துவது குற்றமாகும். இதன்படி சுவானுக்கு ஆட்ட சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆட்டங்களில் இதுபோல இவர் மீண்டும் நடந்து கொண்டால் 50 சதவீதம் அபராதம் அல்லது கடுமையான தண்டனை விதிக்கப்படும் என ஐ.சி.சி எச்சரித்துள்ளது. (15)

# விளையாடுகிறார் அசோக டி சில்வா

உலகக் கிண்ண கிரிக்கெட்டில் நடுவராகப் பணியாற்றி வரும் இலங்கை நடுவர் அசோக டிசில்வாவின் நடுவர் பொறுப்பிற்கான திறமைகள் மீது அணித் தலைவர்களுக்குக் கடும் சந்தேகங்கள் எழுந்துள்ளது.

அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்ட் தற்போது டிசில்வாவின் தீர்ப்பின் மீது விமர்சனம் வைத்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான அயர்லாந்து ஆட்டத்தின் போது அயர்லாந்து வீரர் கேரி வில்சனுக்கு நடுவர் அசோக டிசில்வா அவுட் கொடுத்தது பற்றி விமர்சனம் செய்ததற்காக அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்டிற்கு ஐ.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது. அன்றைய தினம் கேரி வில்சன் 61 ரன்கள் எடுத்து விளையாடி வந்தபோது அசோக டிசில்வா அவருக்கு எல்.பி.டபிள்யூ. கொடுத்தார். பந்து விக்கெட்டுக்கு வெளியே அவரது பேடைத் தாக்கியது. விதிகளின் படி இது ஆட்டமிழப்பில்லை. ஆனால் அசோக டிசில்வா, பந்தை விளையாடாமல் மட்டையால் தடுத்தார் என்று நினைத்து அவுட் என்று தீர்மானித்தார்.

மேல் முறையீடு செய்யப்பட்டபோது பந்து விக்கெட்டுக்கு வெளியே பிட்ச் ஆனது தெரிந்தது. இதில் பந்தை விளையாட முயன்றாரா அல்லது இல்லையா என்பதெல்லாம் கேள்வியே அல்ல என்பது போர்ட்டர் பீல்டின் வாதம்.

மேலும் மேல்முறையீடு செய்தபோது பந்து காப்பை முதலில் தாக்கியதா துடுப்பை முதலில் தாக்கியதா என்றே டிசில்வா கேட்டார். அப்படியிருக்கையில் பந்தை அவர் விளையாட முயன்றாரா இல்லையா என்ற கேள்வி எங்கிருந்து வரும்? என்று அயர்லாந்து அணித்தலைவர் கேட்பதில் நியாயம் இல்லாமலில்லை.

நடுவர் அசோக டிசில்வாவின் நடுவர் திறமைகளின் மீது நிறைய சந்தேகங்கள் ஏற்கனவே உண்டு. சௌரவ் கங்குலிக்கு குறைந்தது 4 முறையாவது டெஸ்ட் ஆட்டங்களில் மட்டையின் விளிம்பில் பட்ட பந்திற்கு எல்.பி.டபிள்யூ. கொடுத்தவர்தான் இந்த அசோக டிசில்வா. (15)

# மறுக்கிறார் கொலிங்வூட்



சென்னை,மார்ச் 17

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் ஓய்வு பெறும் எண்ணமில்லை. இவ்வாறு இங்கிலாந்து அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரரும் சகலதுறை ஆட்டக்காரருமான கொலிங்வூட் தெரிவித்தார்.

உலகக் கிண்ணத் தொடருடன் இங்கிலாந்தின் கொலிங்வூட், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்த ஓய்வு பெறப் போவதாக செய்திகள் வெளியாகின. இதற்குக் கொலிங்வூட் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,மேற்கிந்தியத்தீவுகளில் நடந்த 'ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் எங்கள் அணி முதலில் மோசமாகத்தான் ஆடியது. பின்னர் சம்பியன் பட்டம் வென்றோம். அதுபோல இந்த முறையும் அசத்த முயற்சிப்போம். மற்றபடி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை- என்றார். (15)

# ஆஸியை வீழ்த்துவோம்

## - அப்ரிடி


பள்ளேகல,மார்ச் 17

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் காலிறுதிக்கு முன்னேறிய போதும், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற வேண்டும். அதற்கு முழுமையாக முயற்சிப்போம். இவ்வாறு பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில், எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடக்கவுள்ள 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் மோத உள்ளன. இதுவரை விளையாடிய ஐந்து லீக் ஆட்டங்களில் நான்கில் வெற்றி கண்ட பாகிஸ்தான் அணி 8 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறியது. நான்கு ஆட்டங்களில் மூன்றில் வெற்றி கண்ட ஆஸ்திரேலிய அணி 6 புள்ளிகளுடன், காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அப்ரிடி:

உலகக் கிண்ண தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியபோதும், ஆஸ்திரேலியாவை வீழ்த்தி, 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்து காலிறுதிக்குள் செல்ல வேண்டும் என்பதை தற்போதைய இலக்காகக் கொண்டுள்ளேன். எனவே இந்த ஆட்டத்தில் முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறப் போராடுவோம் - என்றார்.



இதேவேளை உலகக் கிண்ண போட்டிகளில் 1999 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் இடம்பெற்ற லீக் ஆட்டத்திலேயே அவுஸ்திரேலியா தோல்வியடைந்திருந்தது. அதன் பின்னர் எந்தவொரு உலகக் கிண்ண ஆட்டங் களிலும் தோல்வியடையவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது. (15)

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
..........................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
..........................................
பெயர் : ..........................................
தே.அ.இல. : ..........................................
முகவரி : ..........................................
..........................................
போட்டி முடிவுத் திகதி
25.03.2011

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| சேவாக் (இந்தியா) | 05 | 327 | 01 | 01 | 175 | 65.40 |
| டெண்டுல்கார் (இந்தியா) | 05 | 324 | 00 | 02 | 120 | 64.80 |
| வில்லியர்ஸ் (தெ.ஆபிரிக்கா) | 04 | 318 | 01 | 02 | 134 | 106.00 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 05 | 16 | 05/16 |
| பெயிட்வன்(கனடா) | 06 | 13 | 3/35 |
| பென்(மே.தீவுகள்) | 04 | 12 | 04/18 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 மார்ச் 2011 வியாழக்கிழமை

# உலகக் கிண்ண வாசகர் கணை

இன்றைய உலகில் அதிகம் பேசப்பட்டு வரும் விளையாட்டு என்றால் அது கனவான்களின் ஆட்டம் கிரிக்கெட் என்றுதான் கூறமுடியும். இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து இந்தமுறை உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்துகின்றனர். இந்தியா-பங்களாதேஷ் ஆட்டம் முதல் இந்தியா-மேற்கிந்தியத்தீவுகள் வரையான லீக் ஆட்டங்கள் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகளில் இலங்கை அணியைப் பொறுத்த வரையில் 5 ஆட்டங்களைச் சந்தித்து 3 ஆட்டங்களில் வெற்றியைப் பெற்றுள்ளது. இவற்றில் கனடா அணியுடனான ஆட்டத்தில் 210 ஓட்டங்களாலும், கென்ய அணியுடன் 9 விக்கெட்டுக்களாலும், சிம்பாப்வே அணியுடனான ஆட்டத்தில் 139 ஓட்டங்களாலும் வென்றுள்ளது.

இந்திய அணியினைப் பொறுத்த வரையில் முதல் 4 ஆட்டங்களில் 3 போட்டிகள் வெற்றி பெற்றதோடு ஒரு ஆட்டம் கைவிடப்பட்ட ஆட்டமாகவுள்ளது. இந்தப் போட்டிகளில் பங்களாதேஷ் அணியை 87 ஓட்டங்களினாலும் அயர்லாந்து, நெதர்லாந்து அணிகளை 5 விக்கெட்டுக்களினாலும் வெற்றி பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா அணி தனது 4 ஆட்டங்களில் மூன்று வெற்றியைப் பெற்றுள்ளதோடு ஒரு போட்டி சமனிலையில் முடிவுற்றது. இவ் அணி கடந்த தொடர்களில் சிறப்பாக விளையாடி முன்னேற்றம் பெற்றுள்ளது. உதாரணமாக இங்கிலாந்துடனான ஒருநாள் போட்டித் தொடரை முழுவதுமாக துடைத்தது. உலகக்கிண்ணப் போட்டிகளில் அதி கூடிய வெற்றிகளைப் பெற்ற அணியாகத் திகழ்கிறது. உலகக்கிண்ணத்தில் தொடர்ந்து 31 போட்டிகளில் எந்த அணி வெற்றி பெற்று அவுஸ்திரேலியா அணியின் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது எனப் பார்ப்போம்.

இங்கிலாந்து அணியைப் பற்றிக் கூறுகையில் கத்துக்குட்டி அணியான அயர்லாந்திடம் தோல்வி பெற்றது. இதனை மையமாக வைத்துத் தனது பிழைகளை திருத்திய அணித்தலைவர் ஸ்ரோரஸ் இந்த மாதம் 6 ஆம் திகதி சிதம்பரம் விளையாட்டரங்கில் இடம் பெற்ற போட்டியில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியை 6 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்று 4 ஆட்டங்களில் 2 வெற்றி மற்றும் ஒரு சமனிலையுடன் காலிறுதி வாய்ப்பை உறுதி செய்தது.

மேலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியைப் பற்றி கூறுகையில் 1975, 1979 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தை கிளைவ் லொயிட் தலைமையில் வெற்றி பெற்றது. ஆனாலும் இவ்வருடம் நடைபெற்ற இலங்கையுடனான தொடரில் படுதோல்வியடைந்தது. அப்போட்டிகளில் ஒரு போட்டி பற்றி நோக்குவோம்.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இறுதிப்போட்டி பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி நடைபெற்றது. இதில் இலங்கை அணியில் மாற்றங்கள் காணப்பட்டன. காரணம் உலகக்கிண்ணத்துக்கு வீரர்களைத் திட்டமிடுவது சங்கக்காரவின் நோக்கம். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெரன் சமி களத்தடுப்பைத் தெரிவு செய்தார். வழமை போல அன்றைய ஆட்டத்தில் தரங்க பற்கேற்கவில்லை. மஹேலவும் டில்ஷானும் களமிறங்கி ஆட்டத்தை ஆரம்பித்தனர். டில்ஷான் அதிரடியாக ஆடினார். ஆனால் அதனால் இழப்பு ஏற்பட்டது. முதல் விக்கெட்டைப் பறித்தார் டுவைன் பிராவோ. 30 ஓட்டங்களுடன் டில்ஷான் வெளியேற்றம் இணைந்தது. சங்கா-மஹேல ஜோடி நிதான ஆட்டம் சங்கக்காரவும் மஹேலவும் தன் பங்குக்கு சங்கக்கார அரைச்சதம் அடித்தார். மஹேல 44 ஓட்டங்களுடன் ராம்புல பந்தில் வெளியேற்றம். பின்னர் வந்தவர்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர். சமரவீர, பெரேரா, கப்புக் கெதர வெளியேற்றம். சங்கக்காரவும் 75 ஓட்டங்களுடன் வெளியேற்றம். பின்வரிசையில் மத்யூஸ் 22 பந்து களில் 36 ஓட்டங்கள் 277 இலங்கையின் மொத்த ஓட்ட எண்ணிக்கை.

வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. தொடரை இழக்கும் நிலை ஆனாலும் முடியவில்லை. தொடக்க வீரர்கள் கெயில் பெர்ணான்டோவிடமும் பரத் பெரேராவிடமும் வீழ்ந்தனர். பிரா வோ சர்வான் இணைப்பாகினர். அதிரிடியும் காட்டினர். இவர்களது இணைப்பு பலமாகியது. இறுதியில் ஹேரத் பந்தில் சர்வான் 51 ஓட்டம் பெற்று வெளியேற்றம் அடுத்து இறங்கிய சந்தர் போல் மெண்டி ஸிடம் வீழ்த்தினார். ஒன்று சேர்ந்தனர் பிராவோ சகோதரர் கள். ஆனாலும் டேரன் பிராவோ 71 ஓட்டங்களுடன் வெளியேற்றம். தலைவர் சமி வந்தவுடனேயே வெளியேற்றினார் பெரேரா. பின் வரிசை சோபிக்க தவறினர். போச் 49 ஓட்டங்களுடன் வெளியேற்றம். தீவுகளின் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. 251:10 மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் பெரேரா மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இவ்வாறு அவ் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. இலங்கை அணி இவ்வருடம் உலகக்கிண்ணத்தில் அதிகமாக மேற்கிந்தியத்தீவுகளைக் காலிறுதிப் போட்டியில் சந்திக்கலாம். இலங்கை அணி தொடர்களில் வெற்றி பெறுவது அநேகமாகக் காணப்படுகின்றது. இறுதிப் போட்டிகளில் கோட்டை விடுகி றது. இம்முறையை அரையிறுதியை வெற்றி பெறுவதன் மூலம் கிண்ணத்தைப் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

**இ.வசந்ராம்**
*கச்சாய் வீதி, சாவகச்சேரி*





# கிண்ணம் வெல்வது யார்?

**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள் வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள் வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**
கன்னி போட்டோ
கவிதா ரேடர்ஸ்

**நெல்லியடியில்**
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**
நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**
ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**
கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
சஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடைபெறுகின்றேன்

கனடா அணியின் 'மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜோன் டேவிஸ்ஸன், சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற உள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று நடந்த 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, கனடா அணிகள் மோதின. இந்த ஆட்டத்துடன் கனடா அணி உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியது. இந்த ஆட்டத்துடன் கனடாவின் டேவிஸ்ஸன் (41 வயது), சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் கடந்த 2003 இல் நடந்த உலகக் கிண்ண தொடரில் 67 பந்தில் 111 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தார். இதுவரை 31 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள இவர் ஒரு சதம், ஐந்து அரைசதம் உட்பட 785 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

கனடாவில் பிறந்த இவர், இளம் வயதில் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தார். ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற உள்ளூர்ப் போட்டிகளில், தெற்கு ஆஸ்திரேலியா, விக்டோரியா உள்ளிட்ட அணிகளுக்காக விளையாடி உள்ளார்.

இது குறித்து டேவிஸ்ஸன் கூறுகையில், ''எனது கடைசி சர்வதேச போட்டியில், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாட இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனெனில் கனடாவில் பிறந்த போதிலும், ஆஸ்திரேலியாவில் நிறைய நாள்களை செல விட்டுள்ளேன். ஆஸ்திரேலிய அணியில் உள்ள ஒரு சில வீரர்களுடன் உள்ளூர் போட்டிகளில் விளையாடி உள்ளேன். சிலருக்கு பயிற்சி வழங்கி உள்ளேன். கடந்த 2003இல் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான போட்டியில் அதிரடியாக சதம் கடந்ததை என்றும் மறக்க முடியாத தருணமாக கருதுகிறேன்,'' என்றார் (15)

## அடுத்த வர்ணப் படத்தில் அதிரடி நாயகர்கள் சேவாக், பீற்றர்ஸன். எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...





பாதிப்புக்கு உதவி: மும்பை சென்றுள்ள இலங்கை அணியின் தலைவர் சங்கக்கார அங்குள்ள எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் அமைப்புகளுடன் கலந்துரையாடுகிறார்........

## இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து – மே.தீவுகள்
பெங்களூர் பி.ப. 2.30




### தினமொரு பரிசுப் போட்டி

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான நாளைய (18.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

.................................................

பெயர் : ..................................................

தே.அ.இல : ..................................................

முகவரி : ..................................................

..................................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (18.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வென்றுகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

உதயன் வழங்கும்

வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

1ஆம் பரிசு

2ஆம் பரிசு 1 லட்சம் ரூபா பணப் பரிசு

உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

clicT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு
ஒரு வருடத்துக்கான
கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

### மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..................................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..................................................

முகவரி : ..................................................

..................................................

போட்டி முடிவுத் திகதி
25.03.2011

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடி[illegible]படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்[illegible] 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை

**SINGER PLUS**
No.01 STANLY ROAD JAFFNA. வழங்கும் EGG BEATER

**SINGER**
HOSPITAL ROAD JAFFNA. வழங்கும் FAN

**SINGER PLUS**
CHUNNAKAM. வழங்கும் FAN

**SINGER PLUS**
NELLIYADEY. வழங்கும் FAN

**SINGER PLUS**
CHAVAKACHCHERI. வழங்கும் TOASTER

**PC SOLUTION**
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும் COLOUR PRINTER

**PC POWER UNIT**
LUXAN PLAZA KASTHURIYAR ROAD. வழங்கும் Rs. 5000 GIFT VOUCHER

**BARANABAS**
247, Stanly Road, Jaffna. வழங்கும் SINSUNG DVD PLAYER

**சரவணா ரெக்ஸ்**
770, 772, கே.கே.எஸ் வீதி, குட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

**கிருபா லேணர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தவக்காலச் சிந்தனை

### சட்டமா, நீதியா? அமைதி தரும்

அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே. (மத் 5:9) இன்று நாம் அமைதி மலருமா? நிம்மதி நிழலிடுமா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அமைதியை பிறர் எமக்குத்தர முடியாது. நாம்தான் உருவாக்க வேண்டும். எந்தசூழ்நிலையில் வாழ்ந்தாலும் அமைதியின் கருவியாக வேண்டுமெனில் எம்மை வெறுப்பவர்களுக்கு அன்பையும், பகைவருக்கு மன்னிப்பையும் செயலில் நம்பகத் தன்மையையும் நாம்தான் விதைக்க வேண்டும்.

அமைதி தூய ஆசியின் கனியாகும். ஆன்மிகத்தின் சாராம்சம் அன்பாகும். அன்பின் பூரணத்துவத்தை வெளிப்படுத்த இதயத்தின் ஆழத்தில் இருந்து வருவதுதான் அமைதி. இது இறைவனோடு ஒன்றித்து வாழும் போதே கைகூடும். எனவே இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவு கொள்ளும் போது வாழ்வில் அமைதியை சுவைக்க முடியும். ஆறுதலைத் தேடி அலைவிட ஆறுதலை அளிப்பதிலும் அன்பை எதிர்பார்ப்பதை விட அதைப் பரிமாறுவதிலும், புரிந்துணர்வற்ற இடத்தில் புரிந்து கொண்டு செயற்படுவதிலும், குறைகளை விடுத்து நிறைவுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் இருத்தல் அமைதியின் கருவியாக எம்மை உருமாற்ற முடியும்.

அமைதிக்கான எமது முயற்சிகள் பலன்தராது போகலாம். அமைதியின் விதையை பக்குவமாக நடுகையிடத் தெரியாது தடுமாறலாம். ஆனாலும் அமைதியின் கருவிகளாகச் செயற்படும் தணியாத தாகம் அனைவருக்கும் இருக்க வேண்டும்.

அமைதி என்ற சொல்லைப் பேச்சில் மட்டும் உச்சரிப்பதை விடுத்து செயலில் காட்ட முனையும்போது இறைவன் முன்னிலையிலும் மனிதர் நடுவிலும் பேறுபெற்றோர் ஆக முடியும். சட்டங்களால் உருவாக்கப்படும் அமைதியைவிட மக்கள் வாழ்விலும் நீதியால் மனதிலும் கட்டி எழுப்பப்பட்ட அமைதி வலிமையுள்ளதாக அமையும்.

அதுதான் இயேசு காட்டிய அமைதியின் வழியாகும்.

**எஸ். யேசுதாஸ்,**
கொழும்புத்துறை.

# பதின்மூன்று நாடுகளுக்கு இலங்கைக்கான புதிய தூதுவர்கள்

கொழும்பு, மார்ச் 17

பதின்மூன்று நாடுகளுக்கு புதிய தூதுவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனா, ஓமான், லெபனான், குவைத், கென்யா, கட்டார், மலேசியா, ஒஸ்ட்ரியா, சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, சுவீடன், மியன்மார் ஆகிய பதின்மூன்று நாடுகளிலுள்ள இலங்கைக்கான தூதுவர்களின் பதவிக்காலங்கள் முடிவுற்றுள்ளதால் புதிய தூதுவர்களை அரசு நியமித்துள்ளது.

இதற்கமைய வெளியுறவு அமைச்சின் மேலதிகச் செயலாளர் ரஞ்ஜித் உயன்கொட சீனாவுக்கான தூதுவராகவும், வெளிவிவகார அமைச்சின் கொன்சியுலர் பிரிவின் பணிப்பாளர் நாயகம் அசோக கிரிஹாகம ஓமானுக்கான தூதுவராகவும் குவைத்துக்கு சீ.எம். விஜேரத்ன, கென்யாவுக்கு ரீ.ரவீந்திரன், கட்டாருக்கு வெளியுறவு அமைச்சின் மேலதிகச் செயலாளரில் ஒருவரான ஜயந்த பலிபான, மலேசியாவுக்கு ஏ.எல். ரத்னபால, ஒஸ்ரியாவுக்கு ஏ.எல்.ஏ.அஸீஸ், சிங்கப்பூருக்கு முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், ஜப்பானுக்கு முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணகொட, தென்கொரியாவுக்கு திஸ்ஸ விஜேரத்ன, மியன்மாருக்கு கே.பியசிறி, சுவீடனுக்கு அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதியினால் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்படி நியமனங்களுக்கான அனுமதியைப் பெறுவது தொடர்பாக உயர் பதவிகள் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற செயற்குழுவின் முன்வைக்கப்படவுள்ளன.

(ம-22)

## விழிசிட்டி ஞான வைரவ சுவாமி ஆலய பரிபாலன சபை
## ஆலய புனரமைப்புக்கு உதவி

வித்தகபுரம் கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்ட பின்னர் ஆலயத்துக்கான பரிபாலன சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. மேற்படி சபையினர் ஆலய கட்டடத்தினையும், சுற்றாடலையும் காடுபோல் வளர்ந்திருந்த மரங்களை அகற்றித் துப்புரவாக்கிப் பரிசீலித்தபோது ஆலயம் பலத்த சேதமுற்று முற்றிலும் புனரமைக்க வேண்டிய நிலையில் உள்ளமை தெளிவாகியது.

ஆலய பூசகரின் ஆலோசனையுடன் மார்ச் மாதம் 23 ஆம் திகதி (பங்குனி 9ஆம் திகதி) பிராயச்சித்த அபிஷேகம் ஒன்று செய்வது எனவும் தொடர்ந்து தினசரி ஒரு நேரப் பூசையை (காலை 9 மணி) மேற்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இறையருள் கூடும் பட்சத்தில் ஏப்ரல் 24 ஆம்திகதி (சித்திரை 11ஆம் திகதி) பாலஸ்தாபனம் செய்து ஆலய புனரமைப்புப் பணியை முழுமையாக ஆரம்பிப்பது எனவும் எண்ணியுள்ளோம்.

நித்திய பூசையினை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடாக ஓரளவு பயன்பாட்டுக்கு உகந்த நிலையிலுள்ள மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பவற்றைப் புனரமைப்பது நித்திய பூசைக்கான நெய்வேத்தியம் செய்யவும் ஆலயப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துப் பேணவும் உதவும் என பரிபாலன சபையினர் நம்புகின்றனர். எனவே மேற்கூறியவாறு பிராயச்சித்த அபிஷேகம், நித்திய பூசைகள், பாலஸ்தாபனம், மடைப்பள்ளியறை, களஞ்சிய அறை புனரமைப்பு என்பவற்றுக்கான நிதி உடனடியாகச் சேகரிக்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான உடனடித் தேவைகளுக்கும், ஆலயத்தின் முழுமையான புனரமைப்புப் பணிகளுக்குமான பெருமளவு நிதித் தேவையைப் பூர்த்தி செய்ய பணமாக பங்களிப்பு செய்ய விரும்பும் வைரவப் பெருமானின் அடியார்கள் பணத்தினை - வர்த்தக வங்கி (Commercial Bank) சுன்னாகம் கிளை, நடைமுறைக்கணக்கு இலக்கம் (Current Account) 110702065 (வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்ப விரும்பின் CCEYLKLX 1107020605 என்ற வங்கிக்குரிய குறியீட்டு இலக்கத்தையும் சேர்த்துப் பயன்படுத்தவேண்டும்) வைப்புச் செய்த பின்னர் ஆலய மின்னஞ்சல் முகவரியான vilignanavairavar @ yahoo.com.au இற்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறான சபையின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளருக்கு அறியத்தரும் பட்சத்தில் உரிய பணத்தினை பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டினை இயன்றளவு விரைவாக தாங்கள் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய நித்திய பூசை, விசேட பூசை மற்றும் திருவிழா உபயகாரர் தம்மை இனங்காட்டித் தொடர்ந்தும் உங்கள் உபயங்களை நிச்சயித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். மேலதிக தகவல்களுக்குப் பரிபாலன சபையினருடன் நேரடியாகவோ மின்னஞ்சல் மூலமோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

விழிசிட்டி, தெல்லிப்பழை

விழிசிட்டி ஞான வைரவ சுவாமி
ஆலய பரிபாலனசபை

தொடர்புகளுக்கு:

வைத்திய கலாநிதி
க.சிவபாலன் (தலைவர்)
60, சபாபதி வீதி, தலையாழி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்
brsivapalank@yahoo.com

ச.ஜனார்த்தனன்
(செயலாளர்)
'பொன்ரத்தின மகால்'
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு,
சுன்னாகம்.

ந.கருணாலட்சுமி
(பொருளாளர்)
'சத்திய வாசா'
லவ்லேன், உடுவில்.
தொலைபேசி இல.
0774043893

(43-19-24)

**வீடு வாடகைக்குத் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ். மாநகர எல்லைக்குள் தேவை.

தொடர்பு: 0773427843 (அ/576554)

## அனுமதியின்றி மரம் வெட்டியோருக்கு ரூபா 11 ஆயிரம் அபராதம்

நெல்லியடி, மார்ச் 17

குடத்தனைப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மரம் வெட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை பொலிஸாரால் 11 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதி இவர்களுக்கு தலா 1,000 ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(உ-319)

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

**Spoken English** பயிற்சிமையம்.

An ISO 9001:2000 Certified Company

veta
Experts in English Training




அரச, தனியார் துறை உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலை நேர வகுப்புக்களும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|
| Mon, Wed, fri 9.00 a.m. | Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 2.30 p.m. |
| Tue, Thu 5.00 p.m. | Mon, Wed 9.30 a.m. | Tue, Thu 3.30 p.m. |
| Sat, Sun 3.00 p.m. | | Tue, Thu 5.00 p.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலுங்கள்.

**DMI COMPUTER EDUCATION**

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

15.03.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2370

வெற்றி எழுத்து H    வெற்றி எண்கள் 8 7 8 2 1 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 8 | 7 | 8 | 2 | 1 | 5 | ரூபா. 19,033,052/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 7 | 8 | 2 | 1 | 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 7 | 8 | 2 | 1 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 8 | 2 | 1 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 135 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 1 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1351 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் 13552 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 133005 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 7 | 8 | 2 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 7 | 8 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 146 |
| 9 பரிசுகள் | | 8 | 7 | 8 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1344 |
| 10 பரிசுகள் | | 8 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13319 |
| 11 பரிசுகள் | H | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53368 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,260,010.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 20,225,411.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்குள் ...

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்

### பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் குகனேச சர்மா

(காரைநகர், களபூமி, திக்கரை முருகமூர்த்தி கோயில் தேவஸ்தானக் குரு)

தோற்றம் 28.02.1936    மறைவு 27.03.2010

திதி - பூர்வபக்கதிரயோதசி

அன்பாலும், பண்பாலும் எங்கள் எல்லோரையும்
அரவணைத்து எம்மை வழிகாட்டி வாழவைத்தீர்கள்
எம்மை கண்டிப்புடன் கல்விகற்க தூண்டினீர்கள்
எமது குலதெய்வங்கள் உறைவிடங்களில்
ஒளியேற்ற வேண்டும் என்ற பேரவாவுடன் எமக்கு பொறுப்புக்களைத் தந்து
எமது வாழ்வுக்கு ஒளியூட்டினீர்கள் அணையாத தீபமே! எம்மை வாழவைத்த
எம் அருமைத்தெய்வமே! அப்பா நீங்கள்
எம்மை விட்டுச் சென்றீரோ ஓராண்டல்ல
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
திக்கரை முருகப்பெருமானை பிரார்த்திக்கிறோம்.

திக்கரை, களபூமி,
காரைநகர்.

(183) (20,25)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீனவர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு...?

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இரண்டு நாட்டு அரசாங்கங்களும் உருப்படியாக இது வரை எந்தவித நடவடிக்கையையும் எடுத்ததாக இல்லை. பிரச்சினைகள் உருவாகியவுடன் அவற்றைத் தீர்ப்பதில் அக்கறை உள்ளது போன்று இரண்டு நாட்டு அரசாங்கங்களும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அறிக்கைகள் வெளியிடுவதோடு விவகாரம் அமிழ்ந்து போகிறது.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை இப்போது, தமிழக மீனவர் - இலங்கையின் வடபகுதி மீனவர்களின் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகள் வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதால் வடக்கு மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டு வருமானத்தை இழந்து தமது சீவனோபாயத்துக்கு அல்லாடும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் தமிழக அரசோ அன்றி மத்திய அரசோ தகுந்த நடவடிக்கை எடுப்பதாக இல்லை. அத்துமீறல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தந்த வேளைகளில் ஆறுதல் கூறுவதும் பின்னர் மறந்துவிடுவதுமாக விவகாரம் நீண்டு கொண்டிருக்கிறது.

வடபகுதி மீனவர் சங்கங்களின் பிரதிநிகள் தமிழகம் சென்று அங்குள்ள கரையோர கிராமங்களுக்குச் சென்று - மீனவர் பிரதிநிதிகளுடன் பேசியதையும், தமக்குள்ள கஷ்டங்களை விவரித்து விளக்கியதையும் குறிப்பிட்டாக வேண்டும். அவ்வேளை வடபகுதி மீனவர்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைத் தாம் உணர்த்துவதாகத் தெரிவித்து அவர்கள் மிகவும் நொந்தார்கள். ஆனால் அவர்களின் தாராண்மை, தமிழக அரச தரப்பாலோ இந்திய மத்திய அரசாலோ செயல் ரீதியாகப் பிரதிபலிக்கப்படவில்லை.

இழுவைப் படகு விவகாரம் வடபகுதி தமிழ் மீனவர்களையே பாதிப்பதால் இலங்கை அரசாங்கம் இது விடயத்தில் கீச்சி மாச்சி தம்பளம் விளையாடிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழ் நிலையிலேயே இழுவைப் படகு அத்துமீறல் பிரச்சினையை இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையாக முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகள் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினருடன் பேச்சு நடத்தினர். அதன் விளைவாக மேற்படி சங்கத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு இப்பிரச்சினையை தேசிய மீனவர்களின் பிரச்சினையாக கருதிச் செயற்பட முடிவாகி இருக்கிறது.

வடபகுதி மீனவர்களின் பிரச்சினையை முன்னிறுத்தி ஆறு அம்சக் கோரிக்கையை தேசிய மீனவர் சங்கம் இலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வடபகுதி மீனவர்களின் நீண்ட நாள் பிரச்சினைகளை தேசிய மட்டத்தில் உள்வாங்கி அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு முடிவாகி இருப்பது வரவேற்கத்தக்கதே.

எனினும் இந்த முயற்சியை தமிழ் நாட்டுடன் ஈழத் தமிழ் மக்களுக்கு உள்ள உறவை கெடுப்பதற்கு வழி செய்யும் சூத்திரமாக்க முயலக் கூடாது. இரு நாடுகளுக்கும் உரிய கடல் எல்லையை மீள அமைத்து, அவரவர் பிராந்தியங்களில் தொழில் செய்வதற்கு வழிவகுக்க இரண்டு நாட்டு அரசுகளும் இதய சுத்தியுடன் செயற்படவேண்டும். அரசியல் உள்நோக்கங்களை அடைவதற்கு ஏட்டிக்குப் போட்டித் தனம் இல்லாத ஒரு பின்னணியில் இலங்கை - இந்திய மீனவர் தகராற்று நிலை நோக்கப்பட வேண்டும்.

தமிழக மீனவர்களையும் வடபகுதி மீனவர்களையும் இரு துருவங்களாக்கி வேடிக்கை பார்ப்பதற்கான முன்னோட்டமாகவோ, அதனை நிலைநிறுத்துவதற்கான அத்திபாரமாகவோ, இரு நாடுகளின் ஆட்சித் தரப்புகளும் முனைவதற்கு, தமிழக மீனவர்களோ வடபகுதி மீனவர்களோ அவர்கள் சார்பில் பேச முன் வந்திருக்கும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமோ பிறழ்ந்துவிடாமல் செயற்பட வேண்டும்.

அதுவே பிரச்சினைக்கு உகந்த தீர்வைத் தரும்.

# இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு தேவை

## அரசு மட்டங்களில் நடவடிக்கை அவசியம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இந்திய மீனவர்களின் அத்துமீறல் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பேச்சுக்களை இருபகுதி மீனவர் பிரதிநிதிகளும் மேற்கொள்ள அரசு மட்டத்திலான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

வடபகுதி, தென்பகுதி மீனவர்களால் இவ்வாறு ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திய இழுவைப் படகுகள் இலங்கை வடபகுதி கடல் பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நீர்கொழும்பிலுள்ள தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த 14 ஆம் திகதி வடபகுதி, தென்பகுதி மீனவர்களுக்குக்கிடையே இடம்பெற்ற இந்தக் கலந்துடையாடலின்போதே மேற்கண்டாவறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஆறு தீர்மானங்கள் தொடர்பாக வலி. தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வி. சுப்பிரமணியம் தெரிவித்தவை வருமாறு:

✱ இலங்கையின் ஆட்புல எல்லைக்குட்பட்ட வடபகுதியிலுள்ள மன்னார் குடா, பாக்கு நீரிணை, பாக்கு விரிகுடாப் பகுதியில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து, இலங்கை அரசினால் தடை செய் யப்பட்டுள்ள இழுவை மடிகளையும், தங்கூசி வலைகளையும் பயன்படுத்துவது முற்றா கத் தடை செய்யப்பட வேண்டும்.

✱ அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதனால் எமது கடல்சார் வளங்கள் விரைவாக அழிவுக்குள்ளாக்கப்படுவதுடன் எமது மீனவர்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படுகிறது. இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றது. இது முற்றாக தவிர்க்கப்படுதல் அவசியம்.

✱ வட பகுதியில் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 125,000இற்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக அத்துமீறி நுழைவதனால் எமது மீனவர்கள் முற்றாக தமது தொழில்களை இழந்து தமது அன்றாட வருமானத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதுவும் தவிர்க்கப்படவேண்டும்.

✱ இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைவதனால், எமது மீனவர்களின் உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு நட்டஈடு பெற்றுத்தர ஆவன செய்யப்பட வேண்டும்.

✱ இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு அர்த்தபூர்வமான பேச்சுக்களை இரு பகுதி மீனவர் பிரதிநிதிகளும் மேற்கொள்ள அரசு மட்டத்திலான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

✱ 2003 தொடக்கம் இன்றுவரையும் இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கு முக்கிய பங்காற்றிவரும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இரு நாட்டு அரச மட்ட பேச்சுக்களிலும் உள்வாங்கப்பட வேண்டும்.

இதேவேளை -

வட பகுதி மீனவர் கூட்டமைப்பு இந்தியத் தூதுவருக்கு நேற்று மாலை மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-14-115)

## தென்மராட்சியில் பண்ணிசைப் போட்டி

தென்மராட்சி,மார்ச்17

தென்மராட்சி கல்வி வலயக் பாடசாலைகளின் தரம் 10,11 மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்தப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் சைவசமய கலாசார உடையுடன் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஒ-207)

# வீதிகளில் சமாந்தரப் பயணம் 16 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வீதியில் சமாந்தரமாக சவாரி செய்வோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

நேற்று மட்டும் யாழ். நீதிமன்றில் 16 பேருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. குடாநாட்டில் உள்ள வீதிகளில் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் சமாந்தரமாக சவாரி செய்வோர் வீதிக்கடமைகளில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸரால் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்படுபவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுகின்றனர். வழக்கினை விசாரணை செய்து நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுவருகின்றது.

யாழ். நீதிமன்றில் நேற்று மட்டும் 16 பேர் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா தலா 500 ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

(ம-9)

## பணத்தின் பயன்

தியாகம் மிக அவசியம். தியாகத்தை விடச் சிறந்த பண்பு வேறெதுவுமில்லை. தியாகத்தின் மூலம் எதையும் அடையமுடியும். வாழ்க்கையில் பல பொருள்கள் இல்லாமல் வாழமுடியும். ஆனால் மூச்சு இல்லாமல் வாழ இயலாது. மூச்சை உள்ளேயிழுத்தால் அதனை வெளியேற்றவும் வேண்டும். உணவை உட்கொள்கிறாய் பிறகு அதை வெளியேற்றாவிடில் நோய்வாய்படுவாய், இரத்தம் இடைவிடாமல் ஓரிடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இல்லாவிடில் இரத்தம் நஞ்சாகி கட்டிகள் புறப்படும். இவ்வாறு இரத்த ஓட்டம் இருப்பது தான் உடல் நலத்துக்கு அறிகுறி.



இரத்தமும் பணமும் சுழன்று கொண்டேயிருக்க வேண்டும். தண்ணீர் கூடத் தேங்கியிருந்தால் அதில் புழுக்கள் மலிந்து விடுகின்றன. பணத்தை நேரான வழியில் பயன்படுத்த வேண்டும். பலவகை சொத்துகளும் பணத்தாசையும் வீணானதாகும். பணத்தை நேரான வழியில் செலவு செய்யாவிடில் அதைத் தரைக்கடியில் புதைத்து வைத்ததற்குச் சமம்.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# 4 மாடிகளுக்கும் நோயாளரை தூக்கிக் காவும் அவல நிலை

வண்ணை, மார்ச் 17

யாழ்.போதனா வைத்தியசாலை புதிய நான்கு மாடிக் கட்டட நோயாளர் விடுதிகளுக்கு இன்னமும் 'லிப்ட்' வசதிகள் செய்யப்படாததால் நோயாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு தினமும் உட்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலை வளாகத்தில் புதிய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் இருந்த புற்று நோய் மற்றும் பெண்ணியல் நோயாளர்கள் அனைவரும் நான்கு மாடிக்கட்டட விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே அங்கு இருந்த நோயாளர்களுடன் இவர்களும் சேர்ந்துள்ளதால் விடுதி நிறைந்து வழிகின்றது.

இந்த நிலையில் மிகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்களை அந்தந்த விடுதிகளுக்கு கொண்டு செல்வதற்கு தூக்கிச் செல்ல வேண்டிய நிலையே உள்ளது. இதனால் நோயாளர்களும், அவர்களை தூக்கிச் செல்லும் ஊழியர்களும் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. மேற்படி கட்டடத்தில் முதலாம் இரண்டாம் மாடிகளில் நோயாளர் விடுதிகள் திறக்கப்பட்டுப் பல வருடங்களைத் தாண்டிய நிலையிலும் இதுவரை 'லிப்ட்' வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

புதிதாக அமைக்கப்பட இருக்கும் புதிய மாடிக் கட்டடங்களுக்கும் 'லிப்ட்' வசதிகள் பொருத்தப்படுவதற்கு முன்பாக அவசர நோயாளர்களால் நிரம்பி வழியும் நான்கு மாடிக் கட்டடத்தின் லிப்ட் வசதியை ஏற்படுத்தி பொருத்தி வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(எ-160)

புதிய வருகை...



அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வைத்தியகலாநிதி கறோலின், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குச் சென்று சத்திரசிகிச்சை மண்டபத்தைப் பார்வையிட்டார்.

# தொண்டர் படையணிப் பயிற்சி; மேலும் ஏழு பாடசாலைகள் தெரிவு

வலி.வடக்கு, மார்ச் 17

இராணுவத் தொண்டர் படையினர் பயிற்சிபெற யாழ். மாவட்டத்தில் இருந்து மேலும் ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்தப் பாடசாலை மாணவர்கள் ரந்தெனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மல்லாகம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களே இந்தப் பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து ஏழு பாடசாலை மாணவர்களும் பொறுப்பான ஆசிரியர்களும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். கடந்த முப்பது வருடகால இடைவெளியின் பின்னர் இத்தகைய பயிற்சிகள் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் இலங்கை இராணுவத் தொண்டர் படையணியைக் கொண்டிருந்த பாடசாலைகள் சில இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

# 12 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு சண்டிலிப்பாயில் வெற்றிடங்கள்

நவாலி, மார்ச் 17

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பன்னிரண்டு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பதவிக்கு வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படவில்லை.

ஜே/130,135,137,139,144, 146,148,149,151,152,155,156, ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களுக்கு வேறு பிரிவிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களே பதில் கடமையாற்றி வருகின்றனர்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தற்போது 5071 பயனாளிகள் சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

# கொழும்புத்துறை மீன் சந்தையை புனரமைக்கக் கோரிக்கை

நாவற்குழி, மார்ச் 17

கொழும்புத்துறை மீன் சந்தையைச் சுற்றி உடைந்த கற்குவியல் காணப்படுவதால் மீன் வியாபாரிகளும், சந்தைக்கு மீன் வாங்க வருபவர்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் இந்தப் பிரதேசம் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் மீன் வாங்க வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் மீன் விற்பனையாளர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் வேறு இடங்களில் உள்ள மீன் சந்தைகளுக்கு மீன் வாங்க மக்கள் செல்வதால் சந்தைக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (எ-121)

# மீள்குடியமர்ந்த 3,500 குடும்பங்களுக்கு ரூபா 52 மில்லியன் செலவில் மின்சார வசதி

யாழ்ப்பாணம், மார்ச் 17

போரின் பின் மீள்குடிமர்ந்த 3 ஆயிரத்து 583 குடும்பங்களுக்கு 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் 51.954 மில்லியன் ரூபா செலவில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் யாழ்.பிராந்திய பொது முகாமையாளர் டி.கே.பி.யு குணதிலக தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 339 குடும்பங்களுக்கு 7.114 மில்லியன் ரூபா செலவிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு 44.84 மில்லியன் ரூபா செலவிலும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச செயலகங்களின் ஊடாகவும் கிளிநொச்சிப் பிரதேச செயலகங்களின் ஊடாகவும் மீள்குடியமர்ந்த மக்களின் தகவல்களின் அடிப்படையிலேயே இவர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது குடியமர்ந்த குடும்பங்கள் போரின் முன் மின்சாரம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ஒருவருடம் இலவச மின்சாரம் வழங்கப்படும். கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலகங்கள் உறுதிப்படுத்தும் பட்சத்தில் இவர்களுக்கான இலவச மின்சாரங்கள் வழங்கப்படும்.

மின்சார வசதிகள் இல்லாத கிராமங்களுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்படும்.வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும். வடக்கின் வசந்தம் திட்டத்தில் கிராமங்களுக்கென 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வட பகுதியில் மின்சார சேவையில் மூன்றில் ஒரு பங்கு முற்றிலும் பூர்த்தியடைந்துள்ளது. மிகுதி விரைவாகப் பூர்த்தி செய்யப்படும்.

2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் 'லக்ஸபான' மின்சாரம் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படும் என்றார் பொதுமுகாமையாளர். (ஒ-311)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஆய்வு கூடம் நவீனமாகும்

தென்மராட்சி, மார்ச் 17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆய்வுகூடம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆய்வு கூட அபிவிருத்திப் பணிக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

# கண்களைப் பரிசோதிக்க வருவோர் சிகிச்சை பெறாது திரும்பும் நிலை

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அவலம்

வண்ணை, மார்ச் 17

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள கண் பரிசோதனைப் பிரிவில் நெருக்கடி நிலைமை ஏற்படுகிறது.

இதனால் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் ஆஸ்பத்திரிக்கு வருகை தந்து சிகிச்சையைப்பெறமுடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றார்கள்.

கண் வைத்திய நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள், சிற்றூழியர்கள் பற்றாக்குறை நிலவும் அதேவேளை வளப்பற்றாக்குறைகளும் இருந்து வருகின்றன.

கண் சிகிச்சைப் பிரிவு இயங்கி வந்த மேலும் ஒரு தொகுதிக் கட்டடங்கள் அமைந்திருந்த இடம் நவீன மயப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள போதும் இன்னமும் அதனைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாள்கள் தள்ளிச்செல்வதால் சிகிச்சை பெறுவதற்காக நாளாந்தம் வருகை தரும் கண்நோயாளர்கள் பல அசௌகரியங்களுடன் வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றார்கள்.

தீவகம், வலிகாமம் வடக்கு மற்றும் மேற்கு, கிழக்கு வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் இருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் அதிகாலை 5 மணிக்கு பிரயாணம் செய்து யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவுக்கு வருகின்றனர். இங்கு வந்து கால்கள் கடுக்க பலமணி நேரம் தவம் கிடந்தாலும் சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பும் நோயாளர்கள் விசனமடைகின்றனர்.

புதிய நம்பர் மற்றும் பழைய நம்பர் இரண்டுக்குமாக தலா 35 நம்பர்கள் வீதம் தினமும் 70 நம்பர்கள் வழங்கப்படுகின்றன.

இவை தவிர விடுபட்டுப்போன அதிமுக்கிய நோயாளர்களை இறுதியாக ஒவ்வொரு பிரிவிலும் தலா 15 பேர்கள் வீதம் மேலும் முப்பது நோயாளர்கள் நாளாந்தம் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எது எப்படியாயினும் நாளாந்தம் தூர இடங்களில் இருந்து வருகை தரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதென்பது தொடர்கதையாக நிகழ்கிறது என மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-166)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்கப்படாததால் விரக்தி நிலையில் தொண்டர் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நிரந்தர நியமனம் வழங்கப் படாமையால் தாம் விரக்தி நிலையை அடைந்துள்ளதாக யாழ்.மாவட்டத் தொண்டராசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

## போராடப் போவதாக அறிவிப்பு

2009 ஆம் ஆண்டு வழங்கப் பட்ட ஆசிரிய உதவியாளர் நியமனத்தின்போது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளோம். நீண்ட காலமாகச் சேவையாற்றிவரும் நாம் அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவதால் விரக்தி நிலையை அடைந்துள்ளோம்.

எமக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக அரசியல் வாதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் இதுவரையில் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை .

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வடமாகாண மேலதிக கல்விப்பணிமனை முன்பாக நிரந்தர நியமனம் தொடர்பான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தோம். இதற்குக் கூட எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எமது நிலைப்பாட்டைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாதுவிடில் வடமாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக தொடர்ச்சியாக உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அதில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-10)

## வாழை நாரிலிருந்து உற்பத்திப் பொருள்கள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.மாவட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் வாழை நாரிலிருந்து உற்பத்திப் பொருள்களை உருவாக்குவதற்கான பயிற்சிப் பட்டறை விரைவில் நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் இந்திய துறை சார்ந்த வளவியலாளர்கள் நான்கு நாள்கள் பயிற்சிப்பட்டறையாக நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் தமது பெயர் விவரங்களை யாழ்ப்பாண தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டடத்தில் உள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## கைதடி விபத்து சந்தேக நபருக்கு விளக்கமறியல்

கைதடியில் இடம்பெற்ற வான்- மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் பலியான சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இளைஞரை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இளைஞரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு உத்தரவிட்டார். கைதடி தபால் நிலையச் சந்தியில் இடம்பெற்றவிபத்தில் கைதடி கிழக்கைச் சேர்ந்த மகேந்திரன் கஜதீபன் என்னும் மாணவனின் மரணம் தொடர்பாக இந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

ஆரம்பம்...



காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட தையல், அழகியல் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் சி.பெலிசியன் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கிறார்.

## யாழ்.பல்கலையில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 17

புத்தகக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

இந்தக் கண்காட்சியை துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (ஒ-4-323)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இசை, இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார பேரவையினால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பாடசாலைகள், குழுக்கள் மன்றங்களுக்கிடையில் இசை, நடன, இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வாய்ப்பாட்டு, நடனம், இலக்கியம், கவிதை, நாடகம்,பாரம்பரிய நாடகம், பாடசாலை மட்ட நாடகம் எனப் பல்வேறு போட்டிகள் நடத்தப்படும்.

வயது வேறுபாடு அடிப் படையில் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாகவும், மன்றங்கள், குழுக்களில் உள்ளவர்கள் கிராம அலுவலரூடாகவும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பப்படிவங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

## உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தபின் பொறியியல் பீட பணி ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 17

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த கையோடு யாழ்.பல்கலைக் கழகத்தில் பொறியியலாளர் பீடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாகத் தடைப்பட்டுப் போயிருந்தன. தற்போது கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் அந்த நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

இதற்கென இந்திய அரசு 250 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. மிகுதி நிதியை அரசு ஒதுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்பாடுகள் யாவும் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நிறைவு பெற்றதும் பொறியியல் பீடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

## இதனையும் இப்போது களவாடுகிறார்கள்

சங்கானை, மார்ச் 17

எத்தனையோ களவுகள் இங்கு இடம்பெறுகின்றன அவை போதாதென்று தற்போது பனையில் உள்ள கள்ளையும் களவாடும் கும்பல் ஒன்று புறப்பட்டுள்ளது. இந்தக் கும்பல் சங்கானையில் நடமாடி வருவதால், சீவல் தொழிலாளர்கள் தமது வருமானத்தை இழந்து செய்வதறியாமல் உள்ளனர்.

சங்கானைப் பகுதியில் கடந்த சிவராத்திரிக்கு முதல் நாளும் அதற்கு அடுத்த நாளும் பின்னர் மூன்று நாள் கழித்தும் சீவல் தொழிலாளி ஒருவரின் கள் பனையில் இருந்து இரவோடிரவாகத் திருடப்பட்டுள்ளது.

அதிகாலையில் சீவல் தொழிலுக்குச் சென்றவர் பனையின் கீழ் கள் முட்டிகள் வெறுமனே உடைந்து உள்ளதைப் பார்த்த அவர் சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ந்து இவ்வாறான செயல் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சீவல் தொழிலாளர்கள் தமது வருமானத்தை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (உ)

# சோலைவரிப் பத்திரம் இல்லாததால் வீடமைப்புத் திட்டத்தை இழக்கும் நிலை

## யாழ்.மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தினை நாவாந்துறை மக்கள் இழக்கும் அபாய நிலைக்கு அவர்களிடம் சோலைவரிப் பத்திரம் இல்லாமையே காரணம் என யாழ்.மாநகரசபை தெரிவித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி உதயனின்' 7 ஆம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக விளக்கமளித்து மாநகர சபை முதல்வர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மாநகர சபையை பொறுத்த வரை வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகள் மிகவும் அவசியமானவை.

காணியின் உரிமையை நிலைநிறுத்தும் காணியின் உறுதிப் பத்திரம், காணியின் நில அளவைப் படம், வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிப்பவரின் பெயர் சோலைவரிப் பதிவேட்டில் இருப்பதனை உறுதிப்படுத்தல், காணியின் பரப்பளவு 10.5 குளிக்கு(6பேச்) குறையாமல் இருப்பதுடன் காணிக்கான போக்குவரத்துப் பாதை 10 அடிக்குக் குறையாமல் இருப்பதும் அவசியம்.

நாவாந்துறை வடக்கில் வீட்டுத் திட்டத்துக்கு 29 பேர் தெரிவு செய்யப்பட்டதாக யாழ். பிரதேச செயலர் அறிவித்திருந்த போதும் இதுவரை 17 பேர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்குச் சோலைவரி இலக்கங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

சோலைவரி இலக்கங்களை பெற்றுக்கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட சகல ஆவணங்களையும் மாநகர சபையில் ஒப்படைத்து பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

பதிவுகளை மேற்கொள்ள மாநகரசபை ஒருபோதும் நடமாடும் சேவையை நடத்த முடிவு செய்யவில்லை. அலுவலக நாள்களில் மாநகரசபை அலுவலகம் இந்தச் சேவையை உடனுக்குடன் வழங்கத் தயாராகவுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் பதிவுகளை மேற்கொண்டால் கட்டட அனுமதி வழங்குவதில் எந்தத் தாமதமும் இருக்காது என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் பின்னர் வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் ஒளிவீசுவது எப்போது?

(நேற்றைய தொடர்ச்சி)

யுத்தத்தில் இழக்காத தமது உயிர்களைத் தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டுமானால் இவர்களுக்கு உணவு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

ஆனால் அதனைப் பணம் கொடுத்து வாங்கும் சக்தி இவர்களிடம் இப்போது இல்லை. தமது வாழ்வாதாரங்களைப் படிப்படியாகக் கட்டியெழுப்பி தமது இயல்பு வாழ்க்கைக்கு இவர்கள் திரும்பும்போதுதான் அது சாத்தியமாகும்.

ஆகவே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற வாக்குக்கேற்ப இந்த மக்களின் வயிற்றில் அடிக்காது தொடர்ந்தும் உணவு நிவாரணத்தை வழங்குவதே அரசின் முக்கிய கடமையாகும்.

வன்னி மக்களின் முக்கிய தொழிலாக விவசாயமே விளங்குகின்றது. இதற்கேற்றாற் போல செழிப்பான நிலவளமும், குறைவில்லாத நீர்வளமும் இங்குண்டு. மீள்குடியமர்ந்த மக்களும் இம்முறை ஆர்வத்துடன் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டனர். சிறந்த உழைப்பாளிகளான இவர்கள் விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் தாம் இழந்த வாழ்வாதாரங்களை மீட்டு விடலாமென நம்பினர். அரசும் இதற்கேற்றாற் போலப் பல்வேறு உதவித் திட்டங்களை அறிவித்தது.

விவசாயிகள் தமது விவசாய நிலங்களைப் பண்படுத்துவதற்கு எண்ணாயிரம் ரூபா நிதியுதவி, மானிய விலையில் உரங்கள், இலவச தானிய விநியோகம், புதிய ரக நெல் இனம் அறிமுகம், கமக்காரர் அமைப்புக்களுக்கு இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் வழங்குதல், நியாய விலையில் நெல் கொள்வனவு, வங்கிக் கடன் உதவிகள் ஆகிய அறிவிப்புகள் முக்கியமானவை.

இது தவிர இந்தியாவின் 500 உழவு இயந்திரங்களின் விநியோகம் தொடர்பான அறிவித்தலும் வெளியாகியது.

இந்த அறிவித்தல்கள் யாவும் மீள்குடியமர்ந்த மக்களின் நம்பிக்கைகளுக்கு உரமூட்டின.

அவர்கள் தீவிரமாகவே பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டனர். முக்கியமாக நெற் பயிர்ச்செய்கையே அவர்களது பிரதானமான விவசாய முயற்சியாக அமைந்தது. விளைச்சலை அதிகம்பெறும் நோக்கில் 'ஆட்டக்காரி' என்ற காரணப்பெயர் கொண்ட நெல்லினமும் அதிகளவில் பயிர்செய்யப்பட்டது.

ஆனால் இந்த ஆட்டக்காரி தங்களின் நம்பிக்கைகள் எல்லாவற்றுக்கும் ஆப்பு வைப்பாளென்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

'கெட்ட குடியே கெடும்' என்ற சொல்லுக்கு ஏற்றாற் போல இந்த மக்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் சிதைப்பதுபோன்று இயற்கையும் பெருமழை உருவத்தில் சதி செய்தது. கொட்டித் தீர்த்த பெருமழை தறப்பாள் மற்றும் தகரக் கொட்டில்களில் தஞ்சமடைந்திருந்த மக்களை மட்டுமல்ல நெல்வயல்களில் அசைந்தாடிக் கொண்டிருந்த நெற் பயிர்களையும் பதம் பார்த்தது. பல நெல்வயல்கள் முற்றாக அழிந்தவை. பகுதியளவு அழிந்தன பல. இதன் விளைவாக நெல் விளைச்சலில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

மீள்குடியமர்ந்த மக்களின் நம்பிக்கையும் தகர்ந்தது.

குறிப்பாக அதிக விளைச்சல் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் அதிகளவில் பயிரிடப்பட்ட ஆட்டக்காரி என்னும் புதியவகை நெற்பயிர் மழை வெள்ளத்துக்கு ஈடு கொடுக்க முடியாது பேரழிவைச் சந்தித்ததால் இதனைப் பயிரிட்ட விவசாயிகள் பெரு நட்டத்தை எதிர்கொண்டனர்.

வெள்ள அழிவிலிருந்து தப்பிய ப்யிர்களை அறுவடை செய்யலாமென்றால் மீண்டும் மழையின் வடிவத்தில் சோதனை காத்திருந்தது. இதையெல் லாம் ஒருவாறு சமாளித்து நெல் அறுவடையை முடித்தனர்.

அறுவடை செய்த நெல்லை விற்றுத் தாம் பெற்ற கடன்களை அடைக்கலாமென விவசாயிகள் எண்ணியிருந்தனர்.

ஆனால் இந்த எண்ணத்திலும் இடி வீழ்ந்தது. விவசாயிகளிடமிருந்து அரசினால் குறிப்பிட்ட விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு எவரும் முன்வரவில்லை. 'தவிச்ச முயல் அடிக்கும்' முயற்சியில் தனியார் வியாபாரிகள் ஈடுபட்டனர். இதனால் ஏற்கனவே பாதிப்பிலுள்ள விவசாயிகள் மேலும் நட்டத்தினை எதிர்கொள்ள வேண்டிய அவலத்துக்குத் தள்ளப்பட்டனர். நெல் சந்தைப்படுத்தும் சபையோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ இவர்களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பத்திலேயே முன்வந்திருந்தால் விவசாயிகள் நெல் விற்பனையில் நட்டத்தை எதிர்கொண்டிருக்க மாட்டார்கள்.

இப்போது தாம் பெற்ற கடன்களை எவ்வாறு அடைப்பது? தமது வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்வது? என்ற கவலைகள் விவசாயிகளின் மனங்களை அரித்துக் கொண்டிருக்கின்றன.

அத்துடன் ஏற்கனவே அறிவிப்பு வெளியிட்டதன் பிரகாரம் உழவு கூலியான எண்ணாயிரம் ரூபா வழங்கப்படாத தால் கடனடிப்படையில் உழவு வேலைகளை மேற்கொண்ட உழவு இயந்திர உரிமையாளர்களின் பணத்தைக் கூடக் கொடுக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். மாதங்கள் பல கடந்துவிட்டதால் உழவு இயந்திர உரிமையாளர்களின் நெருக்குதலும் இவர்களைச் சஞ்சலத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதைவிட மேட்டுப் பயிரான காய் கறிகள், தானியங்கள் ஆகியனவும் கடந்த பெரு மழையால் அழிந்து போயின. இதனால் இவற்றின் விலைகளும் வன்னியில் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் இவற்றைப் பயிரிட்ட விவசாயிகளும் பெரு நட்டத்தை எதிர்கொண்டனர்.

இவ்வாறு மீள்குடியமர்ந்த மக்களின் விவசாய முயற்சிகள் யாவும் பெரும் நட்டத்தினையே அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளன. ஆகவே இவர்களுக்குரிய நட்டஈட்டினை வழங்குவது அரசின் கடமையாகும். இல்லாவிட்டால் இந்த மக்கள் மீள முடியாத கடன் சுமையிலும் வாழ்வாதாரப் பிரச்சினையிலும் சிக்கிச் சின்னபின்னமாவது உறுதி.

நாம் இது வரை மீள்குடியமர்ந்த வன்னி மக்களின் முக்கிய தேவைகளான உறைவிடம், உணவு ஆகியன தொடர்பாக ஆராய்ந்தோம். ஆனால் இன்றும் பல தீர்வுகாண வேண்டிய தேவைகளும் உள்ளன. (தொடரும்)

ராஜராஜன்

# மரண அறிவித்தல்

# மரியாம்பிள்ளை ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.மாநகர சபை)



யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டத்தில் வசித்தவரும் தற்போது பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட மரியாம்பிள்ளை ஜேம்ஸ் 11.03.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - செல்லம்மா, பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - பொன்னுமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திரேஸ்மலர் அவர்களின் அன்புக் கணவரும் ரமேஸ் (ஜேர்மனி), நொய்லின் (ஜேர்மனி), சிறாணி (பிரான்ஸ்), பவானி (ஜேர்மனி), மாலினி (லண்டன்) ஆகியோரின் தந்தையும் காமன், காலஞ்சென்ற திவ்வியராஜ், யூட், செல்வம், நவீசன் ஆகியோரின் மாமனும் கிறிஸ்ரியன், ரற்றியானா, ரன்யா, கவிதா, வினோ, கெவின், சுஜி, ரவி, றொசான், றொஸ்மிளா, பானுஜா, தனு, சிரோமி, மினோஸ், மாதேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் செல்லி (இலங்கை), குமார் (இலங்கை), தேவா (கனடா), சிறி (லண்டன்), ஜெயா (இலங்கை), கரன் (இலங்கை), கிரேசியன் (இலங்கை), றொகான் (இலங்கை), நியுட்டன் (இலங்கை), யஸ்மின் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவம், ஜோதி, காலஞ்சென்றவர்களான பொன்ராசா, யோகம், செல்வம், ராணி, பவி, றொபேட் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.03.2011) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியில் இருந்து 1.30 மணிவரை Route de Jallans, 28205 Chateaudun, France இல் பார்வைக்காக வைக்கப்பட்டு மாலை 2.30 மணியளவில் Rue de la Vallee, 28220 Douy, France இல் திருப்பலியுடன் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| ரமேஸ் | 004921045083176 |
| நொய்லின் | 004928636835 |
| சிறாணி | 0033237661554 |
| பவானி | 00492862416070 |
| மாலினி | 00442086833610 |
| யஸ்மின் (சகோதரி) | 00442476594697 |

தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களாக அபிவிருத்தியில்லை; வடக்கு மக்கள் நெருக்கடி நிலையில்

## ஒட்டுசுட்டானில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

முல்லைத்தீவு, மார்ச் 17

தென்பகுதியுடன் ஒப்பிடும் போது வடக்கிலே கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாததால் இங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் உள்ளனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 90 குளங்கள் புனரமைக்கப்படுவதன் ஓர் அங்கமாக ஒட்டுசுட்டான் கொடிதாங்கிய குளத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் குளமானது 128 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. ஆனால் அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெறாததால் விவசாயிகள் இக்குளத்தின் மூலம் பயனடைய முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே 10.7 மில்லியன் ரூபா செலவில் இக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் இக்குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் மக்கள் விவசாயத்தில் நல்ல பயனைப் பெறமுடியும்.

அத்துடன் இங்குள்ள அனைத்து வீதிகளும் 'காப்பற்' வீதிகளாக மாற்றம் செய்யப்படும். சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையும் விரைவில் நடைபெறுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-500)

# நஷ்ட ஈடு கிடைக்காமையால் கவலையுறும் பூநகரி விவசாயிகள்

பூநகரி, மார்ச் 17

பூநகரி கமநலசேவை நிலைய எல்லைக்குள் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கடும்மழை காரணமாகப் பலத்த பயிர் அழிவைச் சந்தித்தபோதும் இதுவரை நஷ்டஈடு எதுவும் வழங்கப்படவில்லையெனக் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி கமநலசேவை நிலைய எல்லைக்குள் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் தமது வாழ்வாதாரம் வளம்பெறுமென்ற நம்பிக்கையுடன் இந்த முறை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக நெற்பயிர்கள் அழிவைச் சந்தித்ததுடன் அறுவடையும் பெரும் வீழ்ச்சியைக் கண்டது. இதனால் அனேகமாக எல்லா விவசாயிகளும் நஷ்டமடைந்துள்ளனர். நெற் செய்கைக்கெனத் தாம் வாங்கிய கடன்களைக் கூட அடைக்க முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

இதனால் தமக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இவர்கள் விடுத்தனர்.

ஆனால் நஷ்டஈடு எதுவும் இது வரை வழங்கப்படாமையால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். மேலும் தற்போது பெய்துவரும் மழை காரணமாக நெல் அறுவடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் மழை நீரை நம்பியே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-420)

# ஆமை வேகத்தில் மின்சார வேலைகள்

வட்டக்கச்சி, மார்ச் 17

வட்டக்கச்சிப் பகுதிக்கான மின்சார வேலைகள் ஆமை வேகத்தில் நடைபெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வட்டக்கச்சியில் ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதில் இடையில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் இரு வீடுகளுக்கு மட்டுமே மின்கம்பங்கள் நட்டப்பட்டு வயர்களும் இழுக்கப்பட்டுள்ளன. ஏனைய கிராம சேவையாளர் பிரிவுக்குள் உள்ள வீடுகளுக்கு எதுவுமே நடக்கவில்லை. ஏனைய பகுதிக்கு மின்கம்பங்கள் நாட்டத் தொடங்கியதும் மக்கள் மிகவும் ஆவலுடன் எமது பகுதிக்கும் மின்சாரம் கிடைக்கப் போகின்றது என எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இன்றுவரை பயன் ஏதும் இல்லை. அதேவேளை இன்றும் இரு மாதத்துக்குள் வட்டக்கச்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விடுமெனப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் பல மாதங்கள் கடந்தும் அதற்கான வேலைகள் நடைபெறவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-450)

## உற்சாகமான நடை...



நல்ல பயிற்சி: கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது மாணவர்கள் அணிநடையில் ஈடுபட்டுள்ளனர். (450)

# வங்கிக் கடன்களை செலுத்துவதில் சிரமம்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களைச் செலுத்துவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டின் பெரும்போகத்தின்போது வங்கிகள் விவசாயிகளுக்குத் தலா ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வரையான கடன்களை வழங்கியிருந்தன. ஆனால் பெரும் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நெற்பயிர்களுக்குப் பேரழிவுகள் ஏற்பட்டன.

இதனால் விவசாயிகள் அறுவடை செய்யப்படும் நெற்பயிர்களில் போதிய விளைச்சலைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலையில் வங்கிகளில் இருந்து கடன்களைச் செலுத்தும்படி கடிதங்கள் விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விவ்சாயிகள் வங்கிக் கடன்களை செலுத்துவதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். (க-410)

# வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்

அக்கராயன், மார்ச் 17

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லையெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெரும் ஆபத்திலிருந்து தப்பி இந்தப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியாக வன்னேரிக்குளம் உள்ள போதிலும் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து சிறந்த போட்டி நிகழ்வை நடத்தியுள்ளனர்.

எம்மிடமுள்ள வளங்களை நாம் எப்போதும் பயன்படுத்த வேண்டும். இந்தப் போட்டி நிகழ்விலும் இங்குள்ள வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நான் பாடசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவேன். தமிழர்கள் ஓரணியில் நின்று தமது பலத்தை வெளிப்படுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு இணைந்ததான அரசியல் தீர்வையே தமிழ்மக்கள் இலக்காகக் கொண்டுள்ளனர். அதற்காகவே தியாகங்களையும் அவர்கள் செய்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலையின் முதல்வர் திருமதி ஜெ. சகாயமலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகப் பழைய மாணவனும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபருமான அ.கைலாயப்பிள்ளை கிளிநொச்சி, கனகபுரம் மகாவித்தியாலய அதிபரும் பழைய மாணவனுமாகிய ஐ.குகானந்தராசா, வன்னேரிக்குளம் கிராம அலுவலர் சு.சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள், சான்றிதழ்களையும் வழங்கினர்.

போட்டிகளில் சோழன் இல்லம் 976 புள்ளிகளுடன் முதலாமிடத்தினையும் 914 புள்ளிகளுடன் சேரன் இல்லம் இரண்டாம் இடத்தினையும் பெற்றன. (க-410)

# வன்னேரிக்குளம் ம.வி. தரமிறங்குவதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு

அக்கராயன், மார்ச் 17

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் தரமிறக்கப்படுமென்ற தகவலுக்கு கிராம மக்கள் தங்களின் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் இந்தப் பாடசாலைக்கு வருகைதந்த கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த குழுவினர் பாடசாலையின் தற்போதைய நிலைகுறித்து ஆய்வு செய்தனர்.

அதன்போது இந்தப் பாடசாலையில் தற்போது கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் தொகையினைக் கருத்தில் கொண்டு பாடசாலை தரமிறக்கப்படுமென்ற தகவலைத் தெரிவித்ததாகப் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். [illegible] கேள்வியுற்ற வன்னேரிக்குளம் கிராம மக்கள் இதற்கு எதிராகத் தங்களின் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 500 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வந்தனர். தற்போது சுமார் 169 மாணவர்களே உள்ளனர். இந்த மாணவர் தொகை வீழ்ச்சி காரணமாகவே பாடசாலையைத் தரமிறக்குவதற்கான முயற்சி [illegible] சமூக நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.

தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலமைந்துள்ள ஐயனார்புரம் பாடசாலையிலும் தரம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

வன்னேரிக்குளம் ஒரு சிறிய கிராமமாக இருப்பதோடு சுமார் 469 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளங்களின் குறைபாடு ஆகியவற்றை நீக்குவதன் மூலம் இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்தையும் பாடசாலையின் தற்போதைய நிலையையும் உயர்த்த முடியுமென்பதே பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கருத்தாக உள்ளது. (க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் போக்குவரத்துச் சேவை நோனாவத்தையில் இடைநிறுத்தம்

தலவாக்கலை, மார்ச் 17

தலவாக்கலை நகரிலிருந்து சின்னராணி தோட்டம் வரையிலான தனியார் துறையினரின் போக்குவரத்துச் சேவை நோனாவத்தையில் இடைநிறுத்தம் செய்யப்படுகின்றது. ஆனால், இங்கு சின்னராணி வத்தை வரை பயணச்சீட்டு வழங்கப்பட்டாலும் அவர்களை இடை நடுவிலே இறக்கிவிட்டுச் செல்கின்றனர்.

தனியார் துறையினரின் இந்த செயற்பாடு குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் கிளென்மொர் தோட்ட அமைப்பாளர் கே.தம்பிராஜ் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பாக முன்னணியின் மத்திய மாகாணசபை உறுப்பினரும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளருமான முரளிரகுநாதன் தேசிய போக்குவரத்து ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். இது தொடர்பில் கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முரளிரகுநாதன் தெரிவித்துள்ளார்.



கம்பளையில் குடும்ப பொருளாதார மையங்களை ஆரம்பிக்கும் வேலைத்திட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதமர் டி. எம். ஜயரட்ன மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கின்றார். (204)

# மக்கள் சமமான உரிமையுடன் வாழ்வதற்கு கல்வி நிலையை உயர்த்த வேண்டும்

இந்த நாட்டிலே தமிழ் மக்களும் சமமான உரிமையுடன் வாழக்கூடிய சமூகமாக மிளிர வேண்டுமாகவிருந்தால் எமது கல்வி நிலையை உயர்த்திக் கொள்வது சாதகமாக இருக்கும்.

இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா.

பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று எல்லோரும் கணித, விஞ்ஞான பிரிவுகளிலேயே கல்வி கற்க முனைகின்றனர். அது நல்லது; ஏற்றுக்கொள்கின்றோம்.

இந்தக் கணித, விஞ்ஞானக் கல்வியைப் படிப்பதன் மூலம் நாங்கள் நிச்சயமாக வைத்தியர்களாக, பொறியியலாளராக வருகின்றோமே தவிர, நிர்வாக அதிகாரிகளாகவோ, சட்டத்தரணிகளாகவோ, கணக்காளர்களாகவோ வருவதற்குத் தவறுகின்றோம்.

எல்லோரும் விஞ்ஞானப் பிரிவில் படிக்கக் கூடியதாக இருக்கின்ற போதிலும் எல்லோரும் வைத்தியர்களாக வர முடியாது.

இன்று விஞ்ஞானத்தை விட நாடகமும் அரங்கியலும், நடனம், சித்திரம் என்பனவற்றில் பட்டப்படிப்பை மேற்கொள்பவர்கள் இலகுவில் தொழில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இந்த நாட்டில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் இருக்கையில், நேற்று வெளிவந்த இவர்கள் வேலை பெற்றுச் செல்கின்றனர். காரணம் அவர்கள் தெரிவு செய்து கொண்ட பாடப் பிரிவுகளும் அவர்களது பாடங்களுமேயாகும்.

விஞ்ஞானம் படித்த பட்டதாரிகள் கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையில் கடந்த ஆறு வருட காலமாக எதுவித வேலையும் அற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 3ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரச வேலை மட்டும்தான் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உள்ளவர்கள். இதனால்தான் இந்தப் பட்டதாரிகள் இன்னும் வேலையற்று இருக்கின்றனர்.

இவர்களின் எண்ணம் என்று மாறுகின்றதோ அன்றுதான் பட்டதாரிகளின் அந்த வேலையில்லாப் பிரச்சினை தீரும் என நான் நினைக்கின்றேன்.

கல்வியில் முன்னேறுவதற்கு எப்படியான நடவடிக்கைகளை எமது மாவட்ட மக்கள் எடுத்தாலும் அதற்கு உறுதுணையாக இருந்து உதவி செய்வதற்கு நான் நிச்சயமாகத் தயாராக இருக்கின்றேன் -என்றார்.

# சியம்பலாபிட்டியில் மதுவடிசாலை முற்றுகையில் இருவர் கைது

சியாம்பலாபிட்டிய பிரதேசத்தில் இயங்கிவந்த சட்டவிரோத மது வடிநிலையமொன்றில் 4 லட்சம் லீற்றர் சோடாவும் 6 லட்சம் ரூபா ஸ்பிரிட்டும் கேகாலைப் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டன.

சியாம்பலாப்பிட்டிய ஹபூது கலப் பிரதேசத்தில் நீண்ட காலமாகவே இந்த மதுவடி நிலையம் இயங்கி வந்துள்ளது எனக் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விவசாய பீடம்
## விரிவுரைகள் ஆரம்பம்

கீழ்வரும் கல்வியாண்டு யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 21.03.2011 திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

* முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு -2009/2010
* இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு- 2009/2010
* மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு - 2009/2010
* நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு - 2009/2010

16.03.2011 (40-19-24) (சி/576826) பதிவாளர்



## வரைவற்ற புத்தூர் கிழக்கு மகாத்மா காந்தி சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுச் சட்ட விதிக்கோவையின் 18 (1) விதியின் கீழான பொதுச்சபைக் கூட்டம்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் ACCD/NJ/49 இலக்கமுடைய 07.03.2011 ஆம் திகதிய கடிதம் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. பிரதீஸ்குமரன் ஆகிய எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தை கூட்டுறவுச் சட்ட விதிக்கோவையின் 18 (1) விதியின் கீழ் 22.03.2011 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனது தலைமையில் கீழ்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைவாகக் கூட்டுவதற்கு அழைக்கின்றேன்.

காலம்: 22.03.2011 செவ்வாய்க்கிழமை
இடம்: சுயதொழில் உற்பத்தி நிலைய மண்டபம், ஈஸ்வரன் கோயிலடி, புத்தூர் கிழக்கு.
நேரம்: முற்பகல் 10 மணி

நிகழ்ச்சி நிரல்
01. மௌன இறைவணக்கம்
02. தலைமை உரை
03. சங்க நெறியாளர் குழுவின் செயற்பாடு பற்றி ஆராய்தலும், முடிவெடுத்தலும்
04. நன்றியுரை

இந்தக் கூட்டத்துக்கு அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம்: வே. பிரதீஸ்குமரன்,
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி-576885) (45)


# தோட்ட தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசுக்குச் சொந்தமான 11 தோட்டங்களில் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வேண்டுகோள்கள் பலவற்றை முன்வைத்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை தோட்டச்சேவைகள் சங்கத்தின் தலைவர் எம்.பீ.செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி உட்பட தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணத்தை உரிய நேரத்தில் வழங்காமை, மருத்துவக் கொடுப்பனவுகளை வழங்காது புறக்கணித்தல் போன்றவற்றுக்கு எதிராகவே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204)


## மரண அறிவித்தல்

### திருமதி துரைசிங்கம் தெய்வநாயகி



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் தெய்வநாயகி அம்மாள் (பவளம்) 15.03.2011 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லப்பு-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் சுனிதா (மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), ரதன் (இ.போ.ச, காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான ஆசிரியமணி வை.பொன்னையா (ஓய்வுபெற்ற அதிபர், சேர் கனகசபை வித்தியாலயம்), வள்ளியம்மை ஆகியோரின் பெறாமகளும் கதிர்காமத்தம்பி, பரமேஸ்வரி, குகநேயன் (லண்டன்), ஜெகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசேந்திரா, சண்முகநாதன் (உரிமையாளர், யசிவர்த்தக நிலையம்), இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான வேலாயுதம், இராசம்மா, விநாயகமூர்த்தி, திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னையா வீதி, பன்னாலை,
தெல்லிப்பழை.
(40-20-22) (1267)
தகவல்:
குடும்பத்தினர்.



## கட்டடங்கள் வாடகைக்கு

சுன்னாகம் நகருக்கு அண்மையில் வியாபார ஸ்தாபனங்கள் அமைப்பதற்கு பொது நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ள கட்டடங்கள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0776137499
0773740773



## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
04 ★ 04 ★ 1945

மறைவு
23 ★ 03 ★ 2005



### அமரர் செல்லத்துரை யோகேஸ்வரநாதன்

(செயலாளர், வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி)

பண்பு பாசத்துடனே எம்மை வழி நடத்திச்
சிறப்புடன் வாழ்ந்து காட்டிய எங்கள்- அப்பாவே
ஆறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பாசமான
நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாதப்பா
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.T.S.லேன்,
உரும்பிராய் தெற்கு.
(40-24-26) (1268)
உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டின் மூலம் வெற்றி, தோல்வியை சமமாக ஏற்கும் மனோபக்குவம் கிடைக்கிறது

## அமைச்சர் சரத் ஏக்கநாயக்க

கண்டி,மார்ச்17

வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் விளையாட்டின் மூலம் எமக்கு கிடைப்பதாக மத்திய மாகாண முதலமைச்சரும் மாகாண கல்வி அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி உயர் மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டு மனிதனை பூரண மனிதனாக்குகிறது. வாழ்க்கையில் வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவத்தை விளையாட்டின் மூலம் நாம் பெற்றுக்கொள்ள முடியும். எமது சமூகத்தில் முன்னிலையில் வந்துள்ளவர்கள் அனைவரும் அவர்களது சகிப்புத்தன்மை வெற்றி, தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் ஆகியவற்றாலேயே முன்னிலைக்கு வந்தனர். அதுபாடசாலைகளிலிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும் -என்றார். (204)

## சுலபமாகப் பயணிக்க...



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகச் சேதமாக்கப்பட்ட நாவலடி வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன. (204)

# எண்ணெய் அகழ்வு நிறுவனத்தால் நூல் நிலைய உபகரணங்கள் அன்பளிப்பு

மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடசாலைகளில் நிர்மாணிக்கப்படும் நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்குவதற்கு கேன் லங்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த மாவட்டத்தில் அரசால் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாடசாலை நூல் நிலையங்கள் அனைத்துக்கும் இந்த நன்கொடைகள் வழங்கப்படுமென கேன்லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் டேவிட் ஜின்ஜர் தெரிவித்துள்ளார்.

இந்த நன்கொடை சம்பந்தமாக அரசுடன் கேன் நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது.

அரசின் சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கேன் லங்காவின் சார்பில் பணிப்பாளர் டேவிட் ஜின்ஜரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

(204-5)

# குழந்தையை வாங்கிய பெண் கைது

திருமலை மொறவெவ பிரதேசத்திலிருந்து குழந்தையொன்றை வளர்ப்பதற்காக பணம் கொடுத்து வாங்கிய பெண்ணை தம்புள்ளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலொன்றின் அடிப்படையிலேயே குறித்தபெண்ணை குழந்தையுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தக்குழந்தையை வைத்தியசாலையில் பொலிஸார் அனுமதித்துள்ளதுடன் குறித்த பெண்ணிடம் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (204)

# வெண் சந்தனக் கடத்தல்; சந்தேக நபர் கைது

பதுளை,மார்ச்17

ஹாலிஎல கிரேக்மோர் தோட்டத்தில் 16 கிலோ வெண் சந்தனத்துடன் நபரொருவர் கைது செய்யப்பட்டார் என பதுளை துஷ்பிரயோகத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உரப்பை ஒன்றில் இந்தச் சந்தனத்தை இட்டு தலையில் சுமந்து சென்ற இந்த நபர் மீது சந்தேகப்பட்ட பொலிஸார் அவரைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது இந்தத் திருட்டு அம்பலமானது.

குயீன்ஸ்டவுன் தோட்டத்தில் திருட்டுத்தனமாக வெட்டப்பட்ட இந்தச் சந்தனத்தை ஹாலிஎல நகரிலுள்ள வியாபாரி ஒருவரிடம் விற்பனை செய்வதற்காக சென்றபோதே இந்த நபர் பிடிபட்டுள்ளார் எனவும், அவர் கிரேக்மோர் தோட்டத்தைச் சேர்ந்த (வயது - 45) தொழிலாளி எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளைப் பிராந்திய துஷ்பிரயோகத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி டீ.எம். ஆனந்தவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

(204-5)

# கால்வாயில் தவறி விழுந்து குழந்தை பலி

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள கழிவுக் கால்வாயொன்றினுள் தவறிவிழுந்து ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் கடந்ததிங்கட்கிழமை மாலை நடைபெற்றது. திருக்கோவில் நேருபுரம் பகுதியிலுள்ள வீடொன்றுக்கு பின்புறமாகவுள்ள கழிவு கால்வாயில் விழுந்தே மேற்படி குழந்தை பலியாகியுள்ளது. வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை காணவில்லை என்று தாயார் தேடிய நிலையிலேயே மேற்படி குழந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளது. (204)

# செங்கலடி - பதுளை வீதி சேதம்; போக்குவரத்துப் பாதிப்பு

மட்டக்களப்பு,மார்ச்17

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி - பதுளை வீதியில் உள்ள முக்கிய பாலமான கறுத்தப்பாலத்தின் நடுவில் ஒரு பகுதி 2 அடிக்கு மேல் கீழிறங்கியுள்ளது. இதனால் இவ் வீதியூடான போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வீதி கீழிறங்கியுள்ளமை காரணமாக இரண்டு பகுதிக்குமிடையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளமையினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வீதியில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு போக்குவரத்து ஒழுங்கினை மேற்கொண்டு வருகின்றனர்.

பாலத்தின் ஒரு பகுதி சிறிது கீழிறங்கியுள்ளதனைக் கவனிக்காத நிலையில்தான் இன்று இரண்டு அடிக்கும் மேல் கீழிறங்கியுள்ளது.

(204)

# யானை தாக்கியதில் பாலர் பாடசாலை சேதம்

மட்டக்களப்பு,மார்ச்17

மட்டக்களப்பு, 6ஆம் கட்டைப் பகுதிக்குள் கடந்த திங்கட்கிழமை புகுந்த காட்டு யானைகள் பாலர் பாடசாலையைத் தாக்கி சேதமாக்கி உள்ளன. இதனால் பின்தங்கிய இந்தப் பகுதி மாணவர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மரநிழலில் வைத்து கல்வி கற்பிக்கும் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்தப் பாலர் பாடசாலையில் இந்தப்பகுதியில் உள்ள சுமார் 50 சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

வேறு கட்டட வசதியற்ற இந்தப் பாலர் பாடசாலையில் சேதமாக்கப்பட்ட கட்டடம் புனரமைத்துத் தரும் வரை மாணவர்களை மரநிழலில் வைத்து கற்பிக்க வேண்டியுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றார்கள். (204)

# பெற்றோரின் சண்டை குறித்து பொலிஸில் சிறார்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்17

போரைப்பற்றுத் தீவு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வீடொன்றில் பெற்றோர் சண்டையிட்டதை அவதானித்த சிறுவர்கள் இருவர், பொலிஸாரை அழைத்து வருவதற்காகச் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற சம்பவம் களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

5 வயதான சிறுமியும், 6 வயதுடைய சிறுவனுமே இவ்வாறு பொலிஸாரை அழைப்பதற்காகச் சென்றுள்ளனர்.

இந்தச் சிறுவர்களின் முறைப்பாட்டை விசாரித்த பொலிஸார், அவர்களது வீட்டிற்குச் சென்று குறித்த தாயையும் தந்தையையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(204)

# மகிழடித் தீவிலிருந்து வெடிபொருள்கள் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு,மார்ச்17

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு பிரதேசத்திலிருந்து 2.5 கிலோ கிராம் நிறையுள்ள சி - 4 ரக வெடி பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (204)

# பொலிஸாரின் மெத்தனப்போக்கை கண்டித்து ஊழியர்கள் போராட்டம்

திருகோணமலை,மார்ச்17

கிண்ணியா பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கப் பணியாளர்கள் கடந்த திங்கட்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். பொலிஸாரின் மெத்தனப் போக்கைக் கண்டித்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது.



கடந்த வெள்ளிக்கிழமை எந்தவொரு உரிய ஆவணமும் இல்லாத நிலையில் தனக்கு மோட்டார் சைக்கிளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குமாறு வந்த பொதுமகன் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அங்கு பணியிலிருந்த ஊழியர்களை குறித்த பொதுமகன் அநாவசியமாக பேசியதுடன், அவர்களை அடிக்கவும் முற்பட்டதாக ஊழியர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் கிண்ணியா பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கப் பணியாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள போதிலும், பொலிஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து இவர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் வெறும் நீச்சல் தடாகம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

அரசு இன்று அம்பாந்தோட்டை துறைமுகம் என்றும் அதன் பெருமை பற்றியும் பேரம் பேசித் திரிகின்றது. இத்துறைமுகத்தைக் கடந்து ஒரு நாளைக்கு 500 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் செல்கின்றன. ஆனால் ஒரு கப்பல் கூட இந்தத்துறை முகத்துக்கு வரவில்லை. இலங்கையிலுள்ள விளையாட்டு மைதானங்களைப் போன்று இது வெறுமனே இலங்கையிலுள்ள மிக விசாலமான நீச்சல் தடாகம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிதசுள்ளார்.மல்வானை நகரிற்கு பயணம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச தரப்பினர் இன்று சுற்றுலாத்துறை பற்றிப் பேசுகின்றனர். காலி முகத்திடலுக்கு முன்னால் இருந்த இராணுவ தலைமையகம் சீனாவின் 'கதிக்' என்ற நிறுவனத்துக்கு விற்கப்பட்டுள்ளது. இது ஓர் உல்லாச ஹோட்டல் சார்ந்த நிறுவனம் அன்றி விமானங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம். ஏன் இவர்களுக்கு இது விற்கப்பட்டுள்ளது. இதில் என்ன நடைபெற்றுள்ளது? இதனால் யார் பயனடைகின்றனர்? என நாம் கேட்கின்றோம்.

இன்று அரசு வெளிநாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலமாக மின்சாரம், எரிவாயு போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. சமுர்த்தி போன்றவை இழக்க நேரிட்டுள்ளன.

இதுமட்டுமல்ல, 2500 ரூபா சம்பளம் உயர்வு எங்கே? ஆனால் அமைச்சர்களின் சம்பளம் 65,000 ரூபாவில் இருந்து 165,000 ரூபா வரை அதிகரித்துள்ளது. இன்று பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.ஆனால் சம்பளம், வருமானம் அதே நிலையில் தான் நிற்கின்றது.

இன்று இந்தப்பிரதேசத்தில் என்ன அபிவிருத்திகளை நீங்கள் பார்க்கின்றீர்கள்? ஒன்றையும் காணமுடியாது. அன்று நான் செய்த அபிவிருத்திகள்தான் இன்றும் நீங்கள் இவ்வாறு இருக்கக் காரணம் -என்றார். (204)

## வயலில் உழும் வெளிநாட்டவர்...



இலங்கைக்கு உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டுள்ள உக்ரைன் பிரஜைகள் சிலர், தம்புள்ளை, கண்டலம, பரணகம பிரதேசத்தில் வயல் உழுகின்றனர். (204)

# இந்தியாவிடமிருந்து ரயில் இறக்குமதி திடீரென இடைநிறுத்தம்

## போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 17

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த அதிவேக ரயில்களின் கொள்வனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்பட்ட மூன்று ரயில்களில் தொழில்நுட்பக் கோளாறுகள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாத்தளை, கொழும்பு சேவையில் ஈடுபட்டிருந்த புதிய ரயில் ஹிக்கடுவ பிரதேசத்தில் அண்மை யில் நின்றுள்ளது. அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அதிலிருந்து தொழில் நுட்பக் கோளாறுகள் காரணம் எனக் கண்டறியப்பட்டது.

இதுபற்றிய பூரண ஆய்வொன்று நடத்தப்படுகிறது. ஆய்வறிக்கை கிடைக்கும் வரை எஞ்சிய ரயில்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது. இதுபற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (204-5)

# தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 17

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்வதற்கு அல்லது பிணையில் விடுவிப்பதற்கு உத்தரவிடுமாறு கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு-

கடந்த மூன்று தசாப்தங்களாக சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.கடந்த காலங்களில் தமது விடுதலை தொடர்பாக பலர் வழங்கிய வாக்குறுதிகளில் எதுவுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தங்களில் அனேகமானோர் திருமணமாகியவர்கள்.என்ன காரணத்துக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம் என்பது கூடத் தெரியாத நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றோம்.தாம் சிறை வைக்கப்பட்டிருப்பதால் தமது குடும்பம் பிள்ளைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானிலுள்ள இலங்கையரை தாய்நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

ஜப்பானில் பணிபுரிகின்ற இலங்கையரை விமானம் மூலமாக பாதுகாப்பாக தாய்நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஜப்பானில் வசித்துவருவதாகவும் அவர்களில் சிலர் ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தை நாடி, தாம் தாய்நாட்டுக்கு திரும்புவதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் கோரியிருப்பதாக வெளிவிவகார அமைச்சில் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தெரிவித்துள்ளார். (204)

# சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளின் பொருள்கள் சிறை அதிகாரிகளால் திருட்டு

## நாம் இலங்கையர் அமைப்பு சிறைச்சாலை அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச். 17

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொழும்பு மெகஸின் சிறைச்சாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்ட அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் பொருள்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் திருடப்பட்டுள்ளன. இது குறித்து அந்த சிறை அதிகாரிகளிடம் கேட்ட போது ''இவர்களுக்கு எதற்கு'' என்று தெரிவித்தனர் என நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, அநுராதபுரம் சிறை அதிகாரி, மன்னார் மறை மாவட்ட ஆயர் அருட்திரு. இராயப்பு ஜோசப், செஞ்சிலுவைச் சங்கம், ஊடக நிறுவனங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய ஆகியோருக்கு நாம் இலங்கையர் அமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி வெள்ள அபாயம் காரணமாக அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகள் கொழும்பு மெகஸின் சிறைச்சாலைக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்ய அநுராதபுரம் சிறைச்சாலை நிர்வாக அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இவர்கள் பெப்ரவரி 4 ஆம் திகதி இடமாற்றம் செய்ய ஏற்பாடாகியபோது சிறைவார்ட்டுகளிலுள்ள தத்தமது பொருள்களை கொண்டு செல்ல அவசியமில்லை. திரும்பி வரும்வரை அவை பாதுகாப்பாக இருக்கும் என்று அநுராதபுரம் சிறை அதிகாரிகள் கைதிகளிடம் தெரிவித்திருந்தனர். ஆனால், பெப்ரவரி 24 ஆம் திகதி கைதிகள் மீண்டும் திரும்பும் போது சிறை வார்ட்டுகளில் அந்தப்பொருள்கள் ஒன்று கூட இருக்கவில்லை.

இது குறித்து அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கேட்டபோது, அந்தப்பொருள்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன என்று பதிலளித்தனர். எவ்வாறாயினும், ஏனைய சிறை அறைகளில் இருந்த பொருள்கள் பாதுகாப்பாக காணப்பட்டன.

உடைகள், சப்பாத்துக்கள் உள்ளிட்ட கைதிகளது தனிப்பட்ட பொருள்கள் சிறை வார்ட்டுக்களில் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும். குறிப்பாக அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளின் மேற்கண்ட பொருள்கள் சுவரில் 6 அடி உயரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன. அப்படியிருக்க, வெள்ளத்தில் எப்படி அப்பொருள்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கும்?

அத்துடன், மன்னார் மறை மாவட்ட ஆயர் வண இராயப்பு ஜோசப்பினால் கைதிகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 21 அங்குல வர்ணத் தொலைக்காட்சியானது 4 அடி உயரத்தில் வைக்கப்பட்டிருந்தது. வெள்ளத்தின் பின்னர் அந்த தொலைக்காட்சியை பரிசீலித்துப் பார்க்கும் போது அதனுள்ளே உப்பு இடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளிடம் கைதிகள் கேட்டபோது, அதற்கு அந்த அதிகாரிகள் ''நீங்கள் பஸ்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள் உங்களுக்கு எதற்கு தொலைக்காட்சி'' என்று பதிலளித்துள்ளனர்.

சிறைத்தலைமையகத்துக்கு முன்பக்க சுவரில் ''சிறைக் கைதிகளும் மனிதர்களே'' என்று எழுதப்பட்டுள்ளது. இருந்தும், அநுராதபுரம் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மனிதர்களாக நடத்தப்படுகிறார்கள் எனக் கூற முடியாது. தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் கைதிகள் அல்லர். அவர்கள் அரசியல் கைதிகள். அவர்களுக்குச் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும். எனவே, இது விடயம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டுமாறு கோரிக்கை விடுக்கிறோம். அப்படி இல்லாவிட்டால், சர்வதேச மட்டத்தில் போராட்டங்கள் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

-இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளீஸ்வரி வேதநாயகம் வரவேற்கப்படுகின்றார். (313)



மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது விருந்தினர்களை பாண்ட் வாத்தியக் குழுவினர் வரவேற்கின்றனர். (207)



நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயத்தில் இருந்து பதவி உயர்வு பெற்றுச்செல்லும் அதிபர் திருமதி மிமலாதேவி விமல நாதனுக்கு வித்தியாலய அதிபர் திருமதி குககுமாரி விஜயரகு நாதன் வித்தியாலய சார்பில் அன்பளிப்பு வழங்கிக் கௌர விக்கின்றார். (313)



யாழ். எயிட் நிறுவனம் நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச் சிக்காக முன்னெடுத்துவரும் செயற்றிட்டத்துக்கு அமைய நாவாந் துறை றோ.க. பாடசாலை மாணவி ஒருவருக்குப் புலம் பெயர்ந்து பிரான்ஸில் வசிக்கும் திருமதி எ.ஸ்ரீஸ்கந்ததேவா காலணி வழங் கினார். (313)



நவாலி சென் பீற்றேஸ் றே.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா. தனபாலன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை தாய் - சேய் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி திரு மகள் சிவசங்கர், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பங்குத் தந்தை வண.பிதா ஜே.பி.ஜோதிநாதன் அடிகளார் மற்றும் இளைப்பாறிய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் வ. முருகேசு, பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுகின்றனர். (100)

# ஆயிரத்து 674 வீடுகளை அமைத்து யு.என்.ஹபிற்றற் நிறுவனம் வழங்கியுள்ளது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

வரணி, மார்ச் 17

யு.என்.ஹபிற்றற் நிறுவனம் 2005ஆம் ஆண்டில் இருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றுவரை ஆயிரத்து 674 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. இது சார்பில் யாழ். மாவட்டத்தின் மேற்படி நிறுவன முகாமையாளர் க. பரமேஸ்வரனுக்கு நன்றியைக் கூறுகின்றேன் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அன்பன் விடிவெள்ளி சமூக அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண சுனாமி மீட்பு மீள் நிர்மாணத் திட்டம் II இன் பூர்த்தி விழா கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேசத்தில் உள்ள பலநோக்கு மண்டப முன்றலில்இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் யாழ். அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்:

பலவித கஷ்ரங்களுக்கு மத்தியிலும் நிறுவன உத்தியோகத்தர்கள் பெரியளவில் செயற்பாடுகளைமேற்கொண்டு ஆற்றிய பணி மகத்தானது.

இன்றைய நிகழ்வுக்கு இரட்சனியசேனைப் பிரதிநிதிகள் பலர் வருகை தந்துள்ளனர். யூ.என் ஹபிற்றற் நிறுவன முகாமைத்துவப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூற வேண்டியது எனது கடமை.

இலங்கை மட்டும் அல்ல உலகின் பல நாடுகளிலும் சுனாமியின் பாதிப்பு ஏற்பட்டது உங்களுக்குத் தெரியும். இவ்வாறான பல நாடுகளிலும் இவர்கள் செய்த பணி மகத்தானது. 20 ஆண்டுகளுக்கு முன் இடம்பெயர்ந்த மக்கள் உயர் பாதுகாப்பு வலயங்களில் குடியேறக் காத்திருக்கின்றனர். பல்லாயிரக் கணக்கில் வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றைப் புனரமைக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் பல முன்வந்துள்ளன. இந்த ஆண்டு கூடுதலான நிதி வீதி அபிவிருத்திக்கு பல மில்லியன் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பிரதேசத்துக்கு வீடுகளைக் கட்டும்பணி எமக்கு பெரிய சவாலாக உள்ளது. அபிவிருத்தி வேலைகளையும் இதே சமயம் முன்னெடுக்க வேண்டும். மக்கள் பலர் தற்சமயம் மீள் குடியேறத் தொடங்கியுள்ளனர். நாட்டின் பாதுகாப்புத் தொடர்பிலும் எமக்கு பொறுப்புள்ளது. இவை எதிர்காலச் சந்ததிக்கு பேருதவியாக இருக்கும் - என்றார்.

தொடர்ந்து இரட்சணிய சேனை பிரதிநிதி என்வோய் சைமன் வொங் உரையாற்றுகையில்:

2004ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து சுனாமி அழிவுகளைப் பார்த்தேன் உலகின் பல்வேறு நாடுகளிலும் இதன் தாக்கம் ஏற்பட்டது மனித உயிரிழப்புக்கள், இயற்கை அழிவுகள் இவையெல்லாம் எமக்கு மேலிருக்கும் ஒருவனால் தீர்மானிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ அமைப்பான எமது அமைப்பு யூ.என் ஹபிற்றற் நிறுவனத்தின்மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. எல்லாம் இறைவன் மீது பாரம் கொடுக்கின்றன.எல்லோருக்கும் நன்றி என்றார்.

இந்த வைபவத்தில் பங்குபற்றிய நிறுவனப் பிரதி நிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் விடிவெள்ளி சமூக அபிவிருத்தி சபையினரால் வழங்கப்பட்டன. இப் பிரதேசத்தில் மேற் படி நிறுவனம் 40 வீடுகளையும் மணல்காடு பிரதேசத்தில் 44 வீடுகளையும் கட்டிக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-122)

# சிவில் சமூகம் தனது அதிகாரங்களை பயன்படுத்த முடியாத நிலைமை உள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 17

மனித உரிமைகள் விடயத்தில் கூடிய காரணத்தையும் அக்கறையையும் சிவில் சமூகம் மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட தேசிய கருத்திட்ட இணைப்பாளர் செல்வி தனுஜா நவரத்தினம் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட சிவில் சமூகத்துக்கும், யாழ் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையேயான சந்திப்பு ஒன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்:

தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழு கூடிய அதிகாரங்களைக் கொண்டுள்ளதுடன் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டாலும்கூட அதற்குமுன்னர் பல ஒப்பந்தங்கள் மனித உரிமைகள் விடயத்தில் நாடுகளுக்கு இடையே செய்யப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் கூட மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகள் விடயத்தில் அனேகமான நாடுகள் கையொப்பம் இட்டுள்ளன. இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் சரி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் சரி மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டப் போராட வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

சிறிய குற்றங்கள் இடம்பெற்றாலும் கூட சிவில் சமூகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. கடந்த காலங்களைப் போல் அல்லாது தற்போது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது அரசினால் ஸ்தாபிக்கப்பட்டு அரசினால் நியமனம் பெற்ற ஊழியர்களைக் கொண்டதாகும்.

சிவில் சமூகம் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கொடுக்கும் அழுத்தங்கள் மூலம் அதனை நல்ல முறையில் செய்ய வழி செய்ய முடியும். இதன் மூலம் மனித உரிமைகள் ஆணைக் குழு தனது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் முழுமையாக செயல்பட முடியும்.

சிவில் சமூகத்தைப் பலப்படுத்த வேண்டும். சிவில் சமூகத்துக்கு மனித உரிமைகள் சம்பந்தமான கல்வியை வழங்க வேண்டும். இதன் மூலம் அரசுக்கும் கூட உண்மை நிலைமைகளை எடுத்துச் சொல்லக் கூடிய வாய்ப்புக் காணப்பட முடியும்.

சிவில் சமூகத்துக்கு மனித உரிமைகள் விடயத்தில் முக்கியமான பொறுப்பு உண்டு. சிவில் சமூகம் தங்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகளை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு முறையிடலாம். இதன் மூலம் தலைமையகத்துக்கு கொண்டு சென்று மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவில் எட்டமுடியும்.

சிவில் சமூகம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனைப் பல சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் கூடிய பயனைக் கொடுக்கக் கூடியதாக அமைய முடியும் எனவும் குறிப்பிட்டார். (எ-26)

# பொதுக்கூட்டம்

வடமாராட்சி, மார்ச் 17

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத் தலைவர் சி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் எதிர் காலத்தில் கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படும். (உ-236)

# நிர்வாகிகள் தெரிவு

வலிமேற்குப் பிரதேச அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் - டாக்டர் எஸ். சதாசிவம், உபதலைவர் - எம்.தியாகராசா, செயலாளர் -ந.சிவரஞ்சன், உபசெயலாளர் - ந. பாலச்சந்திரன், பொருளாளர் -கே.செல்வராசா, நிர்வாகசபை உறுப்பினர்கள் மா.கணேசன், ரத்தினம் சுப்பிரமணியம். (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்கள் பேச்சைக் கேட்டுச் சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படலாம். உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக் கலாம். மற்றவர்களுக்காகப் பிணை கொடுத்து, வாங்கிக் கொடுத்த பணம் எளிதில் வந்து சேரலாம். பழைய சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய காரியங்களில் இறங்குவீர்கள்

**இடபம்:**
வேதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டும் நாள். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. தெய்வ காரிய பிரார்த்தனை களை நிறைவேற்றுவீர்கள். சக நண்பர் ஒருவருடன் வெளியிடங் களுக்குச் செல்லலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:**
குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். திட்டமிட்ட காரியம் ஒன்றை வேறு வேலை காரணமாக நாளைக்குத் தள்ளி வைக்கலாம். சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர் களிடம் விவாதிக்க வேண்டாம். குடும்பத்தினரின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பயண அனுகூலம் உண்டு.

**கடகம்:**
சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடந்து எதிலும் சாதனை படைக்கும் நாள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். ஆக்கப்பூர்வமான காரியங்களை செய்வதில் நாட்டம் செல்லும். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

**சிங்கம்:**
பண விவகாரங்களில் யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். பேராசைகளைத் தவிர்த்து, எதிலும் நிதானமாக செயற்பட வேண்டும். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலையலாம். சிலரிடம் திடீரென கோபம், வேகத்தைக் காட்டி விட்டு, பின்னர் சமாதானமாகச் செல்வீர்கள்.

**கன்னி:**
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். உத்தியோகத் தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறலாம். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். எதிலும் தெளிவான முடிவெடுத்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். விருந்து, விசேடம் உண்டு.

**துலாம்:**
தொழில் ரீதியான பதற்றம், படபடப்பு அதிகரிக்கும். நண்பர்கள் சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். வீண் பேச்சுக்களைக் குறைத்துச் செயலில் திறமை காட்டுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் சந்தோஷம் அதிகரிக்கும். தடை, தாமதங்கள் இல்லாமல் எந்த வேலையை யும் சுலபமாக முடிப்பீர்கள். நல்ல செய்தி கேட்கலாம்.

**விருச்சிகம்:**
தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபட்டு அவதி களுக்கு ஆளாகலாம். மூத்த உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். அரசியல் தொடர்புடையவர் களை நம்பி எந்த வேலையையும் செய்ய வேண்டாம். உறவினர்கள் சந்திப்பால் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம்.

**தனுசு:**
வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். கணவன், மனைவி இடையே சிறு பிரச்சினைகள் தோன்றி பின்னர் சரியாகும். எதையும் குறித்த நேரத்திற்குச் செய்ய முடியாமல் தவிக்கலாம். சிலரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். மறதியால் அவதியுண்டு

**மகரம்:**
குடும்பத்தினரின் குணம் அறிந்து நடந்து கொள் வீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். வியாபாரிகள் வேலையாள்களின் துணை யோடு கூடுதல் ஆதாயம் பெறலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். நீண்டதூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும்.

**கும்பம்:**
பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். கலைஞர் களுக்கு அலைச்சல் அதிகரிக்கும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, வாகன யோகம் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**மீனம்:**
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும் பிள்ளைகளால் எரிச்சல் அடைவீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். நண்பர்களுடன் கொண்டாட் டங்களில் பங்கேற்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

# இருக்கும் வ... அதிகாரம்

**ஒரு சிறிய அன்பாக வார்த்தையால் செய்து முடிக்கப்படக் கூடிய விடயங்களை எத்தனையோ பேர் அதிகாரத்தின் மூலம் செய்து கொள்கின்றனர். இதனால் ஏற்படப்போவது மன உழைச்சலும் வெறுப்பும்தான். இதனை உணர்ந்து கொள்வதற்கு எத்தனையோ பேர் தவறுகின்றனர்.**

அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழா யிலிருந்து புறப்படுவதாக மாபெரும் கம்யூனிஸ்ட் தலைவரும் சீனப்புரட்சியாளருமான மா-சே-துங் கூறியது நினைவுக்கு வருகின்றது.

இதை மெய்ப்பிப்பது போன்று உலக நாடுகள் பலவற்றில் துப்பாக்கிகள் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளன.

இன்னும் சில நாடுகளில் துப்பாக்கிகளின் ஆதிக்கம் மக்களைக் கட்டுப்படுத்தி வைத்துள் ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது மா-சே-துங் சந்தேகமில்லாமல் ஒரு தீர்க்க தரிசனமுள்ள தலைவர்தான் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால், இன்னொரு இடத்திலிருந்தும் அதி காரம் வெளிப்பட்டு வருவதை எமது அன்றாட வாழ்க்கையில் நாம் காண்கின்றோம். அது மனிதனின் வாயிலிருந்தான் என்று கூறப்படு வதில் தவறொன்றும் இல்லை.

ஏனென்றால் அதிகார மோகம் இன்று மனி தனை ஆட்டிப் படைக்கின்றது. தத்தமது தகு திக்கேற்ப தமக்குக் கீழுள்ளவர்களை அல்லது தம்மைவிடப் பலவீனமானவர்களைத் தமது அதிகாரத்தினால் அடக்கி, ஒடுக்கவே ஒவ் வொருவரும் அவாவுகின்றனர். இதில் இடங்கள் வேறுபடலாம். ஆனால் செயற்பாடு ஒன்று தான்.

இந்த அதிகாரம் என்பது வீட்டிலிருந்து அரசுக் கட்டுவரை வியாப்பித்து நிற்கின்றது.

வீட்டில் மனைவி கணவனுக்கு அடங்கிய வளாக இருந்தால் கணவனின் அதிகாரம் தூள் பறக்கும். இதற்கு எதிர்மாறாகக் கணவனும் மனைவியும் அமைந்தால் கணவன் மனைவியின் அதிகாரத்தின் முன் மண்டியிட்டுப் பூரண சரணாகதியே அடைந்து விடுகின்றனர்.

''இதென்ன ஒரு சாப்பாடா? சீ... வாயிலை வைக்க முடியவில்லை. எங்கடை நாய் கூட இதைத் திரும்பிப் பாராது. எத்தனை வருடமாக இவள் சமைக்கிறாள். இன்னமும் ஒரு இழவும் தெரியாது'' அவனது வார்த்தைகளில் சூடு பறக்கும்.


மனமோ சுன்னாகம் புகையிரத வீதியில் அமைந் துள்ள முஸ்லிம் சாப்பாட்டுக் கடையின் கோழி பிரியாணியை வட்டமிட்டுக் கொண்டிருக்கும். சடுதியாகச் சாப்பாட்டுக் கோப்பை பறந்து சென்று தொந்தி விழும் சத்தம் கேட்கும். இவனோ முஸ்லிம் சாப்பாட்டுக் கடையை நோக்கிச் சென்று கொண்டி ருப்பான். இத்தனைக்கும் அவனது மனைவி நன்றாகச் சமைக்கக் கூடியவள். அவனே பலமுறை இதனைப் பாராட்டியிருக்கிறான். சிறிது காலமாகத் தான் அவளில் இந்த மாறுதல். இதற்கு முஸ்லிம் கடையும் ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது மனைவியின் பலவீனம் அவனுக்கு அதிகாரம் செலுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கலாம்.

இதற்கு எதிர்மாறாக இன்னொரு வீட்டில் காட்சிகள் அரங்கேறும். ''எனக்கொரு இளிச்சவாய் வந்து வாய்ச்சிருக்கு. எப்ப பார்த்தாலும் வீட்டுச் சாப்பாடுதான் வேணுமெண்டு உயிரை வாங்குது. இதுக்கு அவிச்சுப்போட்டே என்னுடைய ஆயுள் கரைஞ்சு போகும் போலை கிடக்குது. கிழமை யிலை ஒரு நாளாவது முஸ்லிம் கடைச் சாப்பாடு சாப்பிடலாமெண்டால் இது சம்மதிச்சாத்தானே'' மனைவி புலம்பிக் கொண்டே கணவனை முறைத்துப் பார்ப்பாள். அவனோ மகுடி முன் கட் டுண்ட நாகம் போல அடங்கிப் போய்த் தலையைக் குனிந்து கொண்டிருப்பான். இத்த னைக்கும் அவன் மனைவியின் சமையலைப் புகழாத நாளே இல்லை. ஆனால் அவளது 'ஈகோ' அதிகாரமென மறுப் பெயர்பெற்று அவளை ஆட்டிப்படைத்துக் கொண்டி ருக்கின்றது.

ஓர் அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் உயர் பதவியினுள்ளவர்கள் தமக்குக் கீழே உள்ளவர்களை அதிகாரம் செய்வது இயல்பானதுதான். ஆனால் அதிலும் வேறுபாடுகள் உள்ளன.

ஒரு சிலர் தமது அதிகாரத்தை மற்றவர்களின் மனம் புண்படும் படியாகப் பயன்படுத்த மாட்டார்கள். இவர்கள் தமக்குக் கீழுள்ளவர்கள் தவறு செய்தால் அதனை நாசூக்காக எடுத்துக் கூறுவர். எதிர்காலத்தில் அத்தகைய தவறுகள் நிகழாதிருப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்குவர். இவர்களின் வார்த்தைகளில் கட்டுண்ட அந்தத் தவறு செய்த ஊழியர் எதிர்காலத்தில் தாம் செய்யக்கூடிய தவறுகளைக் குறைப்பதற்கு நிச்சயம் முயல்வார். ஆனால், இதற்கு எதிர்மாறான வர்கள் ஏராளமாக உள்ளனர். இவர்கள் எந்நேரமும் தமக்குக் கீழுள்ளவர்களை வார்த்தைகளால் வறுத்தெடுத்துக் கொண்டே இருப்பர்.

முகத்தில் எப்போதுமே ஓர் இறுக்கம். தாம் சிரித்துவிட்டால் கூடியிருப்பவர்களின் குளிர் நீங்கிவிடும் என்ற அச்சத்தில் சிரிப்பையே மறந் திருப்பார்கள். திடீர் திடீரென்று வெடித்துச் சீறுவார் கள், கர்ச்சிப்பார்கள், சிறு பிழைகளையும் தூக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரை



பிடித்துப் பிழைவிட்டவர்களை உண்டு இல்லையென ஆக்கி விடுவார்கள்.

ஒருவர் எவ்வளவு தான் சிறப்பாகத் தனது வேலைகளை மேற்கொண்டாலும் இந்தவகை நபர்கள் வாயைத் திறந்து ஒரு பாராட்டு வார்த்தை கூடக் கூறமாட்டார் கள். மாறாக அது அவரு டைய வேலை தானே? இதிலென்ன புதின மிருக்கு என்று ஏளன மாகக் கூறுவார்.

ஆனால் அதே ஆண் ஒரு சிறிய தவறு செய்தாலும் நரசிம்ம மூர்த்தியாக மாறும் இவர்கள் தவறு செய்தவரை விரக்தியின் விளிம்புக்கே கொண்டுவந்து விடுவார்கள். ''நீ இனிமேல் ஏதாவது செய்தால் வெளியிலை போக வேண்டித்தான் வருமென்று'' எச்சரிக்கையையும் விடுவார்கள்.

ஆனால், இத்தகையவர்கள் ஒன்றை மட்டும் மறந்து விடுவதுதான் வேதனையளிக்கின்றது. தாம் அமர்ந்திருக்கும் அதிகாரமிக்க கதிரையிலிருந்து நீங்கிவிட்டால் பல்லில்லாத பாம்பின் நிலைதான் தமக்கு என்பதை ஏனோ இவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

இதனால் தானோ என்னவோ இன்று பலர் எழுபது வயதுக்குப் பின்னரும் பதவிக் கதிரையை விட்டு நீங்க மனமில்லாது தவிப்பதைக் காண்கின்றோம். அதிகார வெறியே இவர்களை ஆட்டிப் படைக்கின்றது.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை இன்னொரு சாராரின் அதிகாரமும் அப்பாவி மக்கள் மீது அரங்கேறுவதைத் தினமும் காண்கின்றோம்.

தினமும் மினிபஸ்களில் பயணம் செய்வோர் இத்தகைய அனுபவத்தைச் சந்திப்பர்.

தற்போது அரச போக்குவரத்துச் சேவை பெயரளவுக்கு மட்டுமே இயங்கி வருகின்றது. இதனால் மினி பஸ்களின் ஆதிக்கமும் அதிகாரமும் கொடிகட்டிப் பறக்கின்றன.

**அதிகாரத்தில் உள்ளவர்களின் கதிரைகள் நீக்கப்படுமிடத்து அவர்கள் பல் இல்லாத பாம்பின் நிலைக்குத்தான் இட்டுச் செல்லப்படுவார்கள். எங்கும் எதிலும் அதிகாரம்தான் தற்போது தலைதூக்கி நிற்கின்றது.**


வேறுவழியில்லாத நிலையில் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இவற்றில் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். பிரயாணக் கஷ்டம் ஒருபுறமிருக்க நடத்துநரின் அதிகாரம் தான் பிரயாணிகளை வறுத்தெடுக்கின்றது.

''குயிக்காக ஏறுங்கோ... அக்கா பஸ் ஓடுற பக்கம் திரும்பி நிக்க வேணும்... சீற்றிலை இரண்டு பேர்தான் இருக்க வேணும்... எஞ்சின் பெட்டியிலை ஏறி நில்லுங்கோ''

## ராஜராஜன்

இப்படியாக எஞ்சின் பெட்டியில் ஏறித் தலையைக் குனிந்து கொண்டு நின்ற சிலர் ''கழுத்துக் கொலருடன்'' நடமாடுவதைக் காண முடிகின்றது. கொக்குவில்லை இறங்கிற ஆக்கள் எல்லாம் தாவடியிலையே எழும்பி முன்னுக்கு வரவேணும்... ''என்ன முறைக்கிறீர் விரும்பினால் வாரும். இல்லாட்டிக் கீழை இறங்கும்'' இவ்வாறு அதிகாரம் பயணிகள் மீது பாயும். சில வேளைகளில் சண்டித்தனமும் வெளிப்படும். பாவம் பயணிகள் வேறு வழியின்றி நடத்துநரின் வார்த்தைகளுக்கு மசிந்து வழிவிடுவர். இங்கே அதிகாரம் என்பது நடத்துநரின் வாயிலிருந்து வெளிப்படுகின்றது.

இவ்வாறு அதிகாரம் பல்வேறு கோணங்களில் பிரயோகிக்கப்படுகின்றது. ஆனால் பதவிக் கதிரைகளில் அமர்ந்து மற்றவர்கள் மீது ஏறுமாறாக நடந்த பலர் அந்தக் கதிரைகளிலிருந்து இறங்கியதும் கவனிப்பாரற்ற நிலையில் நடைப்பிணங்களாக உலாவி வருவதையும் நாம் காண்கின்றோம்.



# உன்னையறிந்தால்



''உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்'' என்று ஊருக்கெல்லாம் அறிவுரை அறிவித்தவர் அமரர் எம்.ஜி.ஆர். ஆனால் அவரே தன்னை அறியக் கொஞ்சம் தாமதம் ஆனது. தி.மு.க தொண்டர்களை நம்பியே தன் படத்தின் வெற்றி தோல்வியும் பணமும் புகழும் இருப்பதாகப் பல காலம் நம்பியிருந்தார். ஆனால் தி.மு.க.வின் பலமே தான் தான் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

திராவிட இன உணர்வு, மொழிப் பற்று, பகுத்தறிவு, அண்ணாவின் பேச்சு என்று செம்மையான காரணங்களால்தான் தி.மு.க. உருவானது என்றாலும் அதன் பரப்பளவு, தேர்தல், வெற்றி, கவர்ச்சி, பெண்கள், ஆதரவு, கொடி கட்டும் வெறிமிக்க தொண்டர் படைக்கு வாக்கு வங்கியின் கதாநாயகன் எம்.ஜி.ஆர்தான் பொருத்தமானவர் என்று அனைவருக்கும் புரிந்துவிட்டது. ஆனால் அது எம்.ஜி.ஆருக்குப் புரியவில்லை. தன்பலம் என்ன என்று தெரியாத சினிமா உலக அனுமனாக மட்டுமே விளங்கினார். கலைஞருக்கும் எம்.ஜி.ஆருக்கும் மத்தியில் கோடரி இறங்கினால் தி.மு.க சரியும் என்று எச்சரிக்கையாகவே கோடரி வீசப்பட்டது.

ஏடாகூடமாகக் கேள்விகளை வீசினார் எம்.ஜி.ஆர். எரிச்சலோடு அவரையே வெளியில் வீசினார் கலைஞர். கொஞ்சம் நிலை குலைந்த எம்.ஜி.ஆர் தன்பின்னால் திரண்ட மக்கள் கூட்டத்தைப் பார்த்த பின்னரே ஆஹா தன்பலம் என்ன என்று தெரிந்து கொண்டார். தன்னைப் புரட்சி நடிகரில் இருந்து புரட்சித் தலைவராகப் புரிந்து கொண்டார்.

பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், உழைப்பாளிகள், திறமைசாலிகள் பலர் குறைவான சம்பளம், சன்மானம் பெறுவதற்கு இதுவே காரணம். கம்பீரமாக வளர முடியாமைக்கும் இந்தத் தன்னை உணராமையே மிக முக்கிய காரணம். ஒரு பிரபலமான நாதஸ்வர மேதையைத் திருமணக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய ஒரு பணக்காரர் வந்தார். சன்மானம் எவ்வளவு தரவேண்டும் என்று கேட்டதும் தயங்கியபடி ஆயிரம் என்று இழுத்தார் நாதஸ்வர மேதை. பணக்காரர் காதில் ஐயாயிரம் என்று விழுந்தது. ஐயாயிரமா? என்று யோசித்தபடி '' உங்கள் வித்தைக்கு இது ஒரு பெரிய தொகையல்ல, கொஞ்சம் குறைக்கலாம் என்றால் குறைக்கலாம்.'' என்று தடுமாறினார். சுதாகரித்துக் கொண்ட நாதஸ்வர மேதை பிடிவாதமாக மறுத்து விட்டார். அதன்பின் அவர் சன்மானம் ஆயிரத்திலிருந்து ஐயாயிரம் ஆகிவிட்டது. தன் செல்வாக்குப் புரிபடாதவர்கள் எப்படி வளர முடியும்.

கருஞ் சிறுத்தையொன்று காட்டில் தனித்து வளர நேர்ந்தது. பலம் குறைந்த விலங்குகள் கூட்டத்தில் வாழத் தொடங்கிய சிறுத்தை தன்னையும் அவ்வாறே எண்ணிக் கொண்டது. ஒருமுறை கடும்பசியோடு அது இரைதேடி அலைந்தபோது புதருக்குள் ஒளிந்திருந்த நரியைப் பார்த்துச் சாப்பிட ஆசைப்பட்டது.

ஆனாலும் தயக்கம். புதருக்குள் இருந்த குள்ளநரி வெகு சாமர்த்தியமாகப் பேசியது. சிறுத்தை இருப்பதைப் பார்க்காத மாதிரி ''ஆஹா என்ன இருந்தாலும் சிறுத்தைக் கறி மாதிரி ஆகாது. எப்படியாவது இன்று சிறுத்தையைக் கொன்று சாப்பிட வேண்டும்'' என்றபடி நாக்கைச் சுழற்றிக்கொண்டது.

பயந்துபோன சிறுத்தை வந்த சுவடு தெரியாமல் நழுவிவிட்டது. நரிக்குப் பரம திருப்தி. மரத்திலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த குரங்கு மனசுக்குள் கருவிக் கொண்டது. இந்தத் திமிர் பிடித்த நரியை மாட்டிவிட வேண்டும் என்று சிறுத்தையைத் தொடர்ந்து போய்த் தடுத்து நிறுத்தி '' நரியால் உன்னை ஒன்றும் செய்ய முடியாது. அது சொல்வது பொய். உன் பலம் உனக்குத் தெரியாதா...? ஓங்கி ஓர் அறை விட்டால் நரி நார் நாராகிக் கிழிந்து போகும்'' என்று தைரியம் ஊட்டி சிறுத்தையை மீண்டும் அழைத்து வந்தது. சிறுத்தை முதுகிலேயே அமர்ந்து கொண்டு உற்சாகமாக நரி இருக்கும் இடத்தைக் கையால் காட்டியபடி தைரியம் ஊட்டியபடி வந்தது குரங்கு.

நரிக்கு நடந்தது புரிந்துவிட்டது. இனி ஓடமுடியாது. ஓடினால் சிக்கிவிடுவோம். என்றாலும் அதற்குச் சிறுத்தையின் பலவீனத்தில் நம்பிக்கை. புதரில் இருந்தபடியே கம்பீரமாக '' இந்தத் திருட்டுக் குரங்கு போய் எவ்வளவு நேரமாகிவிட்டது. சிறுத்தையைத் தின்றதிலிருந்து மறுபடியும் தின்ன ஆசையாக இருந்தது. எப்படியாவது ஏமாற்றி ஒரு சிறுத்தையை அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு போன அந்தக் குரங்கு வரட்டும். என்ன பாடுபடுத்துகிறேன் பார்'' என்று உரத்துக் கூறியது. அவ்வளவுதான் அலறி அடித்துக் கொண்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று சிறுத்தை ஓட ஆரம்பித்தது. தான் ஒரு சிறுத்தை என்கிற தன்பலம் உணராத சிறுத்தையை ஒருவர் எப்படிச் சிறுத்தையாக்க முடியும்?

தான் யார் என்பது தெரிந்தால் தன்பலம் என்ன என்பது புரிந்தால் உங்கள் உயர்வு உறுதி செய்யப் பெற்ற ஒன்று. **சுகி.சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள்**

| மறுக்கப்படுகின்றன | ☐ | மதிக்கப்படுகின்றன | ☐ |
|---|---|---|---|

பெயர்: ..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
அடையாள அட்டை இல. ..............................................

உங்கள் தீர்ப்புக்களை 31.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இளவல்கள் வட்டம்




## எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள்

**மறுக்கப்படுகின்றன**

இன்றைய சமுதாயத்தில் இளம்பெண் ஓர் ஆணுடன் கதைத்தால் அதற்குச் சமுதாயம் கூறுகிறது " நீயொரு பெண், நடுவீதியில் நின்று உனது வயதுக்கு சமமான ஆடவனுடன் கதைப்பது பெண்ணுக்கு உகந்த தாகுமா?" என்று. இதே ஓர் ஆடவன் செய்தால் அதை தப்புச் சொல்ல எமது சமுதாயம் முன்வருவதில்லை. ஆனால் ஓர் இளம் பெண் கதைத்தால் அதற்கு ஆயிரம் கதை கூறும் நமது சமு தாயத்தை ஒவ்வொரு நாளும் அவதானிக்கின்றோம். இனிக் கூறுங்கள் இப்படியிருக்க எமது சமுதாயத்தில் பெண்களின் உரிமைகள் மதிக்கப் படுகின்றனவா? அல்லது மறுக்கப்படுகின்றனவா?

அன்று பாஞ்சாலியின் உரிமைகள் மறுக்கப்பட்டதால் மகாபாரத யுத் தமே நடைபெற்றது. பெண்கள் தமது தேசத்துக்காக, மொழிக்காக, அரசி யல் கொள்கைக்காக ஏதேதோ தியாகங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படாமல் இருக்கின்ற னவா? இல்லையே "பெண்களை அவமதித்தால் அப்புறம் தர்மமே போய் விடும். தேசமே போய்விடும்" என்றுதான் அர்ஜுனன் கூட பகவானிடம் அழுதான். ஆனாலும் இதுவரை பெண்கள் மதிக்கப்படுவதாக இல்லை.

ஆறிலும் சாவு நூறிலும் சாவு ஆணுக்கு மட்டுமன்றி பெண்ணுக்கும் அப்படியே. உயிருள்ளவரை பெண்களின் உரிமைகள் மறுக்கப்படாமல் இருக்கின்றனவா? இல்லை. இறுதியாகக் கூறுகின்றேன் எமது சமுதாயத் தில் குறிப்பாக இளம் பெண்களினது உரிமைகள் மதிக்கப்படாமல் மறுக் கப்படுகின்றன.

**ஜெ.நிரஞ்சலா,**
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, வல்லை வீதி, சங்கானை.

**மதிக்கப்படுகின்றன**

இன்று யாழ்.நகரை அலங்கரிக்கும் அலங்காரப் பொருள்களாக இளம் பெண்களே காணப்படுகின் றனர். தனது உரிமையென்ற பெயரில் பிடித்த ஆடையை அணிந்து அதற்கேற்ற வளையலும் அணிந்து கையில் கைத்தொலைபேசியுடன் அளவற்ற பேச்சுரிமையையும் பெற்றுக் கொண்டு பட்டாம் பூச்சிகளாகத் திரியும் இன்றைய இளம் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றதென்பது நம்பமுடியாத ஒன்று.

இமெல்டா அம்மையாரின் உரிமை மறுக்கப்பட்டிருந்தால் அவர் அரச அதிபராக வந்திருக்க முடியுமா? யோகேஸ்வரி அம்மையார் மேயராக வந்திருக்க முடியுமா? சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக வந்திருக்க முடியுமா? இளம்பருவத்தில் அவர்களது உரிமை மதிக்கப்பட்டமையினாலேயே இன்று அவர்கள் தமக்கென ஓரிடம், ஒரு தடம் பதித்திருக்கின்றார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இளம் பெண்கள் கடலலை போல் பெருக்கெடுத்து அலுவலகங்களுக்கும் தனியார் நிலையங்களுக்கும் ஓடும் நதிபோல் ஓடிச்சென்று தன்னிகரற்ற தலைவிகளாகத் திகழ்கின்றனர் என்றால் அதற்கு அவர்களது உரிமைகள் மதிக்கப் படுகின்றமையே காரணம்.

**செல்வரத்தினம் ஜெயாத்,**
*யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.*

## அன்பு

*துயரங்களை எல்லாம்*
*சுகமாய் ஏற்றுக்கொள்ள*
*என் மனதினை மாற்றி*
*அமைத்ததெல்லாம்*
*வானலையூடாக வரும்*
*உன்னுடைய ஆறுதலான*
*அன்பான ஆலோசனைகள் தான்*
*'இயலாதது ஒன்றுமில்லை*
*மனம் இருந்தால்' - என*
*திடம் தந்து*
*உரமூட்டி - எனைத்*
*துயரம் எனும் கடலில்*
*இருந்து*
*இன்பம் எனும் கரையினில்*
*சேர்த்த அன்பான*
*அண்ணாவே!*
*வாழ்நாளில் உனை மறவேன்*
*சகோதரனே.*

**சுரேஸ் வனிதா**

# வேதனைகள் இன்றி சாதனைகள் சாத்தியமில்லை

(சென்றவாரத்தொடர்ச்சி...)

தோமஸ் அல்வா எடிசன் 999 தடவைகள் தோல்வியைத் தழுவி ஆயிரமாவது தடவை வெற்றி பெற்றார். உலகத்தின் சாதனை படைத்தவர்கள் பல தடை களைத் தாண்டித் தோல்விகளை எதிர்கொண்டே முன்னேறியவர்கள். நான் கறுப்பாய் இருக்கிறேன் என்று நினைத்திருந்தால் நடிகர் பார்த்தீபனும் நான் கிராமத்தை சேர்ந்தவன் என்று நினைத்திருந்தால் இசைஞானி இளையராஜாவும் நான் உயரம் குறைந்தவன் என்று நினைத்திருந்தால் சுனில் கவாஸ்கரும் அவர வர் துறைகளில் முன்னேறியிருக்க முடியாது. உள்ளே எதையும் ஒளிக்காதே. துணிந்துவிடு, துப்பிவிடு. ஆசையைத் துப்பு; ஞானம் வரும். அச்சத்தைத் துப்பு வீரம் வரும். இரகசியத்தைத் துப்பு தூக்கம் வரும். "தோல்வி நிலையென நினைத்து மனிதன் வாழ்வை இழக்கலாமா?" என்று ஒரு கவிஞன் பாடுகிறான். அவமானங்கள் தாங்காமல் வெகுமானங்கள் கிடைக்காது. தோல்விகளை துப்பினால்தான் வெற்றிகளை விழுங்க முடியும். கஷ்ரப்பட்டுத்தான் பட்டம் பெறமுடியும். தடைகளைத் தாண்டாது தலைநிமிர முடியாது. முட்டுக் கட்டைகளை எதிர்கொள்ளாது முன்னேற முடியாது.


தன்மேல் விழும் மண்ணைச் சோதனை என்று விதைகளும் உளியின் உரசலைச் சோதனை என்று சிலைகளும் சொல்வதில்லை. கடல் தாண்டும் பறவைக்கெல்லாம் வழியில் மரங்கள் கிடைக்காது. ஆனாலும் கண்டம் தாண்டும் சிறகுகள் வலிக்காது. "வலிமை" என்ற சொல்லிற் கூட வலி என்ற பகுதி உண்டு. இல்லையென்றால் இலக்கணம் இறந்து போகும். முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம். முயற்சிக்கு முன்னுரை, எழுச்சிக்கு வித்து, செயலுக்கு ஆதாரம், வெற்றிக்கு ஊன்றுகோல், பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்பது சாதாரண வாழ்க்கை. பிறந்தோம், வாழ்ந்தோம், சாதித்தோம் என்றே வாழவேண்டும்.

மனிதா! மன உறுதி உனது மூலதனம். அதுவே உன் சுவாசம். முயற்சி செய்! முன்னேறு!! முடியும் வரை போராடு.

*(முற்றும்)* **சித்திரா போகீந்திரன்,** மானிப்பாய்.

## புரிதல்

புரிந்துதானே
பழகினோம்
பிரிந்தது எப்படி?
தவறுகளுக்குத் தண்டனையா - உன்
மௌனம்...
வாதங்களின் வல்லமையும்
தோற்றுப் போனது உன் முன்னால்
உணர்வுகளாலும்
உறவுகள் மறுக்கப்படுமென
உணர்ந்தது உன் பிரிவில் தான்
விலக்கவில்லை
விலகித்தான் நிற்கிறாய் - எனக்கான
உன் வாழ்த்துக்கள் கூட
வரமறுத்த போதுதான் - கொஞ்சம்
அதிகமாய் வலித்தது மனசு
இதயத்தின்
இரகசியங்களை
இல்லாதொழித்தது
உனக்காக மட்டுமல்ல- நம்
நட்புக்காகவும் தான்



**யோ.தர்ஷிக்கா,**
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள்**
**மறுக்கப்படுகின்றன அல்லது, மதிக்கப்படுகின்றன**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
உதயன்,
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................................
முகவரி :- ..............................................................
..............................................................
.................. ..................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவான மக்களை நிர்வகிக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய்த் தேர்தல் தொகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தின் உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்பாக விளங்கும் வலி. கிழக்குப் பிரதேச சபை கடந்த கால உள்ளூராட்சி அமைப்பில் ஒரு பட்டின சபையையும் நான்கு கிராம சபைகளையும் உள்ளடக்கியதாகவும் இருந்ததுடன் 62 வட்டாரப் பிரிவுகளையும் கொண்டிருந்தது.

2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் கோப்பாய் தேர்தல் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட 65 ஆயிரத்து 798 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கடந்தகால நிர்வாகக் கட்டமைப்பின் வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும்போது அச்சுவேலிக் கிராம சபை, புத்தூர்க் கிராம ச்பை, நீர்வேலிக் கிராம சபை, கோப்பாய்க் கிராம சபை, உரும் பிராய் பட்டின சபை என்ற வகையில் அமைந்திருந்தமையை அவதானிக்க முடியும்.




குறித்த ஐந்து உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களையும் அதனோடு தொடர்பான வரலாற்றையும் முழுமையாக ஆவண ரீதியாகக் கண்டு கொள்ள முடியாத நிலையுண்டு.

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளினால் உள்ளூராட்சி அமைப்புக்களின் ஆவணங்கள் முற்றாக அழிக்கப்பட்டமை மற்றும் சபைகளில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், சபைகளின் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இறந்தமை என்பன இதற்கான முக்கிய காரணங்களாகும்.

ஆனாலும் குறித்த சபைகளுடன் தொடர்புபட்டவர்களிடம் நேரில் கலந்துரையாடிப் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் இவை முன் வைக்கப்படுகின்றன.

இலங்கையில் சர்வசன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து நடைபெற்ற தேர்தல்கள் என்ற வகையில் மக்கள் தமது பதிவு செய்யப்பட்ட வாக்குரிமையை பயன்படுத்தியமை இரண்டு சந்தர்ப்பங்களில் ஆகும். முதலாவது நாடளாவிய ரீதியில் மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யும் "பொதுத் தேர்தல்" இரண்டாவது தமது பிரதேசம் சார்ந்த நிலையில் உள்ளூராட்சி நிர்வாகத்துக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள்.

ஆரம்பகாலத்தில் பொதுத் தேர்தலில் தேசிய ரீதியில் ஒரு சில கட்சிகளும், பிராந்திய இன ரீதியில் ஒரு சில கட்சிகளுமாக ஒற்றை இலக்கத் தொகையிலேயே இருந்துள்ளன. சாதாரண மக்கள் மத்தியில் கட்சிகளின் முழுப்பெயரின் பாவனை குறைவாக இருந்தமையால் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிறங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு நிற அடிப்படையில் வாக்குக் கேட்கும் நடைமுறை இருந்ததுண்டு.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் கிராம சபையைப் பொறுத்த வரையில் யாழ்.மாவட்டத்தில் கட்சி அரசியலுக்கும் கட்சி ரீதியிலான பிரசாரத்துக்கும் இடமில்லாமல் இருந்தது.

கிராமத்தில் மதிப்புள்ளவர்கள், பிரமுகர்கள், வசதிபடைத்தவர்கள் என பலர் போட்டியிடுவார்கள். கிராம சபைக்கான பிரதிநிதிகள் தெரிவு வாக்களிப்பு மூலம் நடைபெற்று பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் குறித்த திகதியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகள் தலைமையில் சபைக் கான தலைவர் தெரிவு நடை பெறும்.

தலைவர் தெரிவு முந்திய தினங்களில் வட்டார ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கடத்தப்படுவதும் தலைமறைவாக இருப்பதும் பேரத்துக்கு உட்படுவதும் விலை பேசி மன மாற்றம் செய்யப்படுவதும் சர்வ சாதாரணமாக நிகழ்வது உண்டு.

இந்த விடயங்களில் கிராம மட்டத்தில் பிரபல புள்ளிகள் மற்றும் பிரமுகர்களின் செயற்பாடுகள் மிகக்கச்சிதமாக அரங்கேறும்.

இந்த வகையில் வலி. கிழக்குப் பிரதேசம் கிராமிய மட்டம் சார்ந்ததாக இருந்தமையினாலும் பல்வேறு குழுமங்களின் மரபு ரீதியிலான கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதாக இருந்தமையினாலும் கிராமசபைகளின் செயற்பாடுகளிலும் பல்வேறு விதமான சம்பவங்கள் அரங்கேறுவதுண்டு.

*(தொடரும்)*

# இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 85 கிராமங்களில் தனித்துவமான சிறப்பு வாய்ந்த கிராமம் "இடைக்காடு". கல்வி, விவசாயம் இரண்டும் இரண்டறக் கலந்த நிலையில் உயர் பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்ட இந்தக் கிராமம் கடந்த 30 வருட கால யுத்தத்தினால் பெரும் பாதிப்பை சந்தித்துள்ள போதிலும் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்பதற்கு ஏற்ப முயற்சியால் உயர்ந்து வருகின்றமை அந்த மக்களின் உழைப்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தக் கிராமம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து வடமேற்கு திசையில் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. கிராமத்தின் நுழை வாயிலில் அழகான ஓங்கி உயர்ந்த மாடிக் கட்டடத்தில் நூல் நிலையம், வாசக சாலை இரண்டும் தனித்தனித் தளங்களில் செயற்பட்டுக் கொண்டிருப்பது தான் இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்.

இடைக்காடு வாழ் கல்விமான்கள், சமூகப் பிரமுகர்களின் ஒருமித்த சிந்தனையின் செயற்பாடாக 1939 ஆண்டு "இடைக்காடு வாலிபர் சங்கம்" உதயமாயிற்று. இதன் பணிகள் பன்முகப்பட்ட நிலையில் சமூக மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட்டன. அதன் வெளிப்பாடாக 24.02.1948 முதல் இடைக்காடு சனசமூக நிலையம் என்ற நாமத்துடன் தற்போதைய மாடிக் கட்டடம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட சிறிய கொட்டகையில் செயற்படத்தொடங்கியது.

இடைக்காடு வாழ் மக்களின் ஒருமித்த உழைப்பினாலும் பங்களிப்பினாலும் 1954 ஆம் ஆண்டு சனசமூக நிலையத்துக்கென நிரந்தரமான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு அதில் புதிய உத்வேகத்துடன் செயற்படத் தொடங்கியது.

நிலையத்தின் காப்பாளரும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற புள்ளி விவரவியலாளரும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக உணவு விவசாய நிறுவனத்தில் உயர் பதவி வகித்தவரும் தனது நாமமாகப் பிறந்த ஊரின் பெயரை இணைத்துக் கொண்டவருமான என்.மாணிக்க இடைக்காடரின் மறைவை அடுத்து 1997 ஆம் ஆண்டு முதல் "மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்" என்ற பெயருடனும் இயங்கி வருகின்றது.

இந்த நிலையம் போஷகரின் பங்குப் பணிகளையும் உலகளாவிய ரீதியிலான அவரது புகழையும் ஊரின் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதுடன் நன்றியறிதலுக்கு அடையாளமாகவும் விளங்குகின்றது.

மறைந்த பேராசிரியர் கே.கைலாசபதி அவர்களின் தாய்மாமன்தான் என். மாணிக்க இடைக்காடர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சனசமூக நிலையம் தான் இயங்கி வரும் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திலும் மேம்பாட்டிலும் எத்தகைய பங்குப் பணிகள் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் சிறந்த முறையில் பூர்த்தி செய்து வலி. கிழக்கில் பாராட்டப்பட்டிருப்பதோடு சனசமூக நிலையத்துக்கு உரிய உயர் விருதையும் பெற்றுச் சேவையால் உயர்ந்து நிற்கின்றது மாணிக்கர் இடைக்காடர் சனசமூக நிலையம்.

1939 ஆம் ஆண்டு இடைக்காடு வாலிபர் சங்கம் என்ற பெயரில் தனது பணி முன்னெடுப்புக்களை ஆரம்பித்த இந்த நிலையம் படிநிலை வளர்ச்சியில்




பல்துறை சார்ந்த பொது நல நிறுவனங்களின் அனுசரணையுடன் விவசாயம், விளையாட்டுத்துறை, உள்ளூர் குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் தொண்டர் சபை, சைவ இளைஞர் சங்கம், நூலகம், வாசகசாலை எனப் பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது. தொழில் உபகரண உற்பத்தி நிலையம் என்ற அமைப்பு ஊடாக விவசாய முன்னெடுப்புக்களுக்கான ஆலோசனை, வளப்படுத்தல்கள், உதவி வழங்கல்கள், ஆய்வு ரீதியிலான அறிவூட்டல், நலன் ஓம்பு நடவடிக்கைகள் என்பனவற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.

கல்வி முன்னேற்றத்துக்கான செயற்பாடுகள் என்ற வகையில் இடைக்காடு மகா வித்தியாலயத்தையும் பிரதேச மாணவர்களையும் கருத்திற் கொண்டு சனசமூக நிலையத்தைக் களமாகக் கொண்டு முன்னெடுத்துவருவதோடு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்து உதவி வருகின்றது.

ஆத்மீக ஈடேற்றத்துக்கான பணிகளைப் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தைக் களமாகக் கொண்டு செயற்படுகின்றது.

சனசமூக நிலையத்தின் வாசகர் சாலை பொது மண்டபத்தில் மாலை நேரத்தில் கூடியிருக்கும் மூத்த ஓய்வு நிலையாளர்களின் கலந்துரையாடலும் காத்திரமான சந்திப்பும் பல்துறை சார்ந்த சிறப்பான நிகழ்வாகும்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் பொதுக்கூட்ட அறிவித்தல்

தலைமை : அ.அல்பேட்
இடம் : யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடம்
காலம்: 22.03.2011 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 9.30 மணி

பிரதம விருந்தினர்:
தோழர் சிவராசா மோகன்
(ஈழமக்கள் புரட்சிகர முன்னணி - பத்மநாபா)

வரவேற்புரை - செ.ஸ்ரீராஜன்
செயலாளர் அறிக்கை - சி.அ.சிவலிங்கம்
பொருளாளர் அறிக்கை -கி.இரத்தினராசா
புதிய நிர்வாகம் தெரிவு
*சந்தாபெறல், மரணக் கொடுப்பனவுகள் சம்பந்தமாக உரையாடல் மற்றும் விடயங்கள்.*
நன்றியுரை: காப்பாளர் த.பரமலிங்கம்
*நிலையங்களை முழுமையாக மூடி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கிளைச் சங்கங்களும் அழைக்கப்பட்டுள்ளது.* - நிர்வாகம்

## சூராவத்தை கொலைச் சம்பவம் சந்தேக நபர் மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சுன்னாகம், சூராவத்தையில் மாமனாரை அடித்து கொலை செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரான மருமகனை எதிர் வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் எஸ்.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி மாமன், மருமகன் இருவருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது வயோதிபரான மாமனார் தம்பு பாலசிங்கம் (வயது-63) கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மருமகனான கு.விநாயமூர்த்தியை பொலிஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அதன் போது சந்தேக நபரை எதிர் வரும் 24 திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஓ-14)

## விற்பனையாளர் தேவை

கொழும்பு நகரிலுள்ள வியாபார நிறுவனத்திற்கு 30-40 வயதுக்கு இடைப்பட்ட ஆண் விற்பனையாளர் தேவை. க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் வியாபாரத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
*விண்ணப்பிக்கவும்:-*
**C/O: விளம்பர இலக்கம்:- 4125,
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கிளிநொச்சி

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கவனத்திற்கு.**

### பாடசாலைப்பணி தொடர்பாக

மேற்படி பாடசாலைப்பணி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இலவசமாக இடம்பெற்று வருகின்றது. தற்போது மாணவர்களுக்குப் பருவகாலச்சிட்டை வழங்கப்பட்டுள்ள நிலையில் இலவச பாடசாலை சேவை நிறுத்தப்பட்டுள்ளது. மாறாக பயணிகள் சேவை ஊர்தியில் மாணவர்கள் பருவகாலச்சிட்டையை வழங்கி பயணிக்கலாம் என்பதை அறியத்தருவதுடன், பயணிக்க அனுமதிக்காத பேருந்து இலக்கத்தை எமக்கு அறியத்தரும்படி வேண்டுவதோடு பருவகாலச்சிட்டையை பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு அரைக்கட்டணம் அறவிடப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தலைவர்,
தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், கிளிநொச்சி.**

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2009
### கலைமாணி பகுதி - II - 2008 (வெளிவாரி)
### மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

*கலைமாணி பகுதி II 2006 & 2007 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.04.2011 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/- ஆகும். யாழ்.பல் கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளி வாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப் பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா100/- க்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ.அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.*

***பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.***

*மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.*

பதிவாளர்
14.03.2011 (48,20,23)

## முன்னாள் துணைவேந்தர் துரைராசா நினைவாக கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஜன்ஸ்ரீன் அறிவியல் கழகம் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா ஞாபகார்த்தமாக ஜி.சீ.ஈ. உயர்தர மற்றும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு 'நவீன கற்றல் உத்திகளும் பரீட்சையை எதிர் கொள்ளலும்' என்ற தொனிப்பொருளில் பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

இலவசமாக நடத்தப்பட்டுவரும் இந்தக் கருத்தரங்குகளை தமது பாடசாலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அதிபர்கள் 0779221961 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யுமாறு அறிவியல் கழக செயலாளர் கேட்டுள்ளார். (ஓ-10)

## தவறிவிட்டது

R.C. தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த குணரட்ணம் தவமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (526315359 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்.
தொடர்பு: 0213205017

## Walk - in Interview
### 19-03-2011 (Saturday)

யாழ்.நகர், சவகச்சேரி, நெல்லியடியில் அமைந்துள்ள கிளைகளிற்கு கீழ்க்கண்ட பணியிடங்களிற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் சனிக்கிழமை 8 A.M - 2 P.M வரை யாழ்.நகர் அலுவலகத்தில் நடைபெறும்

- Student Relation officer - Female
- Trainee Instructor - Male / Female
- Computer Instructor - Male / Female
- Hardware Technician / Faculty - Male
- Assistant Lecturer ICT - Male / Female
- Assistant Lecturer (Tally,QB) - Male
- Lecturer for Multimedia Technology - Male / Female
- Lecturer - C,C++,Java,VB & Auto CAD - Male
- Lecturer - English Language - Male

The Applicant should possess 2 Passes in G.C.E. A/L, Recognized Computer Diploma, Fluency in English and ability to work as a team.மேல் குறிப்பிட்ட நகரங்களுக்கு அண்மையில் உள்ள விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது.

**ASIAN COMPUTER EDUCATION**
2G ,Stanley Road, Jaffna. T.P - 021-222-5677
E-mail : asianedu@dialogsl.net

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொதுக் கூட்டம் - 2011

மேற்படி கூட்டம் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் 27.03.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அ.கயிலாயபிள்ளை, தலைவர். ம.குமாரவேல்ராஜா, செயலாளர்.

## தவறிவிட்டது

அம்பலம் ஜெயகணேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை [750010407 V], சாரதி அனுமதிப் பத்திரம், திணைக்கள அடையாள அட்டை, யாழ்.மாவட்ட விசேட அடையாள அட்டை ஆகியன அடங்கிய அடையாள அட்டைக் கவர் 14.03.2011 அன்று காலை கோக்குவில் பொற்பதி வீதியில் இருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையம் சென்று பஸ்ஸில் கிளிநொச்சி பாரதி வித்தியாசாலைக்குச் சென்று வருவதற்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கவும் அல்லது 0776713953 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்
**லயன் சி.நற்குணலிங்கம்**

அவர்கள் கரவெட்டிப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக நீதி அமைச்சின் மத்திய சபை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் அவர்களினால் நியமிக்கப்பட்டமையை அறிந்து மகிழ்ந்து மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வுறுகின்றோம். மேலும் பல பதவிகள், பதவியுயர்வுகள் கிட்டவும் பணிகள் சிறக்கவும், நலமாக பல்லாண்டுகள் வாழவும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவதில் பூரிப்படையும்,
**வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.**
(சி/576832)(31)

## அறுபதாவது அகவையும் மணிவிழாவும் பிறந்தநாள் வாழ்த்தும்



திருமதி **பத்மராணி விஜயகுமார்**
(B.A, Dip. in Ed, SLTS- I, சங்கீத ஆசிரியை)

கல்விச் சேவையில் அளப்பரிய பணிகளாற்றி இன்று (17.03.2011) வியாழக்கிழமை தனது அறுபதாவது பிறந்தநாளில் ஓய்வுபெறும் திருமதி பத்மராணி விஜயகுமார் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களையும் கல்விப்பணியின் மணிவிழா வாழ்த்துக்களையும் எம் இதயத்தின் ஆழத்து அன்பினால் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓய்வுக்காலத்தில் சுகநலத்துடன் எம்முடன் இன்புற்று இணைந்திருக்க பொற்பதி விநாயகரை வேண்டுகின்றோம்.



59/1, பொற்பதி வீதி,
கொக்குவில்.
0212226427.

வாழ்த்துவோர்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(49-16-20)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் அதிபர்
***சி.நற்குணலிங்கம்***

அவர்கள் கரவெட்டிப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக நீதி அமைச்சின் மத்திய சபை ஆணைக்குழுவின் பதில் செயலாளரினால் நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். அவர் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயம், நெல்லியடி சனசமூக நிலையம், நெல்லியடி கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றி வருபவருமாவார்.

வாழ்க வளமுடன்! வளர்க நும் சேவை!

**வாழ்த்துவதில் மகிழ்வுறும்,**
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை,
நெல்லியடி சனசமூக நிலையம், நெல்லியடி கிராம அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பிறழ்வுகளுக்கு வைத்தியம் பார்க்கும் வைத்தியரை தண்டிக்கலாமா?

செய்திக்கட்டுரை

நோயாளி ஒருவருக்கு வைத்தியர் ஊசி போடும் போது அந்த நேரம் வலிக்கத்தான் செய்யும். அப்போது வைத்தியரை உதைக்க வேண்டும் போலவும் இருக்கும் பின்னர் அந்த ஊசியினால் நோய் குணமடையும் போது வைத்தியரைப் பாராட்ட வேண்டும் என்றும் மனம் நினைக்கிறது. அதுபோலத்தான் மாணவர்கள் ஆசிரியர்களால் தண்டிக்கப்படும் போது மனம் வெறுக்கிறார்கள். ஆனால் அவர்களின் தவறுகள் திருத்தப்படும் போது சந்தோஷம் அடைகிறார்கள்.

இன்றைய மாணவச் சமுதாயம் வித்தியாசமான சூழலில் மாயைகள் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. வசதிகளும் வாய்ப்புக்களும் அவர்களின் காலடியில் மண்டியிட்டுக் கிடப்பதால் அவர்கள் செல்லும் பாதைகள் தடம் புரள்கின்றன. இந்த நிலையில் சில வேண்டத்தகாத சமூகப் பிறழ்வுகளுக்குள் அவர்கள் சிக்கித் தவிக்கிறார்கள். இத்தகைய நெருக்கடியான சூழலில் மாணவர்கள் மீது ஆசிரியர்கள் சில கண்டிப்புக்களையும் தண்டிப்புக்களையும் திணித்துக் கொள்ள வேண்டிய அவசர அவசியத் தேவை ஏற்பட்டுள்ளது.

''அடியாத மாடு படியாது'' என்ற பழமொழி இன்றைக்கு இருக்கின்ற மாணவர் சமுதாயத்துக்கு ஏற்ற ஒன்றாகவே இருக்கிறது. சமூகப் பொறுப்புடன் மாணவர்களை வழிப்படுத்த நினைக்கின்ற ஆசிரியர்கள் இன்றைக்குப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கிறார்கள்.

குறிப்பாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தண்டிக்கும் ஆசிரியர்களைக் குற்றவாளிகளாகப் பார்த்து அவர்களைப் பொலிஸ் நிலையங்களிலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் இத்தனைக்கும் மேலாக நீதிமன்றங்களிலும் கொண்டு போய் நிறுத்தியுள்ளார்கள். அவர்கள் என்ன மகா குற்றமா செய்தார்கள்? வழி தடுமாறும், கல்வியில் அசண்டையீனமான மாணவர்களை ஒரு நிலைக்குக் கொண்டுவரவே அவர்கள் எத்தனிக்கிறார்கள். அதற்காகத் தண்டிக்கப்படுவது, குற்றவாளியாகப் பார்ப்பது எந்தவிதத்தில் நியாயம். ''ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்காமல் கையில் பிரம்பு எடுக்காமல் தமது போதனைகளை நடத்த வேண்டும்'' என்ற சுற்றுநிருபம் கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளது. அப்படியானால் ஆசிரியர்கள் மாணவர்களை ஏன் தண்டிக்கிறார்கள்? என்ற கேள்வி பெற்றோர்கள் மத்தியில் எழுந்திருப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் சுற்று நிருபத்துக்கு உட்பட்டுத்தான் தமது பணிகளை ஆற்ற வேண்டுமானால் முழுமையான கல்வி, ஒழுக்கமான கல்வி மாணவர்களைச் சென்றடையாது. அவர்கள் சுற்று நிருபத்துக்கு அப்பால் தமது அர்ப்பணிப்பான சமூகப் பொறுப்பான கல்விப் பணியில் தம்மை இணைத்துக் கொண்டிருப்பதாலேயே மாணவர்கள் ஓரளவுக்கேனும் கல்வியில் மேன்மையுறுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. சட்டங்கள், சுற்றுநிருபங்கள் இவற்றுக்கெல்லாம் அப்பால் எமது கல்விப் பாரம்பரியம், கலாசாரம் போன்ற விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகச் சில அர்ப்பணிப்பான பணிகளிலும் ஆசிரியர்கள் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற தமிழ் இனம் கல்வியால் நிமிர்ந்து வளர்ந்து உயர்ந்து செல்லமுடியும். இப்படியிருக்கையில் சமூகப் பொறுப்பைக் கையில் வைத்து மாணவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களைத் தயவுசெய்து குற்றவாளியாகக் கருதாது அவர்களுடைய பணிக்குப் பலம் சேர்ப்பவர்களாகப் பெற்றோர்கள் மாற வேண்டும்.

ஆசிரியர் மாணவரைத் தண்டிக்கிறார் என்றால் ஏன் எதற்காகத் தண்டித்தார் என்ற கேள்வியையே முதலில் எழுப்புங்கள். நிச்சயமாக அவர்களது தண்டனையில் நியாயம் இருக்கும். அதன் பின்னர் ''அந்த ஆசிரியர் தண்டித்தது சரி. இனிமேலாவது திருந்தி சரியான முறையில் நடந்துகொள் என்று உங்கள் பிள்ளைகளை வேண்டுமானால் ஒரு தடவை நீங்களும் தண்டித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக அவர்களது கல்வியில், ஒழுக்கத்தில் மாற்றம் வரும். அதைவிடுத்து தண்டிக்கப்படும் மாணவனோடு நீங்கள் சேர்ந்து ஆசிரியர்களை தண்டிக்க எத்தனிக்காதீர்கள். அது ஓர் சிறந்த எதிர்கால மாணவ சமுதாயத்தைப் படுகுழியில் தள்ளும் செயலாகவே அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

இன்றைய காலகட்டத்தில் சமூகப் பிறழ்வு என்கிற நோய் இளம் சமுதாயத்தைத் தீவிரமாகப் பீடித்துள்ளது. அதனைக் களைகின்ற வைத்தியர்களாக ஆசிரியர்களைக் கருதுங்கள். அவர்களைத் தண்டிக்காதீர்கள், கண்டிக்காதீர்கள்.

கவிநேசன்

உதயன் வெள்ளி விழா மலர்




கிடைக்குமிடங்கள்

01. பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

02. மணியம் ஸ்ரோர்ஸ்
(பத்திரிகை முகவர்)
கண்டி வீதி, சாவகச்சேரி.

03. அருள்நாயகி புத்தகசாலை
கண்டி வீதி, கொடிகாமம்

04. மொடேன் ஸ்ரோர்ஸ்
நெல்லியடி

05. நாவலர் புத்தகசாலை
மந்திகை

06. கணன் போட்டோ
பருத்தித்துறை

07. ராஜலக்சுமி புத்தகசாலை
நெல்லியடி

08. கனகா புத்தகசாலை
திருநெல்வேலி

09. பாக்கியா காகிதாதிகள்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி

10. துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்

11. ஸ்ரீகரன் புத்தகசாலை
சுன்னாகம்

12. இ.புஸ்பநாதன்
எஸ்.ஆர்.பி. ஸ்ரோஸ்
சங்கானை

13. அன்னை புத்தகசாலை
நவீன சந்தையடி,
யாழ்ப்பாணம்.

★ ஊடகவியல் தொடர்பான துறைசார் அரிய கட்டுரைகள்
★ மூத்த ஊடகவியலாளர்களின் சுவையான அனுபவங்கள்
★ குடாநாட்டின் ஊடகத்துறை வளர்ச்சியை வெளிப்படுத்தும் ஆவணங்கள்
★ அறிஞர் பெருமக்களின் கனதியான கட்டுரைகள்
★ தமிழ்ப் பிரதேசங்களின் வளங்கள், அவற்றின் அபிவிருத்தி குறித்த பார்வைகள்

பாடசாலைகள், நூல் நிலையங்கள், வாசிகசாலைகள் தோறும் பேணிக்காக்கவேண்டிய பெட்டகம்

(48,23,24)

யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. -சாவகச்சேரி

பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் - 2011

காலம்: - 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
இடம்: - பாடசாலை மண்டபம்

மேற்படி கூட்டத்துக்கு பழைய மாணவர்களையும்,
கல்லூரியின் ஆர்வலர்களையும்
அன்பாக அழைக்கின்றோம்

அதிபர்.

(1254) (25-19-45)

32ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
வீரசிங்கம் கௌசல்யா

மலர்வு
26.06.1980

உதிர்வு
14.02.2011

மூபத்து வருடங்கள்
வாழ்ந்த பூவே- எங்கள்
மூச்சாக முன்னின்று
வளர்ந்த பூவே

உன்னைக் காண எதிர்பார்த்து
துடிக்கின்றதே- நெஞ்சை
அணையாத தீ வந்து
எரிக்கின்றதே

கண்ணே எம் கண் முன்னே
வரவேண்டுமே- நீ
கன வார்த்தை கனிவாகத்
தரவேண்டுமே!

31/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

(49,23,24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் படிப்படியாக அரசியல் மாற்றம்: பிரதமர் வென்ஜியாபாவ் தெரிவிப்பு

பீஜிங், மார்ச் 17

சீனாவில் படிப்படியான அரசியல் மாற்றம் செய்யப்படும். ஆனால், பல கட்சி ஜனநாயக முறைக்கு அனுமதியில்லை என பிரதமர் வென் ஜியாபாவ் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் வென் ஜியாபாவ் இது குறித்து கூறியவை வருமாறு:-

சீனாவில் முறைப்படியான மாற்றம் செய்யப்படவில்லையானால், கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம் வீணாகிவிடும். எனவே, படிப்படியான அரசியல் மாற்றம் தேவை. ஆனால், பல கட்சி ஆட்சி முறைக்கு அனுமதியில்லை.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தான் சீர்திருத்தம் தொடரும். வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் அரசியல் கிளர்ச்சி சீனாவில் கிடையாது. 130 கோடி மக்கள் வாழும் மிகப் பெரிய நாடான சீனாவில் அரசியல் மாற்றத்தை உடனடியாக செய்துவிட முடியாது.

சமூக நல்லிணக்கத்துடன், முறையானதாகவும் நிலையானதாகவும் இருக்கும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இவ்வாறு வென்ஜியாபாவ் கூறினார்.



சீனா சென்றிருந்த பெலரோஸ் பிரதமர் மிகையில்மையான்ஸினிகோவிச் (இடது), ரஷ்ய பிரதமர் விளாடிமிர்புடின் ஆகியோர் மின்ஸிக் நகரில் சந்தித்துப் பேசினர்.

# அரபு நாடுகளில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி

வடக்கு ஆபிரிக்கா மற்றும் அரபு நாடுகளில், அரசுகளுக்கு எதிராக மக்கள் பயங்கர கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

துனீசியா, எகிப்து, பக்ரைன், லிபியா, சவுதி அரேபியா என மக்கள் கிளர்ச்சி மகத்தான வெற்றியை கொடுத்து வருகிறது.

உலகின் பார்வை இந்த நாடுகளின் மீது இருக்க, மறுபக்கம் உலக நாடுகளுக்கு சவாலாக இருந்து வரும் தலிபான்கள், அல்-குவைதா பயங்கரவாதிகள் பற்றி உலகம் மறந்து விட்டதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது கடந்த 1980களில் ரஷ்யர் களின் ஆக்கிரமிப்பு இருந்த போது, இவர்களை விரட்ட தலிபான் மற்றும் அல்-குவைதா பயங்கரவாதிகளை அமெரிக்கா கைக்கூலிகள் போல் பயன்படுத்தியது.

1989 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்ய படைகள் வாபஸ் பெற்றன. இது இந்த இரு பயங்கரவாத அமைப்புகளுக்கும் பெரும் உற்சாகத்தை கொடுத்தது.

ஆப்கானிஸ்தானில் இருந்து விரைவில் அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்து வருகிறார். அப்படி ஒரு வேளை வாபஸ் பெறப்பட்டால், தலிபான்களுக்கும், அல்-குவைதா பயங்கரவாத அமைப்புகளுக்கும் பயந்து கொண்டு வாபஸ் பெறப்பட்டது போலாகி விடும். இதுவே, உலகளவில் இந்த அமைப்பு களுக்கு செல்வாக்கைத் தேடித் தரும். இன்னும் உலகளவில் தங்களது கிளைகளை வளர்த்துக் கொள்ள உந்தப்படும்.

அரபு நாடுகளில் நடந்து வரும் கிளர்ச்சி இளைஞர்களால் ஆட்சி மாற்றம் வேண்டி நடத்தப்படுகிறது. அமெரிக்கர்களின் கைப் பாவையாக அரபு நாடுகள் இருக்கின்றன என, ஒசாமா கடந்த 20 ஆண்டுகளாக குற்றம் சாட்டி வந்துள்ளான்.

அரபிய தீபகற்பத்தில் அல்-குவைதா பெரியளவில் கடந்த 2009 இல் வேரூன்றி விட்டது. வடக்கு ஆபிரிக்காவில் மாக்ரெப் பகுதியில் அல்-குவைதா ஏற்கனவே தனக்கென ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்டது. சவுதி அரேபியா மற்றும் ஏமன் நாடுகளில் இருந்த அல்-குவைதா பயங்கரவாதிகள் இணைக்கப்பட்டு, மாக்ரெப்பில் பெரியளவில் தங்களுக்கென இடத்தை உருவாக்கிக் கொண்டனர். சவுதி அரேபியாவுக்கு எதிராக கிளர்ச்சியில் இறங்க விரும்பும் இளைஞர்கள் அல்-குவைதா அமைப்புடன் இணைந்து வருவது இந்த பயங்கரவாத அமைப்புக்கு கூடுதல் பலமாக உள்ளது.

இதுவரை அமைதி காத்த அல்-குவைதா பயங்கரவாதிகளும் தற்போது கடாபியை நாட்டை விட்டு விரட்டும்படி கிளர்ச்சியாளர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள சிறிதளவுகனிமபொருள்களைதங்கள்கட்டுப்பாட்டில் கொண்டு வர தற்போது தலிபான் மற்றும் அல்-குவைதா பயங்கரவாதிகள் போராடி வருகின்றனர். இந்த நிலையில், அரபு நாடுகளில் தங்களை நிலை நிறுத்தி கொண்டுள்ள அல்-குவைதாகையில், எண்ணெய் வளம் நிறைந்த அரபு நாடுகள் சென்று விட கூடாது என்பதை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் மறந்து [illegible] அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# அமெரிக்காவிடம் உதவி கேட்கும் ஜப்பான்

ஜப்பானில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்காவிடம் ஜப்பான் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருக்கும் அணு உலைகள் சேதமடைந்தன.

அணுக்கதிர் வீச்சு ஏற்பட்டுள்ளதால் ஜப்பானில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவிடம் ஜப்பான் உதவி கோரியுள்ளது.

அமெரிக்க ராணுவப் படைகள் அணுக்கதிர்வீச்சை சமாளிக்க உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. (ம)


யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. -சாவகச்சேரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்: - 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
இடம்: - பாடசாலை மண்டபம்

மேற்படி கூட்டத்துக்குப் பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் அன்பாக அழைக்கின்றோம்

அதிபர்.

(1255) (25-19-45)


## யாழ்ப்பாணம் மாநகர சபை
### ஆதனப் பெயர்மாற்றம் சம்பந்தமான அறிவித்தல்

வட்டாரம் 21இல் ஆதன இலக்கங்கள் 390, 392, 396, புன்னாலை வீதியிலுள்ள ஆதனங்களை கே. செல்வகுமாரும் மனைவி சுஜாதா என்பவர் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாதனங்கள் எமது பதிவேடுகளின் படி ஜனாப் சுல்த்தான் மொகிடீன் மொகமட் றபீக்கின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனவிவரங்கள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை கோயில் பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''பரந்தன் புளியடி'' நிலப்பரப்பு 02 குளி 13.67. இது நில அளவையாளர் கே. பஞ்சாட்சரத்தினால் 2003.10.09 ஆம் திகதி 3090 இலக்கப்படத்தில் இருகடைக் கட்டடமும் வீடும் கிணறும் ஆகும்.

இப் பெயர்மாற்றம் சம்பந்தமாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்க விரும்புவோர் இவ்வறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குள் தகுந்த ஆவணங்களுடன் '' முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கு ஆட்சேபனைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்கப்பெறாதுவிட்டால் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

திருமதி யோ. பற்குணராசா
முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

14.03.2011

(சி-576831) (25+19 +45)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

17.03.2011

அமரர் பசுபதி மகேந்திரம்



பிறப்பு 03.10.1960

இறப்பு 07.04.2009

திதி: பங்குனி மாத வளர்பிறை திரயோதசி

கடலிலே மூழ்கி முத்தெடுத்தாய்
கச்சாய் மண்ணிலே என்னைக்கைப் பிடித்தாய்
என்னுடன் இரண்டைத் தத்தெடுத்தாய்
கடைசியில் ஒன்றைப் பெற்றெடுத்தாய்
இன்பமாய் எம்முடன் வாழ்ந்தாய்
துன்பத்தில் எம்மைத் துவளவிட்டு
எங்கு சென்றீர் அப்பா...? உம் பிரிவினால்
கண்ணீருடன் கலங்கி நிற்கின்றோம்
நானும் என் பிள்ளைகளும்

உம் பிரிவால் வாடும்:
கச்சாய் வாழ் மனைவி - கமலா,
பிள்ளைகள்

சுதுமலை தெற்கு.
சாவற்கட்டு.

(19-25-30)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், தமிழ்த்துறையின் தலைவருமான பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்களின் மாமனார்

### தம்பு கணநாதன்

அவர்கள் 13.03.2011 அன்று காலமாகிவிட்டார் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

யா/ பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

(சி-576829)(25-19-45)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா அன்னம்மா



புங்குடுதீவு, 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.67 1/1, புனித லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6 இனைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா அன்னம்மா 14.03.2011 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் தனலெட்சுமி, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் அம்பிகாவதி, ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும் நடராஜா, குருநாதசிவம் (உரிமையாளர் - சிவா நறுமணப் பூங்கா), விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, முத்தாச்சி, பூமணி, கந்தையா ஆகியோரின் பிரியமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பொன்னம்பலம், சின்னத்தம்பி, சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகுமார், சசிகலா, பிருந்தா, சுரேஸ்குமார், ரமேஸ்குமார், பிரியா, சங்கீதா, நிலானி, நிஷாந்த், யோகராஜா, சிவகுமார், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருஷாந்த், தியானா, சறோணியா, பிரவிந்த், கோவிந்த், சஜீத் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் அன்று மதியம் 2 மணி முதல் நடைபெற்று பி.ப. 4 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: து.குருநாதசிவம் (மருமகன்),
உரிமையாளர் - சிவா நறுமணப் பூங்கா
தொ.பே. 021 222 2567

(19-25-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராபத்தை விளைவிக்கும் அளவுக்கு ஜப்பானில் அணுக்கதிர் வீச்சு அதிகரிப்பு

டோக்கியோ, மார்ச் 17

ஜப்பானின் புக்குஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை மேலும் இரண்டு உலைகள் வெடித்துச் சிதறியதை அடுத்து, மக்களுக்குப் பேராபத்து விளைவிக்கும் அளவுக்கு அணுக்கதிர்வீச்சின் அளவு அதிகரித்திருக்கிறது என பிரதமர் நவோட்டோ கான் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர பூகம்பம், ஆழிப்பேரலை ஆகியவற்றைத் தொடர்ந்து, தற்போது அணுக்கதிர்வீச்சு அபாயம் அதிகரித்து வருகிறது.

தலைநகர் டோக்கியோவிலிருந்து 250 கி.மீற்றர் வடகிழக்கில் அமைந்துள்ள புக்குஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தில், ஆறு அணுமின் உலைகள் செயல்படுகின்றன. இவற்றில் ஒன்றாம் எண் உலை கடந்த 12 ஆம்திகதியும்,மூன்றாம்எண் உலை 14ஆம் திகதியும் வெடித்தன.

**2ஆம் உலை வெடிப்பு:**

கடந்த 14ஆம் திகதி இரவு, இரண்டாம் எண் உலையில், குளிரூட்டும் முறைகள் தோல்வியடைந்தன. தொடர்ந்து 'கோர்' எனப்படும் யுரேனியக் கம்பிகள் உருகின என செய்திகள் வெளியாகின.

இத்தகவலை ஜப்பானிய அதிகாரிகள் மறுக்கவில்லை. ஜப்பான் நேரப்படி, செவ்வாய்க்கிழமை காலை 6.10 மணிக்கு இரண்டாம் எண் உலை வெடித்துச் சிதறியது. இதில், உலையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள முதல் நிலைச் சுற்றுச் சுவர் சேதமடைந்தது.

**4ஆம் உலையில் திடீர் தீ:**

இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை காலை ஜப்பான் நேரப்படி 9.40 மணியளவில், நான்காம் எண் உலையில் திடீரென தீப்பிடித்தது. பல மாதங்களுக்கு முன்னரே பராமரிப்புக்காக அந்த உலை மூடப்பட்டிருந்தது.

ஆனால், உலையிலிருந்த 'கோர்' கம்பிகள், அங்கிருந்து அகற்றப்படாமல், நீரில் மூழ்கியிருக்கும்படி வைக்கப்பட்டிருந்தன. தீ விபத்து குறித்து ஆய்வு செய்த நிபுணர்கள் கூறுகையில்,''கோர் கம்பிகளைச் சுற்றியிருந்த நீர் வற்றியிருக்கக் கூடும். அதனால் உலைக்குள் வெப்பம் அதிகரித்து தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம். இச்சம்பவம் மற்ற மூன்றில் நடந்திருப்பதை விட பேராபத்தை விளைவிக்கக் கூடியது'' என்று கூறினர்.

இதையடுத்து, டாய் இச்சியைச் சுற்றி 30 கி.மீற்றர் வட்டாரத்தில் வசிப்பவர்கள் உடனடியாக வெளியேறும்படியும், அந்த வட்டாரத்தில் வெளியேறாமல் உள்ள ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேரும் வீட்டை விட்டு வெளியே வராமல், ஜன்னல்கள், கதவுகள் ஆகியவற்றை மூடிக்கொள்ளும்படியும், 'ஏசி' பயன்படுத்த வேண்டாம் எனவும் அரசு அறிவித்தது.

டாய் இச்சி நிலையத்தில் பணியாற்றும் 800 ஊழியர்களும் ஏற்கனவே, அந்த வட்டாரத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டனர். உலைகளுக்குள் கடல் நீரைச் செலுத்தி வெப்பத்தைக் குறைக்கும் பணியில் தற்போது 50 பணியாளர்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**பிரதமர் எச்சரிக்கை:**

அடுத்தடுத்து அணுஉலைகள் வெடித்துச் சிதறியதைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை காலை இதுகுறித்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த பிரதமர் நவோட்டோ கான், ''கதிர்வீச்சு குறித்து மக்கள் பீதி அடையவேண்டாம். அதே நேரம், டாய் இச்சியிலிருந்து கதிர்வீச்சு வெளிப்பட்டு பரவி வருகிறது. இந்தக் கசிவு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது'' என்று தெரிவித்தார்.

# லிபியப் புரட்சியாளர்களிடம் இருந்து மேலும் ஒரு நகரம் கைப்பற்றப்பட்டது

திரிபோலி, மார்ச் 17

லிபிய அஜ்தாபியாவில் கடந்த 3 நாள்களாக நடந்த சண்டையில் அஜ்தாபியா நகரம் இராணுவம் வசம் வீழ்ந்தது. தற்போது அது கடாபியின் ஆதரவாளர்கள் வசமாகிவிட்டது.

லிபியாவில் ஜனாதிபதி கடாபி பதவியிலிருந்து வெளியேற வலியுறுத்தி பொதுமக்கள் புரட்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தும் போராட்டக்காரர்கள் பெங்காசி, ஷாலியா, ராவ் வஜப், அஜ்தா பியா உள்ளிட்ட நகரங்களைப் பிடித்து தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருந்தனர்.

எனவே, அவற்றை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இராணுவத்துக்கு கடாபி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் வசமிருந்த நகரங்கள் மீது இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

போராட்டக்காரர்கள் வசமிருந்த ஷாவியா, ராவ் வஜப், பிரகா ஆகிய நகரங்களை இராணுவம் மீட்டு மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து அஜ்தாபியா நகரை மீட்பதில் முனைப்பாக இருந்தது.

அந்நகரின் மீது கடாபியின் விமானங்கள் மூலம் இராணுவத்தினரும், ஆதரவாளர்களும் ரொக்கெட் குண்டுவீசி தாக்கினர். போராட்டக்காரர்களின் புரட்சிப் படையினரும் எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

லிபிய அஜ்தாபியாவில் கடந்த 3 நாள்களாக நடந்த சண்டையில் அஜ்தாபியா நகரம் இராணுவம் வசம் வீழ்ந்தது. தற்போது அது கடாபியின் ஆதரவாளர்கள் வசமாகிவிட்டது.

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களின் வசமுள்ள லிபியாவின் 2 ஆவது பெரிய நகரமான பெங்காசியை கைப்பற்றுவதில் இராணுவம் மிகத் தீவிரமாக உள்ளது.

அதேநேரத்தில், கடாபிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கடாபியின் நெருங்கிய நண்பரான இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி இவரது நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

லிபிய போராட்டக்காரர்களை பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஷி அங்கீகரித்துள்ளார். இது கடாபிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஜி-8 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்தது. இதில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் டெகாகிமட்சுமொட்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாகிஸ்தானில் 8 தீவிரவாதிகள் பலி 3 மறைவிடங்கள் தகர்க்கப்பட்டன

பெஷாவர், மார்ச் 17

பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் தலிபான் ஆதரவு தீவிரவாதிகள் 8 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள குர்ரம் பகுதியில் தீவிரவாதிகளின் மறைவிடங்களில் தாக்குதல் நடத்தினர். அப்போது தீவிரவாதிகள் 8 பேர் கொல்லப்பட்டனர்.

இப்பகுதியில் கடந்த மூன்று வருடமாக, ஷியா, சன்னி பிரிவுகளைச் சேர்ந்த வெவ்வேறு பழங்குடியினரிடையே மோதல்கள் நடைபெற்று வந்தன. இதனிடையே, தலிபான் இயக்கத்தினர் அந்தப் பகுதியில் வாழ்ந்துவரும் சன்னி பிரிவினருக்கு ஆதரவாக பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வந்தனர். இதில் நூற்றுக் கணக்கானவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர், குர்ரம் பகுதியிலுள்ள தலிபானின் மறைவிடங்களில் தாக்குதல் நடத்தியபோது, 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களின் 3 மறைவிடங்கள் தகர்க்கப்பட்டன.

# அரசுக்கு எதிரான திடீர் போராட்டம் பஹ்ரேனில் அவசர நிலை பிரகடனம்

மனாமா, மார்ச் 17

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் ஒன்றான பஹ்ரைனில் மன்னர் ஹமாத்துக்கு எதிராக பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப் போராட்டத்தில் ஷியா பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக போராட்டம் நடந்து வருகிறது. போராட்டத்தில் இதுவரை 7 பேர் பலியாகி உள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகர் மனாமாவில் மீண்டும் போராட்டம் வெடித்தது.

ஷியா பிரிவினரும், மன்னருக்கு ஆதரவாகச் செயல்படும் சன்னி பிரிவினரும் மோதிக்கொண்டனர். எனவே கலவரம் மூண்டது. கலவரத்தை அடக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகள், ரப்பர் குண்டுகள் ஆகியவற்றை வீசினார்கள்.

இவற்றில் 200இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு போராட்டம் வலுவடைந்துள்ளது. மனாமா நகரம் முழுவதும் மோதல்கள் வெடித்துள்ளன. இதனால் அங்கு கடைகள், வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் மூடப்பட்டன.

எனவே அங்கு தெருக்கள் முழுவதும் பாலைவனம் போல் காட்சி அளிக்கிறது. போராட்டத்தை அடக்க சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது.

அவை பஹ்ரைன் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் அங்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இது 3 மாத காலத்துக்கு அமுலில் இருக்கும். இதற்கான உத்தரவை மன்னர் ஹமாத் பிறப்பித்துள்ளார்.

# ஜப்பானில் மீண்டும் பூகம்பம்

டோக்கியோ, மார்ச் 17

ஜப்பானின் கிழக்குப் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் பூகம்பம் 6 புள்ளிகளாகப் பதிவாகியது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தை தொடர்ந்து ஆழிப் பேரலைகள் ஏற்பட்டன. அதன் பின்னர் அவ்வப்போது நில அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மீண்டும் பூகம்பம் ஏற்பட்டுள்ளமை ஜப்பான் மக்கள் மத்தியில் பீதியை அதிகரித்துள்ளது.

# ஜப்பான் பிரதமர் மீது குற்றச்சாட்டு

ஜப்பான் தற்போது சந்தித்து வரும் அவலங்கள் எளிதில் தீர்க்க முடியாதவை என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ அணுஉலைகள் வெடிப்பு குறித்த போதுமான தகவல்களை பிரதமரும், டாய் இச்சியை இயக்கிவரும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பெனியும் தெரிவிக்கவில்லை என ஜப்பானிய பத்திரிகைகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

★ மோசமான இந்த அணு உலை வெடிவிபத்தால் தைராய்ட், எலும்புகளுக்கிடையில் உள்ள மஜ்ஜை ஆகியவற்றில் புற்றுநோய், இரத்தப் புற்று நோய் ஆகியவை ஏற்படும் என நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணு உலைகளின் பாதுகாப்பை உறுதி செய்க

## பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவு



டில்லி, மார்ச் 17

ஜப்பானில் நிலநடுக்கம், ஆழிப்பேரலையால் அணுக் கதிர்வீச்சு ஆபத்து ஏற்பட்டிருப்பதை அடுத்து, இந்தியாவிலுள்ள அணு உலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது எனப் பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றில் தெரிவித்தார்.


நிலநடுக்கம், ஆழிப்பேரலை போன்ற பேரழிவுகளைத் தாங்கும் வகையில் நமது அணு உலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யுமாறு அணுசக்தித்துறை, அதன் கீழ் இயங்கும் இந்திய அணு மின்நிறுவனம் (என்.பி.சி.ஐ.எல்.) ஆகியவை அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன என்று பிரதமர் கூறினார்.

இதனிடையே என்.பி.சி.ஐ.எல். வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இந்தியாவிலுள்ள அணு உலைகள் அனைத்தும் இயற்கைப் பேரிடர்களைத் தாங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

ஜப்பானில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருவதாகவும், ஆய்வுக்குப் பின்னர் தேவைப்படும் கூடுதல் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுவதும் 20 அணுமின் உலைகளை என்.பி.சி.ஐ.எல். இயக்கி வருகிறது. (201)

## சாதனைப் பயணம்...



கோவை, அன்னூர் அருகில் அமைந்துள்ள செல்லப்பம்பாளையத்தில் தனியார் கல்லூரியில் கின்னஸ் சாதனைக்காக 3,200 சதுரமீற்றர் அளவில் வரையப்பட்ட திருவள்ளுவரின் உருவப்படம்.

## அ.தி.மு.க.வில் சேர்ந்தார் நடிகர் பிரிதிவிராஜ்


நடிகர் பிரிதிவிராஜ் நேற்று முன்தினம் அ.தி.மு.கவில் சேர்ந்தார். அந்தக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லை அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எஸ்.காளியப்பன் மற்றும் அவரது மனைவி திலகா, சென்னை அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் விஸ்வநாதன், திரைப்பட இயக்குநர் ஈரோடு சௌந்தர், நடிகர் பிரிதிவிராஜ் ஆகியோர் அ.தி.மு.க பொதுச்செயலர் ஜெயலலிதாவை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர். என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தன் இனத்துக்காகப் போராட வந்திருக்கும் தம்பி விஜய் தீவிரவாதி அல்லன்; போராளி

## அக்கினிப்புயல் சீமான் அனல் பேச்சு

என் தம்பி விஜய் தீவிரவாதி அல்லன்; தன் தமிழினத்துக்காகக் குரல் கொடுக்க வந்திருக்கும் - போராட வந்திருக்கும் போராளி - என்று இயக்குநரும், ஈழத் தமிழர் ஆதரவுப் பிரமுகருமான சீமான் தெரிவித்துள்ளார்.



நாம் தமிழர் கட்சியின் மாநிலத் தலைவர் சீமான் சட்டப்படி குற்றம் என்ற படத்தில் சட்டத்தரணியாக நடித்துள்ளார்.

இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்தது. படத்தின் இயக்குநர் எஸ்.ஏ.சந் திரசேகரன், நடிகர் சத்யராஜ், இயக்குநர் ஷங்கர் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் பங்கேற்றனர்.

இவ்விழாவில் சீமான் பேசியவை வருமாறு -

சட்டப்படி குற்றம் என்று படம் எடுத்திருக்கிறீர்கள். அந்த குற்றத்துக்குத் தீர்ப்பும் உங்களிடமே இருக்கிறது. அந்தத் தீர்ப்புத்தான் விஜய். எங்கெல்லாம் அக்கிரமங்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் புரட்சி வெடிக்கவேண்டும். மக்களுக்கு புரட்சியைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படிப் புரட்சியைச் சொல்லிக் கொடுக்கிறது இந்தப்படம்.

தம்பி விஜய் அரசியலுக்கு வரக் கூடாது என்று சொல்லாதீர்கள். அவர் வரவேண்டும். அவருக்கான அரசியலை அவர்தான் செய்ய வேண்டும்.

உலக வரைபடத்தில் இலங்கை என்ற நாடே இருக்காது என்று இலங்கை அரசுக்கு எதிராக விஜய் கோபப்பட்டார். என் தம்பி விஜய் ஏன் அப்படி கோபப் பட்டார்?

மண்ணையும், மக்களையும் உயிருக்கு உயிராய் நேசிப்பவர்களுக்குத்தான் அப்படி கோபம் வரும். இப்படிப் பேசுவதால் தீவிரவாதி என்ற பட்டம் கட்டி விடாதீர்கள். எப்போதும் போலவே இப்போதும் அப்படி செய்துவிடாதீர்கள். என் தம்பி விஜய் தீவிரவாதி அல்லன்; தன் இனத்துக்காகக் குரல் கொடுக்க வந்திருக்கும், போராட வந்திருக்கும் போராளி. அமைதி யாக இருந்த தம்பியை போராட்டக்காரனாக மாற்றிவிட்டீர்கள். - இவ்வாறு சீமான் கூறினார்.

சிவமயம்

## கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு

### பக்தர்களுக்கான பாதுகாப்புப்பிரிவினரின் அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் (19.03.2011) சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாகப் பெண்பக்தர்கள் தயவுசெய்து தங்கள் பாதுகாப்புக் கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(49,20,23) ஆலய பரிபாலனசபை.

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை கந்தையா எதிர்மன்னசிங்கம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட எதிர்மன்னசிங்கம் மலேசியா, கோலாலம்பூரில் கடந்த 14.03.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்ணாகம் தாமோதரம்பிள்ளை கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பண்ணாகம் அருணாசலம் இராசா- ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சிவலிங் கம், சிவநேசன், சிவராசன், சிவபாலன், நிர்மலாதேவி (மாலா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிங்கப்பூர் தங்கம் கிளினிக் அமரர் ஆறுமுகம், அமரர் நாகலிங்கம் ஆகியோரின் பெறாமகனும், அமரர்களான இராமலிங்கம் அன்னப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற அற்புதமலர் மற்றும் திருமதி இராஜேஸ்வரி, கிருஷ்ணமூர்த்தி, திருமதி இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம், அமரர் இ.சிவப்பிரகாசம் B.Sc. மற்றும் திருமதி புவனேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியா, கோலாலம்பூரில் 15.03.2011 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
திரு.திருமதி
தா.க.கிருஷ்ணமூர்த்தி (கிறிஸ்கோ)

பண்ணாகம்,
சுழிபுரம்.
(1262) (41,20,22)

## யாழ்.மாவட்ட தனியார்பாரவூர்தி உரிமையாளர்கூட்டுறவுச்சங்கம் (வ-து)

### விசேட பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் தலைவர் க.இலங்கநாதன் தலைமையில் 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:
2011 ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர்களின் கோவைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதால் சகல அங்கத்தவர்களும் 25.03.2011இற்கு முன்னர் மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(c/5776827) (41,20,26)
ப.பரார்த்தனன்
செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனப் பணியாளர் சிவகுமார் (குமார்) அவர்களின் அன்புத் தந்தை

### முருகேசு சிவானந்தன்

அன்பினால் உலகை ஆண்டீர்
உங்கள் பண்பினால் உயர்ந்து நின்றீர்!
முயற்சியில் முன்னணி வகித்தீர்!
உலகினில் உங்கள் புகழ் நிலைத்து நிற்கும்!
உங்கள் பிரிவினால் வாடி நிற்கின்றோம்
கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
யாழ்ப்பாணம்.
சாரங்கா நகைமாடம்
(c/5776838) (41,20,22) உரிமையாளர், ஊழியர்கள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 07 . 1934



உதிர்வு 18 . 03 . 2008

அமரர் V.P தியாகராசா
(ஓய்வுபெற்ற இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அமைப்பாளர்)
திதிபூர்வபக்க திரயோதசி (17.03.2011)

அறியாத சோகங்களை
இமைப்பொழுதில் தந்து
மறைந்தீர்களே அப்பா...
உங்கள் பிரிவை
என்றும் மறக்க முடியாது.

மனைவி தி. மங்கையர்க்கரசி
பிள்ளைகள்:
குணா, ஞானா, சுதா, லதா, கவிதா.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"ஷஷி"
சாவகச்சேரி வடக்கு,
மடத்தடி, சாவகச்சேரி.
(180) (41,20,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். விவகாரத்தில் மத்திய அரசால் தனிமைப்படுத்தப்பட்டார் மன்மோகன் சிங்

## விக்கிலீக்ஸ் தகவலால் புதுப்பிரச்சினை

டில்லி, மார்ச் 17

பாகிஸ்தான் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தனது சொந்த அரசாலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என அமெரிக்கத் தூதர் திமோதி ரோமர் கூறினார் என விக்கிலீக்ஸ் இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இராணுவ இரகசியம், வெளியுறவுக் கொள்கை உள்ளிட்ட பல முக்கிய தகவல்களை கடந்தாண்டு இறுதியில் விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தியாவைப் பற்றிய தகவல்களும் வெளியிடப்பட்டன. கடந்த 2009 இல் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே.நாராயணனுடன், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் திமோதி ரோமர் ஆலோசனை நடத்தினார். அப்போது இருவருக்கும் இடையே நடந்த உரையாடல்கள் குறித்த தகவல்களை திமோதி ரோமருடன், அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு அனுப்பினார். அந்த தகவல் வீக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் திமோதிரோமர் கூறியவை வருமாறு –

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனுடன் பேசினேன். அப்போது, பாகிஸ்தான் தொடர்பான விவகாரத்தில், அவருக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் கருத்துவேறுபாடு இருப்பது தெரியவந்தது.

இது தொடர்பாக, தனது கருத்து வேறுபாடுகளை பிரதமரிடம் தெரிவிப்பதற்கும் அவர் தயக்கம் காட்டவில்லை என்றும் தெரியவந்தது. நாராயணன், சோனியா குடும்பத்துக்கு நெருக்கமானவராகக் கருதப்படுவதால் பிரதமரிடம் தயக்கம் காட்டாமல் தனது கருத்தைத் தெரிவித்து வருகிறார்.

பாகிஸ்தானுடனான விவகாரத்தை, பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்பது பிரதமரின் கருத்தாக உள்ளது. ஆனால், நாராயணனுக்கு பேச்சில் நம்பிக்கை இல்லை. மொத்தத்தில் பாகிஸ்தான் விவகாரத்தில், பிரதமர் மன்மோகன் சிங், தனது சொந்த அரசாலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

– இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியாகியுள்ள இந்த தகவல்களால், தேசிய அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க அரசை சார்ந்த அரசு என்று பா.ஜ.கவின் எம்.பி. ஜஸ்வந்த் சிங் நேற்று முன்தினம் லோக்சபாவில் விமர்சித்தார்.

இலங்கை மற்றும் நேபாளம் விடயத்தில் அக்கறை காட்டவில்லை என்று கூறிய அவர் பாகிஸ்தான் விடயத்தில் இந்த அரசு 'சிம்லா ஒப்பந்தத்தைப் பின்பற்றுகிறதா' என்று கேட்டார்.

கடந்த 2006இல் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றம் பற்றி விக்கிலீக்ஸ் தகவல்கள் பொய்யானவை என்று காங்கிரஸ் மறுத்தது. பெற்றோலிய அமைச்சராக மணிசங்கருக்குப் பதிலாக அமெரிக்காவுக்கு வேண்டிய தியோரா நியமனம் என்ற தகவலையும் அது ஏற்கவில்லை.

இதேவேளை, விக்கிலீக்ஸ் தகவல் பரபரப்பானது. ஆனால், அறிவுக்குப் பொருந்தாதது என்று காங்கிரஸ் தகவல் தொடர்பாளர் சிங்வி தெரிவித்துள்ளார்.

ஆரம்பம்.......



டில்லியில் நடைபெற்ற மகளிர் மாநாட்டை, ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

# 19 வரை பொறுத்திருந்து பார்ப்போம் நாங்கள் யார் என்பதை நிரூபிப்போம்

## கட்சியினருக்கு வைகோ கடிதம்

சென்னை, மார்ச் 17

ம.தி.மு.க. உயர்நிலைக் குழுக் கூட்டம் சென்னையில் வரும் 19 ஆம் திகதி நடைபெறுகிறது. அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்; அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவோம் என்று தனது கட்சியினரிடம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. அணியுடன் உள்ள உறவு குறித்து இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. அணியில் ஏழு வருடங்கள் நட்புடன் இருந்து வரும் ம.தி.மு.கவுக்கு இதுவரை தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. எட்டு தொகுதிகள் வரையே அளிக்கப்படும் என அ.தி.மு.க. கூறியது எனத் தகவல்கள் வெளியான நிலையில் ம.தி.மு.க. தலைமை மிகவும் சோர்வடைந்துள்ளது.

தான் மனக் கஷ்டத்தில் இருந்தாலும் கட்சியினர் சோர்ந்து விடாமல் இருப்பதற்காக, மாவட்டச்செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், கட்சிக்குச் சோதனை மேல் சோதனை ஏற்பட்டு வருகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நாம் யார் என்பதை நிரூபிப்போம். கட்சியின் மாவட்டச்செயலாளர்கள் கூட்டத்தை எதிர்வரும் 19 இல் கூட்டியுள்ளோம். அதுவரை பொறுத் திருப் போம். அதன் பின்னர் அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவோம் – என்று அவர் தெரிவித்துள்ளார். (201)

# தி.மு.க. வேட்பாளர் பட்டியல் இன்று வெளியீடு பட்டியலில் இடம் கிடைக்காத அமைச்சர்கள் கலக்கம்

சென்னை, மார்ச்.17.

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு, அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரம் காட்டி வருகின்றன. இதில், தி.மு.க., கூட்டணி முந்திக் கொண்டு, முதல் கட்டமாக கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிப் பட்டியல், தனது கட்சி வேட்பாளர்கள் பட்டியலைத் தயார் செய்து விட்டது.

தி.மு.க., சார்பில் போட்டியிட உள்ள வேட்பாளர்களின் பட்டியல், இன்று வெளியிடப்படவுள் ளது. ஆனால் இந்தப் பட்டியலில், சில அமைச்சர்களுக்கு இடம் கிடைக்காது என்பது உறுதியாகி உள்ளது.

இதனால், தி.மு.க., அமைச்சர்கள் பலர், கலக்கத்தில் ஆழ்ந்துள்ளனர். இவர்களுக்கு புதிதாக அமைய உள்ள மேலவையில் இடம் அளிக்கப்படும் என, உறுதி அளிக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, அமைச்சர்கள் கோ.சி.மணி, ஆற்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், பூங்கோதை, முன்னாள் அமைச்சர் என்.கே. கே.பி.ராஜா ஆகியோர், வாய்ப்பு மறுக்கப்படுவோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக தெரிகிறது.

அதுபோல், ஆலந்தூர் தொகுதி மறுக்கப்பட்டுள்ள அமைச்சர் தா.மோ.அன்பரசன், கிருஷ்ணகிரி எம்.எல்.ஏ., செங்குட்டுவன், ராதாபுரம் எம்.எல்.ஏ., அப்பாவு ஆகியோரின் தொகுதிகள் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், இவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படும் என தெரிய வருகிறது. ஆனால், இதில் சில அமைச்சர்கள், வேறு தொகுதிகளுக்கு குறி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

தேசியக் கட்சியான காங்கிரசுக்கு தலைநகரான சென்னையில் ஒரு தொகுதி கூட ஒதுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் கடந்த தேர்தலின் போது காங்கிரஸ் தலைவர்களால் வெளிப்படுத்தப்பட்டது.

அதனால், இந்த முறை சென்னையில் ஐந்து தொகுதிகளை யாவது கேட்டுப் பெற வேண்டும் என, காங்கிரஸ் தலைவர்கள் விரும்பினர். அவர்கள் இந்த விடயத்தில் பிடிவாதமாக இருந்ததால், தி.மு.க., வேறு வழியின்றி சென்னையில், அண்ணாநகர், தி.நகர், மயிலாப்பூர், ராயபுரம், திரு.வி.க., நகர் ஆகிய ஐந்து தொகுதிகளை ஒதுக்கி உள்ளது. (201)

# ஜப்பானில் இருந்து வரும் உணவு பொருள்களில் கதிர்வீச்சுச் சோதனை: மத்திய அரசு உத்தரவு

ஜப்பானில் சமீபத்தில் நடந்த சுனாமி தாக்குதல் காரணமாக அணு உலைகள் பாதிப் படைந்து கதிர்வீச்சு ஏற்பட்டது.

இதனால் உணவு பொருள்களிலும் கதிர்வீச்சு பரவி இருக்கலாம் என கருதப் படுகிறது.

எனவே ஜப்பான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு பொருள்களை கதிர்வீச்சு சோதனைக்கு உட்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக இந்திய அரசு, நம் நாட்டுத் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் இயங்கி வரும் உணவுப் பொருள்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு அமைப்புகளுக்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து உணவு பொருள்களிலும் கதிர்வீச்சு அபாயத்தால் பாதிப்படைந்துள்ளதா? என்று கட்டாயமாக பரிசோதனை செய்யும்படி ஆணையிட்டுள்ளது.

இதே போன்ற உத்தரவினை இந்திய அரசு வருவாய்த்துறை அனைத்து சுங்க இலாகாக்களுக்கும் பிறப்பித்து உணவுப் பொருள் மாதிரிகளை எடுத்து சோதனை செய்து பார்க்கும்படி உத்தரவிட்டுள்ளது.

# 'கொமன்வெல்த்' போட்டி ஏற்பாட்டில் ஊழல்; முக்கிய புள்ளிகள் சி.பி.ஐ. வலையில்

டில்லி, மார்ச். 17

டில்லியில் கடந்த ஆண்டு நடந்த கொமன்வெல்த் விளையாட்டு போட்டி ஏற்பாடுகளில் அதிகாரிகள் ஊழல் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் சுரேஷ் கல்மாடியும் அவரது தலைமையிலான போட்டி அமைப்புக் குழுவினரும் முறைகேடுகள் செய்ததை சி.பி.ஐ. விசாரித்து உறுதி செய்துள்ளது.

கொமன்வெல்த் ஊழல் தொடர்பாக போட்டி அமைப்புக் குழுவினர் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூத்த அதிகாரிகளான லலித்பானட், வி.கே. வர்மா இருவரும் முக்கியமானவர்கள்.

போட்டிக்கான உபகரணங்கள் மற்றும் ஸ்கோர் அறிவித்தல் பலகையில் சுவிட்சர்லாந்து நாட்டில் இருந்து வாங்கிய போது இவர்கள் இரு வரும் பல கோடி ரூபாயை பதுக்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

சி.பி.ஐ. அதிகாரிகள், அவர்களை கைது செய்து டில்லி திகார் சிறையில் அடைத்துள்ளனர். இதற்கிடையே சி.பி.ஐ. அதிகாரிகள் நடத்திய விசாரணையில் லலித் பானட், வர்மா இருவரும் சில விளையாட்டு கருவிகளை வாடகைக்கு எடுத்ததில் முறைகேடு செய் திருப்பது தெரியவந்தது.

விளையாட்டுக் கருவிகளின் விலையை விட வாடகை அதிகமாகக் கொடுக்கப்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து லலித் பானட், வர்மா இருவர் மீதும் ஏமாற்றுதல், மோசடி செய்தல், ஆவணங்களை திருத்தி முறைகேடு செய்தல் ஆகிய பிரிவுகளில் புதிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:
27.03.1946

உதிர்வு:
06.04.2005

## அமரர்
## சி.சு.பொன்னுத்துரை

(உரிமையாளர், பொன்மலர் ஸ்ரோஸ், சண் பிராண்ட்ரொபி தொழிற்சாலை)

திதி: திரயோதசி (17.03.2011)

அன்பின் உறைவிடமே அப்பா!
இப்பூவுலகில் எமைத்தவிக்கவிட்டு எங்குதான் போனீரோ
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம் மனதைவிட்டு என்றுமே நீங்காது

மகள், மருமகன், பேரப்பிள்ளை.


அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(48.20.26)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் நடராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



இணுவில் மேற்கைச் சேர்ந்த அம்பலவாணர் நடராசா (15.03.2011) செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா- ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, கந்தையா, சின்னம்மா, நாகரத்தினம், தில்லைநாயகி மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இ. வனஜா, தயாபரன்(பிரான்ஸ்), கி.பிரபாவதி(சாந்தி), மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், க. இரவீந்திரன் (கிராம அலுவலர் J/191) த.சந்திர வதனா(பிரான்ஸ்), அ.கிருபாமூர்த்தி(சிவன் ஸ்ரோர்ஸ்), ம.கல்யாணி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜன் (மலேசியா), கீர்த்திகா (யாழ்.பல்கலைக் கழகம்), அருண்பிரசாத் (யாழ்.இந்துக் கல்லூரி), சோபிகா (உடுவில் மகளிர் கல்லூரி), சேந்தன்(பிரான்ஸ்), கௌசிகன் (பிரான்ஸ்), மாதுளன்(பிரான்ஸ்), துவாரகன் (பிரான்ஸ்), மாதங்கி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
தொ.பே.இல:- 0213007362,
தயாபரன்(பிரான்ஸ்)-0033169009256
மகேஸ்வரன்(பிரான்ஸ்)-0033169007166

தகவல்:
க.இரவீந்திரன்
அ.கிருபாமூர்த்தி } மருமக்கள்
ந.தயாபரன்
ந.மகேஸ்வரன் } மகன்மார்

(1261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான இறுதியாட்டத்தில் றேஞ்சஸ் கிண்ணம் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 17
கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே இடம் பெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க. கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

ஆட்ட நேரத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் போட்டதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சம நிலைத் தவிர்ப்பு உதை 5 வழங்கப்பட்டது.

கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது. (ஐ-23)

# வட்டக்கச்சி இளம் தளிர் சம்பியன்

யாழ்ப்பாணம்,மார்ச் 17
கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி இளம்தளிர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டக்கச்சி இளம்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி இளம்பறவை விளையாட்டுக் கழக அணி மோதியது.

வட்டக்கச்சி இளம்தளிர் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் ஆனது. (ஐ-23)



சண்டிலிப்பாய் கல்வளைச் சதுக்கத்தில் உள்ள 'சக்தி' ஜிம் சென்ரர் நடத்திய பளு தூக்கல் போட்டியில் பங்குபற்றியவர்களும் நடுவராகக் கடமையாற்றிய எஸ். சபேசன், நிறுவன இயக்குநர் கே.சுகந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (9)

# தியாகராசா ம.ம.வி. முதலிடம்



காரைநகர், மார்ச் 17
காரைநகர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் 616 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் தலைமையில் கோட்ட மட்ட இறுதிப் போட்டிகள் இடம் பெற்றன.

கோட்ட மட்டப் போட்டியில் 339 புள்ளிகளைப் பெற்று யாழ்றன் கல்லூரி இரண்டாம் இடத்தையும் 117 புள்ளிகளைப் பெற்று சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் 60 புள்ளிகளைப் பெற்று வியாவில் சைவ வித்தியாலயம் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (த-250)

## கரம் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ். மாவட்ட கரம் சங்க அனுசரணையுடன் இணுவில் சனசமூக நிலையம் நடத்திய கரம் போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விவரம்வெளியாகியுள்ளது. வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:

* ஆண்கள் ஒற்றையர் - இ.பாலமுரளி, எஸ். செந்தூரன், ஜே.ஜெயகாந்தன்.
* ஆண்கள் இரட்டையர் - இ. பாலமுரளி, ஜே. ஜெயகாந்தன், எஸ். செந்தூரன், எஸ். பிரதீப், ரி. காந்தன், ஜே. அனுராம்.
* பெண்கள் ஒற்றையர் - எஸ். வித்தியாரணி, எஸ். சஹாமா, எல்.யதுகுலா.
* கலப்பு இரட்டையர் - ஜே. ஜெயகாந்தன், எஸ். வித்தியாரணி, ஜே.மோகன், எல்.யதுகுலா. (ஐ)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, மார்ச் 17
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலயம் -

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மாதகல் சென். யோசேப் மகா வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகியன பங்குபற்றுகின்றன. (ஐ -86)

***

யாழ்ப்பாணம், மார்ச் 17
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யங்ஹென்றிசியன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் வி.கவும் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி.கவும் மோதுகின்றன. (ஐ-23)


# மரண அறிவித்தல்



## செல்வன் சண்முகநாதன் தபோவரன்

(மாணவன், யா/ சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம்)

கட்டுக்காணி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வன் சண்முகநாதன் தபோவரன் (தபோ) 15.03.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் (சிவா) - சுமங்கலா (கலா) தம்பதியரின் ஏக புத்திரனும் சுலக்சனா (2010 A/L யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) வின் தம்பியும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை- கதிராசிப்பிள்ளை, காலஞ்சென்ற பரமகுரு மற்றும் நாகரத்தினம் (அக்காச்சி) அவர்களின் அருமைப்பேரனும் காசிநாதர், செல்வநாயகம், வயிரவநாதன் (London), வைத்தியநாதன், திருமதி சுபத்திரா பரமேஸ்வரன் (ராசாத்தி) ஆகியோரின் பெறாமகனும் செல்வஇலட்சுமி, சிவபாக்கியம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரத்தினம் (சந்திரன்) மற்றும் கெங்கேஸ்வரன் (கெங்கா,Colombo), சதீஸ்குமார் (அப்பன் France) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சுந்தரம் (A.K.S), A.K. சபாரத்தினம், A.K. துரைரத்தினம், A.K. இராசையா (ராசு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.
T.P: 0773164195
0777465288

தகவல்:
பூதப்பிள்ளை சண்முகநாதன் (சிவா)
தந்தை (பரம்ஸ் கடை)

(183) (41,20,25)



உ
அம்மன்துணை

# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் உற்சவம்

அம்பிகை அடியார்களே!

இந்த ஆண்டு பங்குனித் திங்கள் உற்சவமானது காலை 5 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை நடைபெறும்.

மார்ச் 21, 28, ஏப்ரல் 4, 11 ஆகிய திகதிகளில் பங்குனித் திங்கள் உற்சவம் நடைபெறும். உற்சவத்தை முன்னிட்டு 19.03.2011 சனி முற்பகல் 10 மணி தொடக்கம் கடைகள் ஏலத்தில் கொடுக்கப்படும். கடை நடத்துவதற்கான இடத்தை எடுத்து பணம் முழுவதையும் செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு. சி.சிவகுரு (தர்மகர்த்தா).

குறிப்பு:- மேற்படி ஆலயத்துக்குரிய திருப்பணி நன்கொடைகளை வேறு எவரிடத்திலும் வழங்காது ஆலய அலுவலகத்தில் மாத்திரம் கொடுத்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.



உ
சிவமயம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
## சி.வ.சந்திரசேகரம்

மண்ணில் மனங்களில்
25.10.1937 16.02.2011

எமது 31 ஆம் நாள் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் நாளை (18.03.2011) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு பருத்தித்துறை தாமரைக்குளத்தடி பொதுப்பணிமன்ற அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(சி/576852) (20,26,30)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 11.03.2011 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைவனடி சேர்ந்த



**மரியாம்பிள்ளை ஜேம்ஸ்**

(யாழ். மாநகரசபை ஊழியர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தோடு எமது இதயம் நெகிழ்ந்து கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நெஞ்சிருக்கும் வரை என் உடன்
பிறப்பை நான் மறவேன் உன்
நினைவால் வாழ்ந்திருப்பேன்
என் பாசமுள்ள அண்ணா...**

தம்பி: மரியாம்பிள்ளை யோசேப்(செல்லி) அவரது குடும்பத்தினர், முன்னாள் தபால் ஊழியர், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி!



திருமதி.செல்லம்மா தம்பிப்பிள்ளை அவர்கள்

எமது கல்லூரியின் முன்னைநாள் பிரதி அதிபர்
திருமதி.மகேஸ்வரி மகேந்திரா அவர்களது அன்புத் தாயார்
**திருமதி.செல்லம்மா தம்பிப்பிள்ளை அவர்கள்**
அமரத்துவமடைந்த செய்திகேட்டு மிகுதுயரடைகின்றோம்.
அவரது குடும்பத்தவரின் துன்பத்தில் நாமும் பங்கேற்று
அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு
எமது அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
கரவெட்டி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஏகாம்பரம் சின்னம்மா

நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் சின்னம்மா நேற்று (16.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் மனைவியும் பேரம்பலம், சிவமணி, ரதிதேவி (ஆசிரியை விநாயகபுரம் அ.த.க வித்தியாலயம்) சச்சிதானந்தம் (நெடுந்தீவு கோட்டக் கல்வி அலுவலகம்) காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் கோமளாம்பிகை, கௌரீஸ்வரி, அருளானந்தம், நாகநந்தினி (நெடுந்தீவு பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் நோதாஜினி, புண்ணியவரதன், செந்தூர்ச்செல்வன், சதுர்சன், சிவானுஜன், தனுஷிகன், சக்சஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அத்தாப்புல்லு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம், நெடுந்தீவு. (சி-57687)
தகவல்: ஏ.சச்சிதானந்தம் (மகன்).

## பூபாலசிங்கம் இரத்தினம்மா



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் இரத்தினம்மா நேற்று (16.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் விக்னேஸ்வரி, காலஞ்சென்ற இராசபூபதி மற்றும் விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரி, விமலேஸ்வரி, சிவசுப்பிரமணியம், இராசேந்திரா, சிவனேசன் ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினசிங்கம், சபாரத்தினம், பரமானந்தம், ஜெகதாம்பிகை புஸ்பராணி, சண்முகேஸ்வரி அருளினி ஆகியோரின் அன்பு மாமியும் விமலினி சர்வானந்தன், நித்தியானந்தன், பிரபானந்தன், திருமாறன், அருள்மாறன், அருட்செல்வன், குஜன், ஜெனி, அஜித்குமார், இனோஜா, நர்மஜா, நிரோஜினி, கஜேந்திரன், சிவதர்சினி, மேகலாதன், பிரஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இரசம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடிஇந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (1267)
தகவல்: குடும்பத்தினர்.

## வயாவிளானில் ஆலய உற்சவம்

வலி.வடக்கு, மார்ச் 17

வயாவிளான் ஞானவைரவர் ஆலய அலங்காரத்திருவிழா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகி உள்ளது.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இவ் ஆலயத்தில் கடந்த முப்பது வருட கால இடைவெளியின் பின்னர் அலங்கார உற்சவம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் அடியார்கள் இராணுவச்சோதனை நிலையத்தில் அடையாள அட்டையைக் காட்டி விட்டு உற்சவத்தில் கலந்துகொள்ள முடியும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-எ-86)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, மார்ச் 17

குடத்தனை, அம்பன் அ.மி.த.க பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## ரூ.30 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,மார்ச் 17

அனுமதிப் பத்திர விதிகளை மீறி பனை மரங்களை தறித்த நபருக்கு சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை குறித்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஐந்து மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

## நாளை தேர்த்திரு விழா

நல்லூர், நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலய பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும். (ஒ-207)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 ★ 06 ★ 1921



மறைவு 27 ★ 03 ★ 2010

### அமரர் சின்னையா நல்லதம்பி

திதி:- பூர்வபக்க திரயோதசி

சென்றது ஓராண்டு
நினைவுகள் பல்லாண்டு
சென்றாலும் தீராது
எம்முடன் உம் நினைவுகள்

K.K.S வீதி,
இணுவில், சுன்னாகம். (35) (1290) குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும்

### அமரர் செல்லையா தெய்வேந்திரம்



அன்னை மடியில் 03★05★1962
முருகன் அடியில் 01★02★2011

தெய்வமே எங்கள் அப்பாவே
அன்புடன் கண்டிப்பும் கொண்டவரே
அன்பால் அனைவரையும் கவர்ந்தீர் அப்பாவே
பண்பால் பலர் மனதிலும் இருந்தீர் அப்பாவே
பாசமலரை அயலவருக்கும் பகிர்ந்தீரே அப்பாவே
அன்புக்கு ஓர் உதாரணமாய் வாழ்ந்திட்ட எங்கள் அப்பாவே
நீங்கள் உங்கள் பிள்ளைகள் நான்கு பேரையும்
தவிக்கவிட்டு பிரிந்து இன்றுடன் 45 நாள்கள் ஆகியும்
உங்கள் நினைவுகள்எம்முடன் நிலைத்திருக்கும் அப்பாவே
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வில்லிபாதி முருகனை வேண்டி நிற்கின்றோம்.

01.02.2011 அன்று அகாலமரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடிவந்து எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முருகன் கோயிலடி, புலோலி வடமேற்கு, புலோலி. (சி/576856) தெ.பே:-0770775184 (35) குடும்பத்தினர்.

## தேவை

வவுனியாவில் பிரபல அச்சகம் ஒன்றுக்கு Code Mac hine (Offset) இயக்குபவர் தேவை. அத்துடன் அச்சகத்துக்குரிய அனைத்து இயந்திர சாதனங்களும் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு- 0771301050

## வீடு காணி விற்பனைக்கு

பொன்னாலை வீதி, சங்கானை ஏழாம் கட்டை பிரதான வீதியில் அமைதியான சூழலில் இரண்டு வீட்டுடன் கூடிய 8¼ பரப்பு சுற்றுமதில் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0213217870

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரின் பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி, ரெம்பிள் வீதி, முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத் தெரு 2 -3 அறைகளுடன் கூடிய வீடு/ANNEX ஓர் சிறிய நிறுவனத்துக்கு வாடகைக்குத் தேவை

தொடர்புகளுக்கு: 0777767818

## Computer Mega Sale

2011 மார்ச் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் 22,23 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

அரச உத்தியோகத்தர்கள், [illegible]

மேலதிக தொடர்பு:
0718570609, 0759997700.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1277 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 14 25 27 30 15-03-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 249,993 | 20/- | 4,999,860/- |
| 2 இலக்கங்கள் | 22,913 | 40/- | 916,520/- |
| 1 இல. + லக்கினம் | 22,747 | 60/- | 1,364,820/- |
| 2 இல. + லக்கினம் | 2,095 | 200/- | 419,000/- |
| 3 இலக்கங்கள் | 611 | 1000/- | 611,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,421,200/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 669 | | 832,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 299,083 | | 12,253,700/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் 02 04 16 55

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 665 | 500/- | 332,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 200,000/- | 200,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 669 | | 832,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபரோ ஒரு மாதிரி'' என்ற தலைப்பில் வெயிடப்பட்டிருந்த கைச்சங்கிலி விவகாரம் நேற்று ஒரு முடிவுக்கு வந்தது. உரியவரிடம் புதிய கைச் சங்கிலி கடந்த திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கைச்சங்கிலி தன்னுடையதுதான் என்று ஆதாரங்களுடன் நிரூபித்த திருமதி தே.ஜெயக்குமாரி அச்சுவேலி மத்திய கல்லூரியின் புதிய அதிபர் வே.அரசகேசரியால் கையளிக்கப்பட்டது.

நகைக்கு உரியவரான ஜெயகுமாரியின் சொந்த நகை கொடுக்கப்படவில்லை எனினும், அவரது நகையின் நிறைக்குச் சமமான - ஒன்றரைப் பவுண் நிறையுடைய - புதிய கைச் சங்கிலியே கையளிக்கப்பட்டது.

கைச்சங்கிலி கையளிக்கும் நிகழ்வில் சாவகச்சேரி மத்திய கல்லூரி பிரதி அதிபர் திருமதி யோ.சந்திரகுமார், அருட்சகோதரி டிலக்ஷி மற்றும் ஆசிரியை திருமதி எஸ்.செல்வரத்தினம், இடைக்காடு மகாவித்தியாலய அதிபர் எஸ்.அருந்தவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-11)

## அலிசாஹிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் சம்பவத்தை அடுத்து அலி சாஹிர் மௌலானா ஏறாவூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

### வீடுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

யாழ். நகர் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக உள்ள இராமையா செட்டியார் ஒழுங்கையில் மேல்மாடியுடன் காணி விற்பனைக்குண்டு

தொடர்புக: 0779009391 - 0212225091

### வாடகைக்கு

GZ தொடர் இலக்கமுடைய 10 ½ அடி கண்டர் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0776002646

## 234 சபைகளுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகி மாலை 4 மணி வரை இடம்பெறும்.

இத்தேர்தலில் 94 லட்சத்து 44 ஆயிரத்து 455 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் வாக்குகளை எண்ணுவதற்கு 52 வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

36 பொலிஸ் பிரிவுகளில் இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி பொலிஸ் திணைக்களம் அனைத்து வகையிலும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது என்றும் 50 ஆயிரம் பொலிஸார் உட்பட 70 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூர்ய தெரிவித்தார்.

புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதால் எதுவித தீவிரவாத அச்சுறுத்தலும் இருக்காது என்று அவர் கூறினார்.

இலங்கை தேசிய போக்குவரத்துச் சபையும், இடம்பெயர்ந்தவர்கள் தத்தம் பிரதேசங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்காக விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியன போன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைக்க முடியாது என்பது தேர்தல் சட்டத்தின் ஓர் அங்கமாகும்.

பொலிஸ் திணைக்களம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் திறம்பட செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளபோதிலும் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுகின்றனர் என்று எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டுகின்றனர்.

தேர்தல்களை கண்காணிக்கும் அமைப்புகளுள் ஒன்றான கபே அமைப்பும் பொலிஸாரை குற்றம் சாட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் வெற்றிபெறும் எந்தவொரு கட்சியாக இருந்தாலும் அமைதியான முறையில் தேர்தல் சட்டத்திட்டங்களுக்கமைய ஊர்வலங்களை நடத்திச் செல்ல வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். மாறாக செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளனர். (ஒ-சி)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 16ஆவது கூட்டத் தொடர் சுவிஸ் நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது.

அந்தக் கூட்டத் தொடரில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி ஷேனுகா செனவிரத்ன, போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரிக்கும் என்று தெரிவித்தார்.

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழேயே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பதால் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அது விசாரிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

எனினும்தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான கால அவகாசத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபைவழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதேசமயம், ஐ.நா மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையர் நவிப்பிள்ளை இலங்கைக்கு விரைவில் செல்ல இருக்கிறார் என்ற தகவலையும் அவர் அங்கு தெரிவித்தார்.

அவரை இலங்கைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (உ)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அதிக வன்முறைகள் நிறைந்த தேர்தலாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைந்துள்ளது. எமது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது பல இடங்களில் அரச தரப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பேருவளை, களனி, வத்தளை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட பல இடங்களில் அரச வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பேருவளையில் எமது வேட்பாளர்கள் நால்வர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்போனால் எமது முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மாறாக தாக்குதலுக்கு உள்ளான எமது வேட்பாளர்களையும், ஆதரவாளர்களையுமே.பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

எமது முறைப்பாடுகள் ஏற்கப்படாமை தொடர்பாக நாம் தேர்தலுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ணவை சந்தித்து முறைப்பாடு செய்துள்ளோம். தேர்தல் ஆணையாளர் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தேர்தலின்போது வாக்கு மோசடிகளில் ஈடுபடுவதற்கு அரசு தயாராகி வருகிறது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. மக்கள் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் காலையிலேயே சென்று தங்களது வாக்குகளைப் பதிவுசெய்யவேண்டும். அப்போதுதான் அரசின் வாக்கு மோசடித் திட்டத்தை முறியடிக்க முடியும். - என்றார். (ஒ-சி)

## சாதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.இந்துக் கல்லூரியில் 10 மாணவர்கள் 9 ஏ சித்தியும், 28 மாணவர்கள் 8 ஏ சித்தியும் 23 மாணவர்கள் 7 ஏ சித்தியும் 16 மாணவர்கள்6 ஏ சித்தியும் பெற்றுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.(த)

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களித்துள்ளனர். சமூக சேவையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், சுவிஸ் தமிழர் பேரவையின் செயலாளர் பதவி உட்படப் பல பதவிகளை வகிப்பதுடன் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

### கண்ணீர் அஞ்சலி



இணுவில் மேற்கு J/191 கிராமசேவையாளர் க.இரவீந்திரன் அவர்களின் மாமனார் அமரர் அம்பலவாணர் நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

விவசாய சம்மேளனம், இணுவில் மேற்கு.

### மரண அறிவித்தல்

முனியப்பர் கோயிலடி கட்டுவன் தெற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கலட்டி வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பழனியாண்டி நேற்று (16.03.20011) புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

### சேவை நலன் பாராட்டுதல்



இன்று ஓய்வுபெறும் எங்கள் கல்லூரி சங்கீத ஆசிரியை

திருமதி பத்மராணி விஜயகுமார்

அவர்களின் நிறைவான சேவையைப் பாராட்டுவதோடு அவர் எல்லா நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.

(1277) (35)

### மரண அறிவித்தல்



சின்னையா செல்வநாயகம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தை வதிவிடமாகவும், இந்தியாவைத் தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட சின்னையா செல்வநாயகம் நேற்று 16.03.2011 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மருமகனும், சரோஜாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுகிர்தநாயகம், குணநாயகம், கனகநாயகம், தனநாயகம் மற்றும் சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வகுமார், காலஞ்சென்ற செல்வச்சந்திரன் மற்றும் தமிழ்அரசி, ஜீவ்பூரணி, மதியழகன், செந்தூரன், துளசி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவச்செல்வி, இரவீந்திரகுமார், இராசகுமார், மயூரன் ஆகியோரின் மாமனாரும் லாவன்யா, பிரவீன், தஸ்வினி, ரவின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை இந்தியாவிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று போரூர் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்தியா.

(சி-576863) (37)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

## இன்றைய வானிலை

29°C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 29°c | 22°c | |
| மன் | | 31°c | 25°c | |
| வவு | | 32°c | 22°c | |
| முல் | | 29°c | 26°c | |
| கிளி | | 29°c | 26°c | |

அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை பு யாழ்ப்பாணம்
பங்குனி 16, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7115.62↑
மிலங்கா(MPI) 6643.74↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 903.74Mn
பங்குகளின் அளவு(No.) 33.46Mn
வியாபாரம்(No.) 11021
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கெப்பிட்டல் டெவலப்பென்ர் 188.00
லங்கா அலுமினியம் 53.90
அலுப(f)ப் 59.90
ஹெறாறன 65.80
இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் 495.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஏசிஎல் பிளாஸ்ரிக் 162.00
றெக்னீஸ் 182.60
குட் கோப் 1012.60
புளூடயமண்ட் 3.20
யூனியன் கெமிகல் 515.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

### கச்சதீவு உற்சவ ஏற்பாடுகள் பூர்த்தி

# குருநகர், மண்கும்பான் துறைகளில் இருந்தும் யாத்திரிகர்கள் நாளை முதல் பயணிக்க முடியும்

யாழ்ப்பாணம்,மார்ச்17

எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு யாத்திரிகர்கள் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

கச்சதீவு யாத்திரை தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள அறிவிப்பில் -

திருவிழாவில் பங்குபற்றும் யாத்திரிகர்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் 20ஆம் திகதி ஞாயிறு வரையான காலப்பகுதியில் காலை 4 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கச்சதீவுக்குப் பயணம் மேற்கொள்ள முடியும்.

✱ 19ஆம் திகதி சனிக்கிழமை இரவு கச்சதீவில் தங்கியிருந்து திருவிழாவில் பங்குபற்றவும் முடியும்.

✱ யாத்திரிகர்கள் செல்வதற்காக குருநகர், குறிகாட்டுவான், நெடுந்தீவு, மண்கும்பான் ஆகிய துறைகள் ஊடாக படகுகளில் பயணம் மேற்கொள்ளமுடியும்.

கச்சதீவு விழாவுக்கான ஏற்பாட்டை கச்சதீவு பங்குத்தந்தை அருட்திரு. ஏ.அமல்ராஜ் மேற்கொண்டுள்ளார்.

இம்முறை திருவிழாவில் கூடிய எண்ணிக்கையான இந்திய, இலங்கை யாத்திரிகர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாத்திரிகர்கள் கடுமையான சோதனையின்றி ஓமந்தை சோதனைச் சாவடியூடாக பயணிப்பதற்கு அனுமதிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கடிதம் ஓமந்தைக் கட்டளை அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கச்சதீவில் யாத்திரிகர்களுக்கான உணவு போசன ஏற்பாடுகளுக்காக ப.நோ.கூ.சங்கங்களின் மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

குடிதண்ணீர், மலசலகூட வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய யாத்திரிகர்களின் தேவை கருதி பணப்பரிமாற்றலுக்காக இலங்கை வங்கியின் கிளையொன்றும் கச்சதீவில் இயங்கவுள்ளது. அவசர தேவை கருதி பயன்படுத்துவதற்காக கியூமெடிக்கா நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகுச் சேவையும் இடம்பெறும்.

யாத்திரிகர்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை தம்முடன் எடுத்து வருதல் தவிர்க்கப்படவேண்டும் என்று கண்டிப்பாக கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த விவரங்கள் அரச அதிபரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஒ-14)



உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. நேற்று திருகோணமலையில் வாக்குப் பெட்டிகள் வாக்குச் சாவடிகளுக்கு படகுமூலம் எடுத்துச் செல்லப்பட்டன. படகொன்றில் வாக்குப் பெட்டிகளைக் கொண்டுசெல்லத் தயாரானபோது...

## துணுக்காய் கல்வி வலயம் 24ஆம் திகதி கையளிக்கப்படும்

மாங்குளம்,மார்ச்17

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயம், ஆசிரிய மத்திய நிலையம், துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் ஆகியன இராணுவத்தினரால் எதிர்வரும் 24ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் க.மேகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

மேற்படி மூன்று கல்வி மையங்களிலும் தற்போது இராணுவத்தினர் தங்கியுள்ளனர் என்றும் இதனால் தற்காலிக இடங்களில் இயங்கிவரும் பாடசாலை, வலயக் கல்வி அலுவலகம் என்பன எதிர்வரும் 24ஆம் திகதியில் இருந்து சொந்த இடத்தில் இயங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (த-10)

## மரக்கறித் தோட்டங்களை அமைத்தல்; பயிற்சி நெறி திங்கள் ஆரம்பம்

### திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்17

''மரக்கறி உற்பத்தியினைத் துரிதப்படுத்தல்'' என்னும் திட்டத்தில் அரச நிறுவனங்களில் மரக்கறித் தோட்டங்களை அமைத்தல் தொடர்பான பயிற்சி நெறி எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் தொடர்ந்து 5 நாள்கள் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இருக்கக்கூடிய பௌதிக வளங்கள், காலநிலை என்பவற்றுக்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ள தோட்டத்தைத் திட்டமிடல், கூட்டெரு தயாரித்தல், நாற்றுகளின் உற்பத்தி, நடுகையும் பராமரிப்பும், பயிர்ப் பாதுகாப்புப் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக இந்தப் பயிற்சி அமையவுள்ளது.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், நிறுவனங்கள், விடுதிகள், பாடசாலைகள் போன்ற இடங்களில் மரக்கறி உற்பத்தியைத் துரிதப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்புக்கு அலுவலகத்தின் தோட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரும் அதனை அமைப்பதற்கான கள ஊழியரும் 5 நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில் ஏதாவது ஒருநாள் பங்குபற்ற முடியும் -

பயிற்சியில் கலந்துகொள்ளவிருக்கும் தினத்தை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பிவைக்கமுடியும் என்று யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஒ-எ-313)

## அனைத்து சபைகளையும் கூட்டமைப்பு கைப்பற்றும்

### சிவசக்தி ஆனந்தன் உறுதி



வவுனியா, மார்ச் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உறுதியாகத் தெரிவித்தார்.

அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையே பேச்சுகள் நடைபெற்று வரும் இக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்து பேச்சுகளுக்கு வலு சேர்க்க வேண்டும் எனவும், கூட்டமைப்பே தமிழ் மக்களின் தனிப்பெரும் சக்தி என்பதை அரசுக்கு உணர்த்த வேண்டும் எனவும் அவர் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசின் எந்தவொரு மிரட்டலுக்கும், அடக்கு முறைகளுக்கும் அடிபணியாமல் இந்த நாட்டில் நாமும் சமமான உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ இது சிறந்ததொரு சந்தர்ப்பம் ஆகும்.

மன்னார் - முசலி, வவுனியாவில் தெற்கு சிங்களப் பகுதிகளைத் தவிர அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கூட்டமைப்பு கைப்பற்றும் என்பது உறுதியே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்றுமே தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், விடிவுக்காகவும் குரல் கொடுப்பவர்கள் என்பதை எமது தமிழ் பேசும் மக்கள் இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு தெளிவுபடுத்துவார்கள் என வெற்றி நம்பிக்கையோடு தெரிவித்தார். (ஒ-சி)

# நிகழ்வுகள்

**பேச்சுத் திறன்காணும் வைபவம்**

யாழ்ப்பாணம்,மார்ச் 17

ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நல்லூர் முடமாவடி ஞானக்குழந்தை இல்ல முன்பள்ளியில் பேச்சுத்திறன் காணும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-313)

**நாடக ஆற்றுகை**

யாழ்ப்பாணம்,மார்ச் 17

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு' எனும் நாடக ஆற்றுகையானது கலைப்பீட, நுண்கலைத்துறையின் நாடகமும் அரங்கக் கலைகளும் வெறுவெளி அரங்கக் குழுவினரால் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கும் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி, பிற்பகல் 3.30 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். (ஒ-313)

**சந்நிதியான் ஆச்சிரமத்தில் சொற்பொழிவு**

வடமராட்சி,மார்ச்17

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் இடம்பெறும் இச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (ஒ-236)

**பரிசளிப்பு விழா இன்று**

யாழ்ப்பாணம்,மார்ச்17

நல்லூர்க் கல்விக் கோட்ட மெய்வன்மைப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி நாகலிங்கம் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்விக் காருண்யன் ச.பே.நாகரட்ணம் கலந்துகொள்வார். (ஒ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்17

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன. யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் நேற்றைய தினமே பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தல் இருந்து பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டன.

இதன்படி நேற்றுமாலை வரை பாடசாலை அதிபர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

ஜெயந்தி சுந்தரம்-9ஏ, பிரியந்தி சத்தியசீலன்- 9ஏ, வினுசியா பஞ்சலோகரஞ்சன்- 9ஏ, பிருந்தா நவநேசன் - 9ஏ, சம்யா சிவானந்தன் - 9 ஏ, வைஸ்ணவி சக்திவேல் - 9ஏ, தாரணி கோகழிநாதன் - 9ஏ, தேனுகா யோகராஜா - 9ஏ, பிரவீனா பரலோகராஜா - 9ஏ, இந்துஜா சிவசுந்தரம் - 9ஏ, சோபிதா சிவேஸ்வரன்- 9ஏ.

**யாழ். இந்து**

ஆர்.ஜதுசன் - 9ஏ, கே.சுதாகர் - 9ஏ, வி. ஹரிகரன் - 9ஏ, எஸ்.கிருபரன் - 9ஏ, ஏ. ஆராமுதன் - 9 ஏ, ஈ.பார்த்தீபன் - 9ஏ, எம். பரசுராம் - 9ஏ, ஆர்.பிரணவன் - 9ஏ, கே.புவிவர்மன் - 9ஏ, ஆர்.சயிந்தன் - 9ஏ,

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை**

சிவராமன் சுலோசினி - 9ஏ, திருக்குமரன் சஜித்திரா - 9ஏ, கருணாமூர்த்தி வித்தியா - 8ஏ,பி, விஜயரட்ணம் லதீசா - 8ஏ,பி, கமலநாதன் லக்ஷனா 7ஏ,2பி, விஜயகுமார் கிருஷாஜினி - 7ஏ,2பி, ரட்ணராஜா ரம்யா - 7ஏ,பி,சி, சண்முகேஸ்வரன் சிந்துஜா - 7ஏ,பி,சி, சிவராஜா கோபிகா 7ஏ,பி,சி, யோகரட்ணம் சௌமியா - 7ஏ,பி,சி

**நெல்லியடி ம.வி**

இ.பிரணவன் - 9ஏ, ஸ்ரீ.ஷாகிர்த்தியா - 8ஏ,பி ஞா.பிரவீனா - 8ஏ,பி, செ.சஞ்சிகா - 8ஏ,சி, க.பிருந்தாபன் - 8ஏ,சி, செ.மயூரா - 7ஏ,பி,சி, சி.சுகந்தன் - 7ஏ, பி,எஸ், ச.சுஜீ வன் - 6ஏ, 3பி, வி.முகுந்தன்-6ஏ, 2பி,சி, வோ.ஜிவாகன் - 6ஏ, 2பி,சி.

**கரவெட்டி விக்னேஸ்வரா**

எழிலரசி கந்தசாமி - 8ஏ,பி, சுமந்தன் பாலேந்திரன் - 8ஏ,பி, கயகரன் திருநாவுக்கரசு - 8ஏ, பி, ரஜீவன் ரவீந்திரன் - 7ஏ, 2சி, பிரேமிளா திருச்செல்வராசா - 6ஏ,2பி,சி, லாவண்யா விஜயனந்தகுமார் - 6ஏ,2பி,சி.

**அளவெட்டி அருணோதயா**

கே.சோபனா - 9ஏ, இ.கீர்த்தனா - 8ஏ, பி, அ.தவக்குமார் - 8ஏ, சி, பா.பரதன் - 7ஏ,2பி,வி. மதுசாலினி - 6ஏ,பி,2சி, உ. சுகந்தன் - 6ஏ,2சி,எஸ், ஜெ.தேனுஜா - 5ஏ,2பி,2சி, அ.பவித்ரா - 5ஏ,பி,3சி, க.விதுசா - 5ஏ,பி,3சி, ந.சோமேஸ்வரன் - 4ஏ,3பி,சி,எஸ்.

**சுன்னாகம் ஸ்கந்தா**

சிவநாதன் துளசி - 9ஏ, கருணாநிதி, நேர்த்திகா - 8ஏ,பி, செல்வராஜா சங்கீர்த்தனா - 7ஏ,2பி, யோகநாதன் அஜிதா - 6ஏ,3பி.

**தெல்லிப்பழை மகாஜனா**

பொ.கஜவதனி - 9ஏ,சி. கஜானா - 8ஏ,சி, பா.சுவேந்தினி - 8ஏ,சி, பா.நிதர்சனா - 8ஏ,சி, கி.ஜீவிதா - 6ஏ,3சி,சி. மதுரா - 6ஏ,2பி,எஸ், சு.சோபிகா - 5ஏ,பி,2சி, எஸ், வோ. அபிஷாயினி - 5ஏ,பி,2சி, எஸ், சி.திவ்வியா- 4ஏ, 2பி, சி, த. பிரதீப் - 4ஏ,2பி,சி, ப.விஷ்ணுகீத் - 4ஏ,2பி, 2எஸ்.

**கொக்குவில் இந்து**

வை.லோஜிபன் - 9ஏ, உ.சுதர்சன்- 9ஏ, க.கசிந்தா - 9ஏ, ப.விந்துஜா - 9ஏ, க.மகிதாபன் - 8ஏ,சி, ஆ.மயூரதன்- 8ஏ, சி, ம. எளினி - 8ஏ,சி, இ.வனுதை - 7ஏ, 2பி, த.தலோஜனன் - 7ஏ,2பி, தி.தவ லக்சன் - 7ஏ,2பி, பா.ரூபினி-7ஏ,2பி, ஜெ.காயத்திரி - 7ஏ,2பி, இ.தனுசியா- 7ஏ, 2பி.

**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி**

ராஜ்குமார் அனோஜன் - 8ஏ, பி

(த-319)

# தமிழீழத்தின் முதல் தூதரகம் தென்சூடானில்



மலரப்போகும் தமிழீழத்தின் முதலாவது தூதரகம் தென் சூடானில் எதிர்வரும் ஜூலை மாதம் அமையவுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் தொலைபேசிப் பரிவர்த்தனையூடாக நேற்றுமுன்தினம் கோலாலம்பூரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது வெளியிட்டுள்ளார்.

கோலாலம்பூரில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சபாநாயகர் பொன் பாலராஜன், உதவிப் பிரதமர் பேராசிரியர் செல்வநாதன் மற்றும் துணை வெளிவிவகார அமைச்சர் க.மாணிக்கவாசகர் ஆகியோர் நேரடியாகக் கலந்து கொண்டனர். இவர்கள் ஆஸ்திரேலிய, மலேசிய விஜயங்களை நாடு கடந்த அரசு தொடர்பாக மேற்கொண்ட போதே இந்த நிகழ்வும் இடம்பெற்றது.

மேலும் பிரதமர் கூறுகையில், நாடு கடந்த அரசின் உடனடியான பணிகளாக மூன்று முக்கிய பணிகளைக் குறிப்பிட்டார்.

1) இன அழிப்பு, மனித இனத்திற்கெதிரான குற்றங்கள், தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள் போன்றவற்றைப் புரிந்தவர்களை நீதியின்முன் நிறுத்துவதற்கு கணிசமான பங்களிப்பு செய்வது.

2) தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பறித்து மக்களை இடமாற்றம் செய்ய இலங்கை அரசும் அதன் இராணுவமும் மேற்கொண்டுள்ள தீவிரமான செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு திடமான நடவடிக்கைகள் மேற்கொள்வது.

3) இன அழிப்புக்கு ஆளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரே வழி சுதந்திர தமிழீழ நாடு அமைக்கப்படுவதுதான் என்ற அனைத்துலக உடன்பாட்டை உருவாக்குவதில் வெற்றி பெறுவது.

நாடு கடந்த தமிழீழ அரசின் இலட்சியத்தில் வெற்றி பெறுவதற்கு இந்தியாவின் நிலை முக்கியமானது என்று வலியுறுத்தப்படுவது பற்றிய கேள்விக்கு பதில் அளித்த அவர், இந்தியாவின் முக்கியத்துவம் பற்றிய நிலையை ஒப்புக்கொண்டார். அவ்விடயம் தீவிரமாக கவனிக்கப்படுவதாகக் கூறினார்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் சுதந்திர நாடாக மலரும் தென் சூடான், நாடு கடந்த தமிழீழ அரசை அங்கீகரித்த முதல் நாடாகும். அந்தப்புதிய நாட்டில் தமிழீழ அரசு அதன் தூதரகத்தை அமைக்க தென் சூடான் அழைப்பு விடுத்துள்ளது. மேலும் அந்த நாட்டின் மேம்பாட்டு செயல்திட்டங்களில் பங்கேற்று தென் சூடானின் மேம்பாட்டுக்கு உதவுமாறு தமிழீழ அரசை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறினார்.

இது எங்களுக்கு ஒரு பெரிய திருப்பு முனையாகும் என்றார் அவர்.

(சங்கதி) (ஒ-10)

இணையச் செய்திகள்

## மாலே குண்டுவெடிப்பு பாக்.பிரஜை கொழும்பில் கைது

மாலைதீவு நாட்டின் மாலேயில் 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் கடந்த 10 ஆம் திகதி கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தானில் இருந்து இலங்கை ஊடாக மாலைதீவுக்கு பயணித்த வேளையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டிகளின் நிமித்தம் இலங்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இன்டர்போல் எனப்படும் சர்வதேசப் பொலிஸாரே கொழும்பு வானூர்தித் தளத்தில் வைத்து, சந்தேகத்துக்குரிய இக்பால் மொஹமட் என்பவரைக் கைதுசெய்தனர்.

ஏற்கனவே மாலைதீவின் தேசிய பணியகத்தினால் இக்பால் மொஹமட் தேடப்படுபவராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

(தமிழ்வின்) (ஒ-10)

## 8 மாணவிகள் மீது துஷ்பிரயோகம்; ஆசிரியர் கைது

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றில் எட்டு மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம்செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த மாணவிகள் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிவான் உபாலி குணவர்தன உத்தரவிட்டுள்ளார்.(தமிழ்மிரர்)

# இறுதி யுத்தத்துக்கு இந்தியா ஆதரவு; கேரள 'மாபியா' நாராயணனே காரணம்

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்துக்கு இலங்கை அரசுக்கு இந்தியா ஆதரவளிக்க அன்றைய இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனே பிரதான காரணம் என்பதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில் நாராயணனை பிரதமர் அலுவலகத்தில் இருக்கும் ஒரு 'கேரள மாபியா' என்று வர்ணித்திருப்பதுடன், காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய புள்ளியாகவும் சித்திரித்துள்ளது.

சோனியா காந்தி குடும்பத்தின் நீண்ட கால நம்பிக்கைக்குரிய விசுவாசியான அவர்தான் இலங்கையில் நடந்த இரத்தக் களரியைத் தடுப்பதில் இந்தியாவைத் தலையிட விடாமல் தடுத்ததாக இந்தியாவிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான அவரது தீவிர எதிர்ப்புணர்வே அதற்கான பிரதான காரணம் என்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'விக்கிலீக்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

(தமிழ்வின்)
(ஒ-10)

# அனைத்துலகச் சட்டங்களை ஐரோப்பிய ஒன்றியம் மீறுகிறது

அனைத்துலகக் கடல்சார் சட்டங்களை மீறுவதாக ஐரோப்பிய ஒன்றியம் மீது இலங்கை அரசு குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கைக் கடற்பகுதிக்குள் தமது மீனவர்களை மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதன் மூலமே ஐரோப்பிய ஒன்றியம் அனைத்துலகக் கடல்சார் சட்டங்களை மீறியுள்ளதாக இலங்கை அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன செய்தியாளர்களிடம் கூறுகையில்,

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மீனவர்கள் இப்போது இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி ஊடுருவத் தொடங்கியுள்ளனர்.


இந்த விவகாரம் தொடர்பாக அந்த நாடுகளிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அத்துடன் இந்த விவகாரம் குறித்து இந்த வார இறுதியில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர துணை ஆணைக்குழுக் கூட்டத்திலும் பிரச்சினை எழுப்பவுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றிய மீனவர்கள் இலங்கைக்குள் ஊடுருவுவதைக் காண்பிக்கும் செய்மதிப்பட ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்

(புதினப்பலகை) (ஒ-10)

# பீதுருதலாகல மலை உச்சியில் அதி நவீன ராடர் நிறுவ ஏற்பாடு



இலங்கையின் மிக உயரமான பீதுருதலாகல மலையில் அதிநவீன ராடர் தொகுதியொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னர் ஒரு காலத்தில் பீதுருதலாகல மலைக் குன்றின் மீது ராடர் தொகுதியொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் தற்போது அது செயலிழந்து இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் இலங்கை வான்பரப்பில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் விமானங்கள் பறப்பில் ஈடுபடுகின்றன. அவற்றில் இராணுவ மற்றும் சிவில் விமானங்களும் உள்ளடக்கம். அத்துடன் எதிர்வரும் நாள்களில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் சீ பிளேன் விமானச் சேவைகளை நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு தற்போது அதிநவீன டிஜிற்றல் உபகரணங்களுடன் இணைந்த ராடர் தொகுதியொன்றை பீதுருதலாகலை மலைக்குன்றில் நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்காக சுமார் 200 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(தமிழ்வின்) (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டார்.

பிற்பகல் 2 மணியளவில் உதயன் அலுவலகத்துக்கு வந்த பிரதீபன், கையில் ஒரு 'லைற்றரை' வைத்துக் கொண்டு அலுவலகத்தைக் கொளுத்தப்போகிறேன் என்று ஊழியர்களை மிரட்டினார். கடந்த 5ஆம் திகதிய உதயனில் வெளியான 'பார்த்தீர்களா கேட்டீர்களா' என்ற பத்தியில், மாணவர் ஒருவர் கண்டெடுத்துக் கொடுத்த கைச்சங்கிலியை பாடசாலை அதிபர் திருப்பிக்கொடுக்காது இழுத்தடித்து வந்தமை குறித்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது குறித்துப் பேசுவதற்காகத்தான் தான் வந்துள்ளார் என்று தெரிவித்த பிரதீபன், பின்னர் உரத்த குரலில் ஊழியர்களைத் கண்டபாட்டுக்குத் திட்டியதுடன், கையில் வைத்திருந்த 'லைட்டரை' திரும்பத் திரும்பக் கொளுத்திக் காட்டி அனைத்தையும் கொளுத்தி விடுவேன் என்றும் மிரட்டினார்.

இதனை அடுத்து, அலுவலகத்தில் கடமையில் இருந்த பொலிஸார் அவரை விளம்பரப் பிரிவில் இருந்து அப்புறப் படுத்தி, அவர் குறித்த விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அப்போது அவர், தான் அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுகிறார் என்று தெரிவித்தார். எனினும் அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதனையும் அவர் காட்டவில்லை. அதனை அடுத்து பொலிஸாரின் விசாரணை தீவிரமானது, உடனடியாக ஈ.பி.டி.பி உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படும் பாரத் தோழர் என்பவருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய பிரதீபன், தான் உதயனில் சிக்கிக் கொண்டுள்ள விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கிருந்து உருப்படியான பதில் எதுவும் வராததை அடுத்து, மற்றொரு தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தனது நிலை குறித்துத் தெரிவித்தார். பின்னர் அமைச்சர் பேசுகிறார் அவருடன் பேசுங்கள் என்று கூறி கடமையில் இருந்த பொலிஸாரிடம் தொலைபேசியை நீட்டினார். அவர் அதனை வாங்கிப் பேச மறுத்துவிட்டார்.

அதற்கிடையில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்து உடனடியாக வாகனத்தில் வந்த பொலிஸார் பிரதீபனைக் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். ஆரம்ப விசாரணைகளைத் தொடர்ந்து, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வாவின் உத்தரவின் பேரில் பிரதீபன் உடனடியாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா தெரிவித்தார்.

பொலிஸ் பணிக்கு 500 தமிழ் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்ட சமயமே பிரதீபனும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பயிற்சியை முடித்த அவருக்கு நாச்சிக்குடாவில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த சில வாரங்களாக அவர் கடமைக்குச் செல்லாமல் அச்சுவேலியிலேயே சுற்றிக் கொண்டிருந்தார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

இவர், ஈ.பி.டி.பி அமைப்பின் தீவிர ஆதரவாளர் என்றும் அச்சுவேலி ஈ.பி.டி.பி முகாமில் இவரை அடிக்கடி காண முடியும் என்றும் தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகப் பாதுகாப்பாளர் என்று சொல்லித்திரிந்தார் என்றும் ஊர் மக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

உதயனுக்கு தீங்கு விளைவிப்பதா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் ஸ்தாபகருமான ஈ.சரவணபவன் மீது தாக்குதல் நடத்துவதா பிரதீபனின் உண்மையான நோக்கம் என்பது தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம் நேற்று மாலை கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி கொழும்பில் உள்ள தேசிய ஒத்துழைப்பு மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த வடபகுதி மீனவர்களின் கலந்துரையாடலில் தயாரிக்கப்பட்ட கோரிக்கைகள் கொண்ட மகஜர் இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரில் தயாரிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வடபகுதி ஆட்புல கடற்பரப்பு எல்லையில் அத்துமீறி மீன் பிடித்தலும் இழுவை மடிகளையும் தங்கூசி வலைகளையும் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இவ்வாறு அத்துமீறி இழுவை மடிகளையும் தங்கூசி வலைகளையும் பாவித்து மீன்பிடிப் பதால் பாதிப்புகளை வடபகுதி மீனவர்கள் எதிர்கொண்டுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே நீண்டகாலப் போரினால் நலிந்து போன எமது மீனவர்களின் வாழ்வாதாரம் மோசமாகப் பாதிப்படையாமல் இருக்கவும் துரிதமாகப் அழிவுக்குள்ளாகி வரும் எமது கடல் வளம் பாதுகாக்கப் பட்டு எதிர்கால சந்ததியினர் அதனைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்) (க - 236)

## மகளிர் தின விழா

வடமராட்சி தெற்குப் பிரதேச செயலக மகளிர்தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.


### தேவை

சப்ளையர்கள், சமையலறை உதவியாளர்கள் தேவை.
தொடர்பு - லிங்கம் கிறீம் ஹவுஸ்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ். (1821) (37)

### றோயல் அக்கடமி
நாவலர் வீதி - நல்லூர்

### O/L DAY CLASSES

கணிதம் :- S.சிவரூபன்
விஞ்ஞானம்:- இரா. செல்வவடிவேல்
வரலாறு :- R.S சந்திரன்
தமிழ் :- பண்டிதர்
ஆங்கிலம் :- P. மதன்
வர்த்தகம் :- T.தமிழ் அழகன்
ஆரம்பம் :- 21.03.2011
திங்கள் 8 AM
(சி/576850) (35)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


## மரண அறிவித்தல்

### இராமு சின்னத்தம்பி சின்னத்துரை (RS)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மன்னார் உயிலங்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது இல.64/8, காண்டீபம், ஸ்ரேசன்றோட் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சின்னத்தம்பி சின்னத்துரை (RS) காலமாகிவிட்டார்.

அன்னார் செல்விபத்மாவதியின் (செல்விபத்மா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா சிவயோகம் ஆகியோரின் அன்பு மருமகனும், வனஜா (பௌசி) (முன்னாள் காணி பயன்பாட்டுத் திட்டமிடல் அதிகாரி, யாழ்.கச்சேரி, லண்டன்), கலாறூபன் (உரிமையாளர், றூபன் ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்றவர்களான பொவிக்காண்டீபன், கேதீஸ்வரன் மற்றும் வினோபாகரன் (அமெரிக்கா), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அன்ரனிதாஸ் (பட்டு) மற்றும் சகிலா, சாம்பவி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கதிர வேலு, இராமலிங்கம், பாக்கியம், செல்லமுத்து, இளைய ராஜா மற்றும் தவமணி, மீனாட்சி, செல்லமணி(ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற கபிலராஜா மற்றும் ரகுலராஜா, விமலராஜா (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், டரன் சஞ்சீவன், கரிஷன், திவ்யா, நேத்ரா (லண்டன்), டயன்சன், கீர்த்திகன், ராகவி (யாழ்ப்பாணம்), ஷாஷா, வைஷாலி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கலாறூபன் (றூபன்- மகன்) - 0776020622
வனஜா (பௌசி - லண்டன்) - 00442035249312
வினோபாகரன் (அமெரிக்கா) - 0017183585492
செல்வபத்மாவதி (மனைவி) - 0776848382

## மரண அறிவித்தல்

### தம்பு கணநாதன் (குணம்)



மணல்தறையைப் பிறப்பிடமாகவும், 34/6 மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குணம் என்று அழைக்கப்படும் தம்பு கணநாதன் (13.03. 2011) ஞாயிறு இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக்கணவரும், திருமதி நாகமணி - சிந்தாமணியின் அன்பு மருமகனும் த.பாக்கியநாதன், காலஞ்சென்ற த.ஸ்ரீபத்மநாதன் (கனடா) மற்றும் த.குருநாதன் (வவுனியா) திருமதி க.சொர்ணலட்சுமி, திருமதி த.அன்னலட்சுமி (அழகியல் உதவிக் கல்விப்பணிப்பாளர், தீவகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி வி.மைதிலி (உதவி நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்), க. ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), திருமதி தே.ஜானகி (ஆஸ்திரேலியா), திருமதி சி.வைதேகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகுத் தந்தையும், பேராசிரியர் கி.விசாகரூபன் (தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி ஸ்ரீ.அஜந்தா (லண்டன்), வை.தேவதாசன் (ஆஸ்திரேலியா), இ.சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் வி.சண்முகன், ஸ்ரீவேணுஜன், ஸ்ரீசரண்யா, தே.கரிஷ்மா, தே.தேஜா, சி.சாயகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/6, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (1270)

தகவல்:
க. ஸ்ரீஸ்கந்தராஜா (மகன் லண்டன்),
பேராசிரியர் கி. விசாகரூபன் (மருமகன்,) (35)

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் புவனேஸ்வரி (கண்ணக்கா)



கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேஸ்வரி 14.03.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சங்கீதபூஷணம் சண்முகப்பிரியா சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் மகேஸ்வரன், ஜெகதீஸ்வரி, புவனசுந்தரம், தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ராஜேஸ்வரி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் மற்றும் கௌரி, குமரகுருபரன், முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் புவனேஸ்வரி, சுமித்திரா, குமாரசிங்கம், இராஜேஸ்வரி, நந்தினி, இந்திராணி, தேவராசா, விஜயகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பொன்னம்மா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் நளாயினி, தையல்நாயகி ஆகியோரின் சகோதரியும் பாலமுரளி, பாலவேணி, பால நந்தினி, பாலரூபன், பாலவிஜி, செந்தூரன், மயூரன், அனுஷா, தனுஷா, ஆரூரன், சயந்தன், கஸ்தூரி, துசாந், சண்முகப்பிரியா காலஞ்சென்ற நிசாந் மற்றும் வாசுகி, வாகீசன், நர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரதிக்சன், புவிதன், டனு, அபிஷாளினி, பிரவீன், தர்மிஷா, மிதுளன், ஜோன்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி,
தொ.பே: 021 222 6168 (48,20,23)

தகவல்:


## எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா....?? !!!!



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா???ஆனால் என்ன வேலை செய்வது, என்று தெரியவில்லை??? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சம்பாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணனியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணனி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடை பெறும் நாள் : 19 திகதி(சனிக்கிழமை) காலை 10.00 மணி
இடம்: யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்க மண்டபம்
பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
வறுமைக்கோட்டிற்கு கீழ் பட்டவர்களுக்கு விசேட கட்டணம்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org